இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 25 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 17 – ஞாயிற்றுக்கிழமை 03 செப்டம்பர் 2023 – மதுரை 12+12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 25: Thiruvalluvar Year - 2054 - Aavani 17 - Sunday 03 September 2023 - Madurai 12+12 Pages ₹5.00

## தங்களது பதவிக் காலம்

# மிக வெற்றிகரமானதாக அமையட்டும்!

### சிங்கப்பூர் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தர்மன் சண்முகரத்னத்திற்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



**சென்னை, செப். 3-**

**சிங்கப்பூர் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தர்மன் சண்முகரத்னத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் “தங்களது பதவி காலம் மிக வெற்றிகரமானதாக அமையட்டும்” என்று கூறியுள்ளார்.**

சிங்கப்பூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அதிபர் தேர்தலில் பூர்வீகத் தமிழரான தர்மன் சண்முகரத்னம் வெற்றி பெற்றார். சிங்கப்பூரின் 8ஆவது அதிபரும், முதல் பெண் அதிபருமான ஹலீமா யாகூபின் பதவிக் காலம் நிறைவடைவதைத்தொடர்ந்து, அடுத்த அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

2011ஆம் ஆண்டுக்குப் பிறகு நடைபெற்ற இந்தத் தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் போட்டியிட்டார். 66 வயதாகும் அவருடன், இங்கோக் சாங் (75) மற்றும் டான் கின் லியான் (75) ஆகிய சீனாவைப் பூர்வீகமாகக் கொண்ட இருவரும் போட்டியிட்டனர்.

வாக்குப் பதிவு முடிந்ததும் வாக்குகளை எண்ணும் பணிகள் தொடங்கின.

தேர்தல்துறை வெளியிட்டுள்ள இறுதி முடிவுகளின்படி, மொத்தம் பதிவான 24.8 லட்சம் வாக்குகளில் தர்மன் சண்முகரத்னம் 17.46 லட்சம் (70.4 சதவீதம்) வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட இங்கோக் சாங்குக்கு 15.7 சதவீத வாக்குகளும், டான் கின் லியானுக்கு 13.88 சதவீத வாக்குகளும் கிடைத்தன.

அதையடுத்து, சிங்கப்பூரின் 9 ஆவது அதிபராக தர்மன் சண்முகரத்னம் பொறுப்பேற்கிறார்.

சிங்கப்பூரில் பிறந்த தமிழரான தர்மன் சண்முகரத்னம், ஒரு பொருளாதார நிபுணர் ஆவார். 2001ஆம் ஆண்டு முதல் அரசியலில் ஈடுபட்டு வரும் அவர், கடந்த 2019ஆம் ஆண்டு முதல் பிரதமர் லீ சியென் லூங்கின் அரசின் முதுநிலை அமைச்சராக இருந்து வந்தார்.

சிங்கப்பூர் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தர்மன் சண்முகரத்னம் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**சிங்கப்பூரின் ஒன்பதாவது அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தர்மன் சண்முகரத்னம் அவர்களுக்கு வாழ்த்துகள்!**

**உங்களது தமிழ் மரபும், அசர வைக்கும் தகுதிகளும் எங்களைப் பெருமை கொள்ளச் செய்வதோடு, சிங்கப்பூரின் பன்முகத்தன்மையையும் வெளிக்காட்டுகிறது.**

**தங்களது பதவிக்காலம் மிக வெற்றிகரமானதாக அமைந்திட விழைகிறேன்.**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

# நிலவில் 100 மீட்டர் பயணித்தது ‘சந்திரயான் 3’ ரோவர்!

## ‘இஸ்ரோ’ தகவல்!

பெங்களூரு, செப். 3 –

சந்திரயான்3 விண்கலத்தின் பிரக்யான் ரோவர் நிலவில் 100 மீட்டர் தூரம் பயணம் செய்துள்ளது.

நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்ய இஸ்ரோவின் சந்திரயான் 3 விண்கலம் கடந்த ஜூலை மாதம் 14ம் தேதி ஏவப்பட்டது.

சந்திரயான் 3 விண்கலத்தில் இருந்து பிரிந்த விக்ரம் லேண்டர் ஆகஸ்ட் 23ம் தேதி நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

விக்ரம் லேண்டரில் இருந்து வெளியேறிய பிரக்யான் ரோவர் நிலவை தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. நிலவில் சல்பர் உள்ளிட்ட கனிமங்கள் இருப்பதை கண்டறிந்து பிரக்யான் ரோவர் உறுதி செய்துள்ளது.

இந்த நிலையில் பிரக்யான் ரோவர் நிலவில் 100 மீட்டர் தூரம் பயணத்தை நிறைவு செய்துள்ளது. நிலவின் தென்துருவத்தில் பிரக்யான் ரோவர் 100 மீட்டர் தூரம் பயணித்துள்ளது.

மேலும் பயணத்தை தொடர்கிறது என்று இஸ்ரோ டுவீட் செய்துள்ளது.

நிலவில் பள்ளங்களை கடந்து ரோவர் பாதுகாப்பாக வளைந்து செல்லும் பாதையையும் இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

---



**தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா – தி.மு.க. பவள விழா ஆண்டு**

## கழக முப்பெரும் விழாவில் விருது பெறுவோர்

***

**தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா – தி.மு.க. பவளவிழா ஆண்டு, 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் நாள் வேலூரில் நடைபெறும் தி.மு.கழக முப்பெரும் விழாவினையொட்டி ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற விருதுகளான**



### பெரியார் விருது

மயிலாடுதுறை திரு. **கி.சத்தியசீலன்** அவர்கட்கும்



### அண்ணா விருது

மீஞ்சூர் திரு. **க.சுந்தரம்** அவர்கட்கும்



### கலைஞர் விருது

மாண்புமிகு **ஐ. பெரியசாமி** அவர்கட்கும்



### பாவேந்தர் விருது

தென்காசி திருமதி **மலிகா கதிரவன்** அவர்கட்கும்



### பேராசிரியர் விருது

பெங்களூர் திரு **ந.இராமசாமி** அவர்கட்கும்

வழங்கப்படும்.

நாள்: 02-09-2023.

**தலைமைக் கழகம்**

தி.மு.க.

---

## தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (4)!

## இன்று (செப்டம்பர் 3) வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று முன்பே அறிவிக்கப்பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, செப்டம்பர் 3 ஞாயிறு அன்று முரசொலி சிறப்பிதழ், “பத்திரிகையாளர்தம் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**— ஆசிரியர்.**

---

## வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது ஆதித்யா எல்1


*சென்னை, செப். 3 -*

*சூரியனில் உள்ள காந்தப்புயலை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா எல்1 என்ற புதிய விண்கலத்தை இஸ்ரோ வடிவமைத்துள்ளது. இந்தியா சார்பில் முதன்முதலில் சூரியனைக் கண்காணித்து ஆய்வுசெய்ய அனுப்பப்படும் முதல் விண்கலம் என்ற பெருமையையும் ஆதித்யா எல்1 விண்கலம் பெறுகிறது.*

*ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் பி.எஸ்.எல்.வி.சி. 57 ராக்கெட்டுக்கான எரிபொருள் நிரப்பும் பணி நிறைவடைந்தது.*

*தொடர்ந்து ராக்கெட் மற்றும் செயற்கைக்கோள் களின் செயல்பாடுகளை விஞ்ஞானிகள் தீவிரமாக கண்காணித்து வந்தனர். இந்நிலையில், பி.எஸ்.எல்.வி. சி57 ராக்கெட் திட்டமிட்டப்படி நேற்று பகல் 11.50 மணிக்கு விண்ணில் பாய்ந்தது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.*

---



வீரர் – வீராங்கனைகள் சர்வதேச அளவில் சாதனை படைத்திட வேண்டும்! "முதலமைச்சர் கோப்பை" விளையாட்டுப் போட்டிகளில்

# மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பிரிவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தியது இதுவே முதல்முறை!

## தேசிய அளவில் பதக்கங்கள் பெறும் விளையாட்டு வீரர் - வீராங்கனைகளுக்கு ஊக்கத்தொகை அறிவித்த முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் விழாவில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை, செப்.3–

**தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் மாற்றுத் திறனாளி வீரர் – வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கிட ஆணைபிறப்பித்த முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் மாற்றுத் திறனாளிகளுக்கென தனிப்பிரிவில் விளையாட்டுப் போட்டியை நடத்தியது இதுவே முதல்முறை என்று குறிப்பிட்டார்.**

தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கிட ஆணை பிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அனைத்து மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகள் மற்றும் அனைத்து மாற்றுத்திறனாளி விளையாட்டு நலச் சங்கங்கள் சார்பில் நேற்று முன்தினம் (01.09.2023) சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நன்றி அறிவிப்பு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இதில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு :-

கழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நடைபெறும் இந்த விழாவில், நான் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். அமைச்சராகப் பொறுப்பேற்று கிட்டத்தட்ட ஒன்பது மாதங்கள் ஆகின்றன.

பல்வேறு நேஷனல் போட்டிகள் நடத்தி விட்டோம், மாநில அளவிலான போட்டிகள் நடத்தி விட்டோம், இன்னும் சொல்லப்போனால், இன்டர்நேஷனல் அளவிலான போட்டிகள் எல்லாம் நடத்தி விட்டோம். ஆனால் யாரும் இந்த அரசுக்குப் பாராட்டு விழா நடத்தவில்லை. முதல் முறையாக விளையாட்டு வீரர்கள் இந்த அரசுக்கு பாராட்டு விழா நடத்துகிறீர்கள் என்றால் மாற்றுத் திறனாளிகளாகிய நீங்கள்தான் காரணம். அதற்கும் இந்த நேரத்திலே இன்னும் நான் கூடுதல் மகிழ்ச்சி அடைகிறேன்.

இங்கு இருக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் நான் தனிப்பட்ட முறையில் சந்தித்து இருக்கிறேன். உங்களுடன் நான் உரையாடி இருக்கிறேன். உங்களுடைய சாதனைகளைக் கேட்டு நான் பிரமித்துப் போய் இருக்கிறேன். அதனால் தான், இன்னும் மகிழ்ச்சியாக நான் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கிறேன்.



தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கிட ஆணை பிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அனைத்து மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகள் மற்றும் அனைத்து மாற்றுத்திறனாளி விளையாட்டு நலச் சங்கங்கள் சார்பில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நேற்று முன்தினம் (01.09.2023) சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நன்றி அறிவிப்பு விழா நடைபெற்றது. இந்த விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, கேல்ரத்னா விருது பெற்ற பத்மஸ்ரீ தங்கவேலு மாரியப்பன், தயான் சந்து விருது பெற்ற ரஞ்சித் குமார், தமிழ்நாடு பாரா ஒலிம்பிக் தலைவர் நாகராஜ், செயலாளர் கிருபாகர ராஜா, பொருளாளர் விஜய் சாரதி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த அரசாணை சாதாரண அரசாணை கிடையாது. இங்கே, பேசியவர்கள் எல்லாம் மிக அதிக அளவில் என்னைப் பாராட்டியிருக்கிறார்கள். அந்தப் பாராட்டுக்கள் அத்தனையும் உங்களுக்கு உரித்தானதாக ஆக்கி கொள்கின்றேன். இந்த அரசாணை இங்கு கூறியது போல ஒரு சாதாரண அரசாணை கிடையாது. மாற்றுத்திறானாளிகள் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுடைய வாழ்வையே மாற்றுகின்ற ஒரு அரசாணை.

### விளையாட்டுத் துறையில் முக்கிய மைல்கல்!

இதன் மூலம் தேசிய அளவிலான மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப் போட்டிகளில் சீனியர் பிரிவில் தங்கப் பதக்கம் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 5 இலட்சம், வெள்ளிப் பதக்கம் வெல்வோருக்கு ரூபாய் 3 இலட்சம், வெண்கலப் பதக்கம் பெறுவோருக்கு ரூபாய் 2 லட்சம் உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படுகின்றது.

அதேபோல் ஜூனியர் பிரிவில் தங்கம், மாற்றுத் திறனாளிகள் வீரர், வீராங்கனைகளுக்கு ரூபாய் 3 இலட்சம், வெள்ளிப் பதக்கம் வெல்வோருக்கு ரூபாய் 2 இலட்சம், வெண்கலப் பதக்கம் பெற்றால், ரூபாய் ஒரு லட்சத்து 50 ஆயிரம் வழங்கப்பட உள்ளது. இந்தத் திட்டம் நம்முடைய விளையாட்டுத் துறை வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலனில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அதனால்தான் மாற்றுத்திறனாளி என்ற பெயரைச் சூட்டி ஊக்கத்தொகையும், தன்னம்பிக்கையும் உங்களுக்குக் கொடுத்தார். இதில் இன்னொரு பெருமை என்னவென்றால், இந்த அரசாணை இந்தத் திட்டத்தைக் கலைஞருடைய நூற்றாண்டில் நாம் தொடங்க இருக்கின்றோம். அது கலைஞருக்கும் பெருமையாக இருக்கும்.

இன்றைக்கு கலைஞருடைய வழியிலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான அத்தனை திட்டங்களையும் பார்த்து பார்த்து வழங்கிக் கொண்டு வருகிறார்கள்.

### மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள்!

முக்கியமாகச் சொல்ல வேண்டுமென்றால் மாற்றுத் திறனாளிகளுக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் என்ற நிலையை ஏற்படுத்திக் கொடுத்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதேபோல் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மிகவும் கோலாகலமாக நடத்தி முடித்தோம். அதில் மாற்றுத்திறனாளிகளுக்கு எனத் தனிப் பிரிவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது இதுவே முதல் முறை.

தமிழ்நாடு முழுவதிலிருந்து ஆயிரக் கணக்கான மாற்றுத்திறனாளி வீரர்கள், வீராங்கனைகள் அதில் பங்கேற்று எங்களுக்கெல்லாம் பெருமை சேர்த்தீர்கள்.

'தமிழ்நாடு சேம்பியன்ஸ்' என்ற அறக்கட்டளை என்று தொடங்கினோம். முதன் முதலில் அதன் சார்பில், ஜெர்மனியில் நடைபெற்ற `வேர்ல்ட் டிராப்ட்ஸ்' கேமில் பங்கேற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி வீரர்கள் பாலசுப்பிரமணியம், மனோஜ், கணேசன், செல்வராஜ் மற்றும் வீராங்கனைகள் வெண்ணிலா மற்றும் இன்பதமிழி ஆகியோருக்கு தலா 2 இலட்சத்து 49 ரூபாய் நிதி உதவியாக வழங்கினோம். அவர்கள் அனைவரும் 12 பதக்கங்களை வென்று தமிழ்நாட்டிற்கும் நமது இந்திய ஒன்றியத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

இந்த நேரத்திலே அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை இந்த நிகழ்ச்சியின் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். இந்த நிகழ்ச்சிக்கு என்னுடைய வாழ்த்துக்கள். அனைவரும் சேர்ந்து இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளீர்கள்.

அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுகள் மற்றும் கைதட்டுகள். உடல் அளவில் மட்டுமின்றி, மனதளவிலும் மாற்றுத் திறனாளிகளாக உள்ளவர்களுக்கும் விளையாட்டுப் போட்டிகளில் சாதிக்கச் செய்வதற்கான பணிகளையும் நாங்கள் தொடர்ந்து செய்து வருகின்றோம்.

### மாற்றுத் திறனாளிகளின் ஆசையை நிறைவேற்றித் தரும் அரசு!

இந்திய ஒன்றியத்தில் சிறுவர்கள் பாரிசில் சாம்பியன் போட்டிகளில் 17 பேர் பதக்கம் வென்றனர். அவர்களையும் சந்தித்து ஊக்கமளித்துள்ளோம். அமைச்சராக இருந்து மாற்றுதிறனாளிகளிடம் இருந்து வரும் வீரர், வீராங்கனைகளின் கோரிக்கைகளுக்கு உடனடியாகச் செவி சாய்த்து முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தீர்வுகளை வழங்கி வருகின்றோம்.

அந்த வகையில்தான் தேசிய அளவிலான போட்டிகளில் வெல்லும் மாற்றுத்திறனாளிகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்று நிறைவேற்றித் தந்துள்ளார்கள். மாற்றுத்திறனாளிகள் கோரிக்கை மட்டுமல்ல, அவர்களுடைய ஆசைகளையும் நிறைவேற்றித் தருகின்ற அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு திகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் பட்ஜெட்டில், இந்தியாவிலேயே முதல்முறையாக ஆர்.எஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமியும் அரீனா அமைப்பும் என்று அறிவித்திருந்தோம்.

முதல் கட்டமாகச் சென்னையில் இதே வளாகத்திற்குள் ஜவஹர்லால் நேரு ஸ்டேடியத்திற்குள் வளாகத்திற்கு சென்னையில் அதற்கான பணிகளை விரைவில் துவங்க உள்ளோம் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல் சேப்பாக்கம்திருவல்லிக்கேணி தொகுதியில் அமைந்துள்ள மெரினா கடற்கரையில் மாற்றுத் திறனாளிகள் கடல் அலையை ரசிக்க, ஏதுவான பாதையினை அமைத்துக் கொடுத்தோம்.

சட்டமன்றத்தில் பேசிய போது கூட என்னுடைய முதல் உரை கன்னிப் பேச்சு மாற்றுத்திறனாளி ஆணையத்திற்குத் தனிப் பொறுப்புடன் கூடிய நிலையிலான ஐ.ஏ.எஸ் ஆணையர் வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தோம்.

**மா**ற்றுத் திறனாளிகளுக்கு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம் என்ற நிலையை ஏற்படுத்திக் கொடுத்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். அதேபோல் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை மிகவும் கோலாகலமாக நடத்தி முடித்தோம். அதில் மாற்றுத்திறனாளிகளுக்கு எனத் தனிப் பிரிவில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவது இதுவே முதல் முறை.

அதன்படி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணைப் பிறப்பித்துத் தனிப் பொறுப்புக் கொண்ட ஆணையரை நியமித்துள்ளார்கள்.

மாற்றுத் திறனாளியாக இருந்து விளையாட்டுப் போட்டிகளில் சாதித்துப் பின்னர் ஓய்வு பெற்றவர்களுக்கும் உதவி வருகின்றது. கடந்த மே மாதம் கூட பெரம்பூரைச் சேர்ந்த பார்வைத் திறன் சவால் கொண்ட மாற்றுத் திறனாளி பாப்பாத்தி அவர்கள் என்னைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து வேலை வாய்ப்புக் கோரிக்கை வைத்தார்.

தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் கோப்பைகள் வென்றுள்ளவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான வேலை வாய்ப்பினை நம்முடைய அரசு ஏற்படுத்திக் கொடுத்தது. இங்கே, நீங்களும் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். உங்களின் கோரிக்கை அத்தனையையும் முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றி கொடுப்பார் என்று நான் நம்பிக்கை கொடுக்கின்றேன்.

பொதுவாக விளையாட்டு என்றாலே, இன்றைக்கு எல்லோருடைய வீடுகளிலும் அதற்குச் சம்மதம் தெரிவிப்பதில்லை. `முதலில் படி, விளையாட்டு அப்பறம் பார்த்துக்கலாம்' என்று சொல்வார்கள். குறிப்பாக, மாற்றுத்திறனாளிகள் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவது சாதாரண விஷயம் அல்ல. அதுவே மிகப்பெரிய ஒரு சாதனை. இதற்காக நீங்கள் எவ்வளவு கடுமையான பயிற்சிகளை எடுப்பீர்கள் என்பதை நாங்கள் அறிவோம்.

தீவிரமான பயிற்சிகள் இல்லாமல், தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெறுவது என்பது சாத்தியமல்ல. எனவே தான் அப்படி வெற்றி பெறுகின்ற மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிடும் வகையில் தான் இந்த உயரிய ஊக்கத்தொகை வழங்கப்பட உள்ளது.

### தமிழ்நாடு சாம்பியன்ஷிப் மூலம் ஊக்கத்தொகை!

இதற்காக நம்முடைய மாற்றுத் திறனாளி வீரர்கள், வீராங்கனைகளுடன் இணைந்து முதலமைச்சர் அவர்களுக்கு நானும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். நீங்கள் அத்தனை பேரும் எங்களுக்கு முன்மாதிரியாக (இன்ஸ்பிரேஷன்) இருப்பவர்கள்.

அதேபோல் 21வது தேசிய தடகள சாம்பியன்ஷிப் பூனேவில் நடந்தது. இங்கே கோரிக்கை வைக்கப்பட்டது. நான் இப்போது இங்கே வாக்குறுதி கொடுக்கின்றேன்.

இந்த வருடம் வென்றவர்களுக்கும் எங்களுடைய தமிழ்நாடு சாம்பியன்ஷிப் பவுன்டேஷன் தொடங்கப்பட்டதின் நோக்கமே இதற்காகத்தான். இந்த வருடம் வென்றவர்களுக்கும் கிட்டத்தட்ட 29 பதக்கங்களை வென்று உள்ளீர்கள். இந்த வருடம் வென்றவர்களுக்கும் அந்த ஊக்கத் தொகை வழங்கப்படும். விரைவில் வழங்கப்படும். தமிழ்நாடு சாம்பியன் ஷிப் பவுண்டேஷன் மூலமாக வழங்கப்படும்.

நீங்கள் எல்லோரும் சேர்ந்து எனக்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு, நம்முடைய துறைக்குப் பாராட்டு விழா எடுத்துள்ளீர்கள். விரைவில் நீங்கள் அத்தனை பேரும் சாதித்து, இந்த அரசு உங்களுக்கும் இதேபோல ஒரு மிகப்பெரிய பாராட்டு விழாவை நடத்தும். எனவே, இந்த மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகள் இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு சர்வதேச போட்டிகள் போன்றவைகளுக்கு முன்னேறிச் சென்று சாதனை படைக்க என்னுடைய வாழ்த்துக்களை மீண்டும் நான் தெரிவித்துக் கொண்டு விடை பெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

மும்பையில் என்னைச் சந்தித்த

## மாணவியின் இரக்கப் பண்பு கண்டு வியந்தேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

சென்னை, செப்.3–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மும்பையில், என்னைச் சந்திக்க விரும்பிய அறிவார்ந்த, இரக்கப் பண்பு கொண்ட பிரணுஷ்கா என்ற மாணவியின் விருப்பத்தை நான் நிறைவேற்றினேன்.**

**மணிப்பூரில் நடந்த வன்முறை இவரைப் போன்ற ஒரு பள்ளி மாணவியைக்கூட எவ்வாறு பாதித்துள்ளது என்பதைப் பார்க்கும்போது எனக்கு வேதனையாக இருக்கிறது. அதிகாரத்தில் இருப்பவர்கள் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை நிலைநிறுத்த உழைக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு தெளிவான நினைவூட்டலாகும்.**

**ஐ.ஏ.எஸ். அதிகாரியாக வேண்டும் என்ற பிரணுஷ்காவின் கனவு நனவாக வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

---



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக மக்கள் நல்லுறவு மையம் கூட்டரங்கில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தினை 15.9.23 அன்று காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளதால், முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.எம்.சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

---

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !



# “கவுண்ட் டவுன் ஆரம்பமாகி விட்டது!”

**“கவுண்ட் டவுன் ஆரம்பமாகி விட்டது”**

“Count down Started”

ஆம்; பொய்யை மூலதனமாக்கி, பொய்யிலேயே வாழ்ந்த பொய்யர் ஆட்சியின் முடிவு காலத்துக்கு…

**“கவுண்ட் டவுன் ஸ்டார்ட்டட்”.**

ஜனநாயக நெறிமுறைகள் அத்தனையையும் அழித்தொழித்திட்ட சர்வாதிகாரக் காட்டாட்சியின் ஆட்டத்தை அடக்கிட,

**“கவுண்ட் டவுன் ஸ்டார்ட்டட்”.**

மதச்சார்பற்ற நாட்டில் மதவெறிகளை மறைமுகமாகத் தூண்டி, நாட்டையே கலவர பூமியாக்கிடும் மதவெறியர்களுக்கு தூபம் போட்ட ஒரு மதவெறி ஆட்சியின் அந்திமத்துக்கு,

**“கவுண்ட் டவுன் ஸ்டார்ட்டட்”.**




“அச்சே தின்” என உயர்த்திய இரு கைகள் 9 ஆண்டுகள் கடந்த பின் அதே “அச்சே தின்” என்று அதே திக்கில் உயர்கிறதே தவிர, அச்சே தின்னை மக்கள் காணவில்லை; ‘ஜும்லா’ (வாயளவில் வடை சுட்ட) வாக்குறுதிகள்தான் அவை என்று இன்று கூச்ச நாச்சம் சிறிதுமின்றி கூறிடும் போலிகள் ஆட்சிக்கு,

**“கவுண்ட் டவுன் ஸ்டார்ட்டட்”.**

மொத்தமாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு ஈவு இரக்கமற்ற கொடுங்கோலர்களின் தான் தோன்றி தர்பாரின் இறுதிச் சடங்குக்கு,

**“கவுண்ட் டவுன் ஸ்டார்ட்டட்”.**

**மும்பையில் நடைபெற்ற INDIA (இந்தியா) கூட்டணியின் கூட்ட முடிவுகளுக்குப் பிறகு கழகத் தலைவர் தளபதி ஆற்றிய உரையில் “கவுண்ட் டவுன் ஆரம்பமாகி விட்டது” - என்று உறுதியுடன் உரைத்த சொற்களை சுலபமாகப் புறந்தள்ளி ஆளும் பா.ஜ.க.வால் கடந்து சென்று விட முடியாது!**

பா.ஜ.க. எனும், இந்த ஜனநாயக விரோத, மதவெறி கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராக எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்; நம்மிடையே உள்ள மாச்சர்யங்களைத் துறந்து, யார் இந்தியாவை ஆள வேண்டும் என்பதை விட, யார் இந்தியாவை ஆளக் கூடாது என்ற முடிவோடு ஒன்றிணைவோம்! அப்போதுதான் இந்திய ஜனநாயகம், மதச்சார்பின்மை போன்ற இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் காப்பற்றப்படும்; ஏன்? இந்தியாவே சிதறுண்டு போகாமல் இருக்க வேண்டுமானால், “யார் ஆளக் கூடாது” என்ற ஒற்றை இலக்கில் ஒன்றாவோம்; என்று கழகத் தலைவர் தளபதி பல நேரங்களில் வலியுறுத்தி வந்தார்!

தலைவர் தளபதி விதைத்த விதை முளைத்து வளர்ந்தால், இந்தியாவுக்கு விடிவு காலம் ஏற்படும் என்று எண்ணியோர் பலர்!

**விதை முளைத்து எழாது மண்ணிலேயே மக்கிவிடும் என இறுமாந்திருந்தோர், ஏளனப் பார்வை வீசியோர் ஏராளம்! அட்டதிக்கு பாலகர் போல எதிரும் புதிருமாக இருக்கும் அணிகள் ஒன்றிணையுமா? மம்தா பானர்ஜிக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் ஒத்து வருமா? காங்கிரஸ் அங்கு தலை எடுக்க மம்தா ஒருக்காலும் அனுமதிக்க மாட்டார் என்று எண்ணி இறுமாந்திருந்தோர் தலையிலே இடி இறங்கி விட்டது!**

ஆம்; கவுண்ட் டவுன் ஸ்டார்ட்டட்!

கேரளத்தில் கம்யூனிஸ்ட்டுகள் காங்கிரசுக்கு இடம் கொடுப்பார்களா? இ.காங், கம்யூனிஸ்ட்டுகளோடு ஒத்துப் போக வாய்ப்பே இல்லை; இந்த நிலையில் INDIA (இந்தியா) கூட்டணி கரை சேருமா? என்று கருதியவர்களை, மும்பை கூட்டம் மூச்சுத் திணறவைத்து விட்டது!

ஆம்; கழகத் தலைவர் தளபதி கூறிய, “கவுண்ட் டவுன் ஆரம்பமாகி விட்டது!”

மகாராஷ்டிராவில் தேசியவாத காங்கிரஸ், சிவசேனா, காங்கிரஸ் என்ற மூன்று பெரும் சக்திகள் இணையும் என்பது கனவிலே கூட நடக்காத காரியம்! என்ற அரசியல் நோக்கர்கள், ஆய்வாளர்கள் அத்தனை பேரின் கணக்குகளையும் தவிடுபொடியாக்கி, மூன்று கட்சிகளின் தலைவர்களும் ஓரணியில், அதாவது பாசிச, பி.ஜே.பி. அரசு அகற்றப்பட வேண்டும் என்ற ஒற்றை நோக்கில் ஒன்றாகி நிற்கின்றனர்.

“உத்திரப்பிரதேசத்தில் அகிலேசும், காங்கிரசும் ஒரே அணியில் அணி வகுப்பார்களா? அணி வகுக்க முடியுமா?” என எண்ணியிருந்தோரின் கனவுகள் எல்லாம், ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் நடத்திடும் இந்த ஒருங்கிணைப்புக் கூட்டங்களால் தவிடுபொடியாகி விட்டன.

‘கவுண்ட் டவுன் ஆரம்பமாகிவிட்டது’ என, இதனை எல்லாம் கண்டுதான் கழகத் தலைவர் தளபதி ஸ்டாலின் கூறினார்!

தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற பெயரில் பா.ஜ.க. தலைமையில்



## சிலந்தி

இயங்கும் அரசு ஆடிய ஆட்டம் முடிவுக்கு வர,

**“கவுண்ட் டவுன் ஸ்டார்ட்டட்”.**

‘இந்தியா’ அணியின் ஒருமித்த குரல், ஆளும் அதிகார வர்க்கத்தின் அடி வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்துவிட்டது! அதன் அறிகுறிகள் வெளிவரத் தொடங்கிவிட்டன! இறக்கமும், இரக்கமுமின்றி ஏறிக்கொண்டிருந்த சமையல் எரிவாயு விலையில் திடீரென சிறிய இறக்கம்!




**இந்த அறிவிப்பால் மக்கள் ஏமாறவில்லை! ஏறிக்கொண்டே இருக்கும் பெட்ரோல் - டீசல் விலை தேர்தல் நெருங்கும் நேரங்களில், சிறிது காலம் ஒரே புள்ளியில் நிற்பதும், தேர்தல் முடிந்த பின் ஏறுவதையும் கடந்த பத்தாண்டு காலமாக பலமுறை பார்த்தவர்கள்; எத்தர்களை நம்புவார்களா?**

**இவர்களது ஒவ்வொரு நடவடிக்கையையும் மக்கள் சந்தேகிக்கத் தொடங்கிவிட்டனர் ! ஏறத்தாழ கடந்த பத்தாண்டு காலமாக நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக ஏறிக்கொண்டிருந்த சமையல் எரிவாயு, தேர்தல் நெருக்கத்தில் திடீரென ஒரு சிறிது குறைந்ததால் மக்கள் சந்தோசப்படவில்லை. சந்தேகிக்கத் தொடங்கினர்.**

**எல்லாமே “தில்லுமுல்லு - தில்லு முல்லு… உள்ளமெல்லாம் கல்லு முல்லு… ஆயிரம் நாடகம், ஆயிரம் வேஷங்கள்…” என்பதைத் தெளிவாக உணர்ந்தார்கள்!**

**இந்த திடீர் விலைக் குறைப்பு, நாடாளுமன்றத் தேர்தலை முன் கூட்டி நடத்திட எண்ணி, அதற்கான திட்டமிட்ட வேலையா? - என்று பொதுவான பேச்சு எழுந்தது!**

இந்தச் சூழலில் மும்பையில் சக்திமிகு எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து நடத்திய கூட்டம்; பா.ஜ.க.வை கதிகலங்க வைத்துள்ளது! இந்த நிலையில் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலைச் சந்தித்தால் தோல்விதான் முடிவு என்பது உறுதியான நிலையில், வந்த அறிவிப்பே; ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ - என்பது! இதனைச் செயல்படுத்த முன்னாள் குடியரசுத் தலைவர் தலைமையில் குழு! இடையிலே நாடாளுமன்ற கூட்ட திடீர் அறிவிப்பு!

இந்தச் செய்திகள் எல்லாம் ஆளும் பி.ஜே.பி. அரசு தோல்வி பயத்தில் அரண்டுபோய் கிடப்பதை தெளிவாகக் காட்டுகிறது!

2024 நாடாளுமன்றத் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படுமா? முன் கூட்டியே வருமா? அல்லது “ஒரே நாடு ஒரே தேர்தல்” குறித்து குழு முடிவெடுக்கும் வரை காலதாமதப்படுத்திடும் நோக்கோடு, குடியரசுத் தலைவர் ஆட்சி என்ற போர்வையில், அடுத்த தேர்தல் அறிவிப்பு வரும் வரை ‘காபந்து’ சர்க்காராக இந்த ஆட்சியைத் தொடந்திட சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுமா? இப்படிப் பல சந்தேகங்கள் எழுப்புகின்றன, திடீர் நாடாளுமன்றக் கூட்ட அறிவிப்பு பின்னணி!

தேர்தல் உரிய நேரத்தில் நடந்தாலும், முன்னே நடந்தாலும், பின்னே நடந்தாலும், பா.ஜ.க.வின் இறுதி ஆட்சி, அதாவது அதிகார ஆட்டம் முடிவை நெருங்கிவிட்டது. கழகத் தலைவர் தளபதி கூறியபடி,

**“கவுண்ட் டவுன் ஆரம்பமாகிவிட்டது.”**

●

### தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள்!

# மாற்றுத்திறனாளிகள் எங்களுக்கு முன்மாதிரிகள்

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு

சென்னை, செப்.3-

'கடின உழைப்புக்கு மாற்றுத் திறனாளிகள்தான் எங்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறார்கள்' என்று விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார். தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கும் உயரிய ஊக்கத் தொகை வழங்க தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதற்காக அவருக்கு நன்றி தெரிவிக்கும் விழா பல்வேறு மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுச் சங்கங்கள் சார்பில் நேற்று நடைபெற்றது. சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நடந்த இந்த விழாவில் பங்கேற்ற இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: நான் அமைச்சராக பொறுப்பேற்று 9 மாதங்கள் ஆகின்றன.

இதுவரை மாநில, தேசிய, சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நிறைய நடத்திவிட்டோம். ஆனால், இதுவரை யாரும் பாராட்டியதில்லை. நீங்கள்தான் முதல்முறையாக பாராட்டு விழா எடுத்துள்ளீர்கள். உங்கள் அனைவருக்கும் நன்றி.

இந்த அரசாணை சாதாரணமானதல்ல. மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளின் வாழ்க்கையை மாற்றக் கூடியது. தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தங்கம் வென்றால் ரூ.5 லட்சம், வெள்ளி வென்றால் ரூ.3 லட்சம், வெண்கலம் வென்றால் ரூ.2 லட்சம் வழங்கப்படும். இளையோர் பிரிவுகளில் தங்கம் வென்றால் ரூ.3 லட்சம், வெள்ளி வென்றால் ரூ.2 லட்சம், வெண்கலம் வென்றால் ரூ.1.5 லட்சம் அளிக்கப்படும்.



இந்த அரசாணை மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு வாழ்க்கையில் முக்கிய மைல் கல். அதுவும் மாற்றுத்திறனாளிகளுக்கான மேம்பாட்டுக்காக பாடுபட்ட, மாற்றுத்திறனாளிகள் என்று பெயர் சூட்டிய கலைஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடும் காலத்தில் அமலுக்கு வந்திருப்பது இன்னும் சிறப்பு. இன்றைய முதல்வரும் மாற்றுத்திறனாளிகள் நலனில் அக்கறை கொண்டவர். அவர்களின் கோரிக்கைகளுக்கு உடனடியாக செவி சாய்க்கும் முதல்வர் நமக்கு கிடைத்துள்ளார். அது மட்டுமல்ல அவர்களின் விருப்பங்களையும் நிறைவேற்றும் திராவிட மாடல் அரசுதான் இது. மாற்றுத்திறனாளி பாப்பாத்தி வேலை கேட்டு தந்த மனுவின் அடிப்படையில் அவருக்கு ஒப்பந்தப் பணி அளிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச பாரா போட்டிகளில் சாதித்த பாலசுப்ரமணியன், மனோஜ், கணேசன், வெண்ணிலா, இன்பத்தமிழ் ஆகியோருக்கு நிதி உதவி அளிக்கப்பட்டது.

அப்போது அவர்கள் பதக்கங்களுடன் மீண்டும் உங்களை சந்திப்போம் என்று சொன்னார்கள். அதேபோல் சாதித்து காட்டினார்கள். அதுபோல் நீங்களும் சாதிக்க வேண்டும். 6 பாரா ஸ்போர்ட்ஸ் அகடமி தமிழகத்தில் அமைக்கப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. அதில் முதல் அகடமி சென்னைநேரு விளையாட்டு அரங்க வளாகத்தில் விரைவில் தொடங்கப்படும். சாதாரண நிலையில் இருக்கும் விளையாட்டு வீரர்களே கடுமையாக பயிற்சி செய்ய வேண்டி உள்ள நிலையில், மாற்றுத்திறனாளிகள் பயிற்சி பெறுவது என்பது சாதாரணமானதல்ல.

கடின உழைப்புக்கு நீங்கள்தான் எங்களுக்கு முன்மாதிரியாக இருக்கிறீர்கள். இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

நிகழ்ச்சியில் தமிழ் நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ் நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டு பல்கலை. துணை வேந்தர் எம். சுந்தர், தமிழ் நாடு பாராலிம்பிக்ஸ் விளையாட்டு சங்க நிர்வாகிகள் நாகராஜ், கிருபாகரராஜா, விஜயசாரதி, பாராலிம்பிக் வீரர்கள் தங்கவேலு மாரியப்பன், ரஞ்சித்குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

# ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்திற்கு ஆட்சியில் எதிர்ப்பு.. இப்போ ஆதரவு...

## பல்டி அடிக்கும் எடப்பாடி பழனிசாமி

சென்னை, செப். 3-

ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்திற்கு அ.தி.மு.க. ஆதரவு அளிப்பதாக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். ஆனால் ஆளும் கட்சியாக இருந்தபோது இந்த திட்டத்தை எதிர்த்தது. தற்போது எதிர்க்கட்சியாக இருப்பதால் ஆதரவு தெரிவித்து தனது இரட்டை நிலைப்பாட்டை அ.தி.மு.க. எடுத்துள்ளது தெரியவந்துள்ளது. நாட்டில் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒன்றிய அரசு சிறப்புக்குழு ஒன்றை அமைத்து உத்தரவிட்டுள்ளது. நாடாளுமன்ற மக்களவை தேர்தல், மாநிலங்களுக்கான சட்டப்பேரவை தேர்தலை ஒரே நேரத்தில் நடத்த சாத்தியம் உள்ளதா என்பது குறித்து சிறப்புக்குழு ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்திற்கு அ.தி.மு.க. ஆதரவு அளிப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று அறிவித்துள்ளார். ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தினால் கால விரயம், செலவு தவிர்க்கப்படும் என்று அவர் கூறியுள்ளார். 2018ம் ஆண்டு இதேபோன்று ஒன்றிய அரசு, ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்துக்கும், சட்டமன்றத்துக்கும் தேர்தல் நடத்துவது குறித்து ஆலோசனை செய்து வருவதாக கூறப்பட்டது. அப்போது, முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமி அந்த திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. இதனால் ஆட்சியில் இருக்கும்போது ஒரு நிலைப்பாடு, ஆட்சியில் இல்லாதபோது வேறு நிலைப்பாடு என்று தனது இரட்டை நிலையை அ.தி.மு.க. வெளிப்படுத்தியுள்ளது. கொள்கையில் உறுதியாக நில்லாமல் நேரத்திற்கு ஏற்றார்போல நிறம் மாறுவதுபோல அ.தி.மு.க.வின் செயல்பாடு இருப்பதாக சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழா! விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் - நெல்லை கிழக்கு மாவட்டம்

# மேலச் செல்வம் கொழுமடையில் - மாபெரும் கிரிக்கெட் போட்டி!

## ஆ.பிரபாகரன் துவக்கி வைக்கிறார்! இரா.ஆவுடையப்பன் பரிசுகள் வழங்குகிறார்!

நெல்லை.செப்.3-

நெல்லை கிழக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் போட்டி மேலச்செவல் கொழுமடையில் இன்றும் (செப்.3) மற்றும் செப்.10, 17ஆகிய நாட்களிலும் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் தவசி மணிகண்டன் தலைமையில் ஒன்றிய செயலாளர்கள் முத்துப்பாண்டி என்ற பிரபு, முத்துக்கிருஷ்ணன், பேரூர் செயலாளர்கள் மணிகண்டன் வானுமாமலை ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.

மாவட்ட விளையாட்டு அணி துணை அமைப்பாளர் சுதர்சனன் வரவேற்புரை ஆற்றுகிறார். போட்டியை தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் துவக்கி வைக்கிறார்.

இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுத் தொகை மற்றும் வெற்றிக் கோப்பையை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்வில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், மாவட்ட துணை செயலாளர் நம்பி, மாநில தொண்டர் அணி துணை செயலாளர்ஆவின் ஆறுமுகம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட அவை தலைவர் கிரகாம்பெல், மாவட்ட பொருளாளர் ஜார்ஜ் கோசல், மாவட்ட துணைச் செயலாளர்கள் மாஞ்சோலை மைக்கேல், தமயந்தி, அம்பை நகரச் செயலாளர் பிரபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் கண்ணன், கணேசன் உள்பட விளையாட்டு மேம்பாட்டு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாடசாமி நன்றி கூறுகிறார்.

### நெல்லை மாநகரக் கழக அலுவலகத்தில் நிகழ்ச்சி!

# நெல்லை மாவட்டத்தில் - கழகம் வளர்த்த முன்னோடிகள் திருவுருவப்படம் திறப்பு!

## டி.பி.எம்.மைதீன்கான் - ஆ.பிரபாகரன் தலைமை!

## ஹெலன் டேவிட்சன்-முன்னணியினர் பங்கேற்பு!

நெல்லை.செப்.3-

நெல்லை மாநகர கழகம் சார்பில் மாநகர அலுவலகத்தில் நெல்லை மாவட்டத்தில் கழகம் தோன்றிய நாள் முதல் இயக்கத்தை வளர்ப்பதற்காக அரும்பாடுபட்ட தியாகச் சுடர்களை நினைவு போற்றுகின்ற வகையில் மறைந்த கழக முன்னோடிகள் 12 பேர்களின் திருவுருவப்படம் திறப்பு விழா மற்றும் மரியாதை செய்யும் நிகழ்வு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், நெல்லை கிழக்கு மாவட்ட தலைமை செயற்குழு உறுப்பினர் ஆ.பிரபாகரன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

பாளை தொகுதி பார்வையாளர் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், நெல்லை தொகுதி பார்வையாளர் மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் ஜெயக்குமார், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீதாராமன், பகுதி செயலாளர் சுப்பிர மணியன்(தச்சை) அண்டன் செல்லத்துரை (பாளை) மாநகர துணை செயலாளர் அப்துல்கையூம், மாநகர பொருளாளர் அண்ணாதுரை, மாவட்ட துணை செயலாளர்கள் எஸ்.வி. சுரேஷ், தர்மன், மாநகராட்சி மேயர் சரவணன், ஒன்றிய செயலாளர்கள் மாரியப்பன், அருள்மணி, பேரூர் செயலாளர்கள் செல்வபாபு, பேச்சி குட்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன் பேச்சிபாண்டியன், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.கா.மணி, குமார சுப்பிரமணியன், சித்திக், பெருமாள், விஜிலா சத்யானந்த், பொன்னையா பாண்டியன், சிவா, வினோத், பெரியார், சௌந்ரம், பத்மா, மேரி, ஹமீதா, ஜகாய ஜூலியட், ராஜேஸ்வரி, வதனகுமாரி, பெப்சி சரவணன், டைட்டஸ் கண்ணன், வேங்கை வெங்கடேஷ், ஜவகர், ஷெட்டி, மகாராஜன, தளபதிஆறுமுகம், சித்திக், ரகுமான்ஷா, அலி பக்ருதீன், ஹமீம், சிரிப்பு சேக், யாசின், கணேசன், ராமச்சந்திரன், குமார், ஐயப்பன், கார்த்திக் ராஜேஷ், வட்ட செயலாளர்கள் பேபி கோபால், மாரிமுத்து, கேபிள் குமரேசன், பிரேம் கணேசன், ஜடாமுனி, மேகைசெல்வம், தொப்பி காஜா மற்றும் மறைந்த கழக முன்னோடிகளின் குடும்பத்தினர், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை நன்றி கூறினார்.

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!




### மாநிலங்களை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவரத் துடிக்கும்

# ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்க்கட்சிகள் உறுதியுடன் எதிர்த்திட வேண்டும்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, செப். 3-

மாநிலங்களை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வர துடிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை எதிர்க்கட்சிகள் உறுதியுடன் எதிர்த்திட வேண்டும். வெல்வது யார்? காலம்தான் பதில் சொல்ல வேண்டும் என 'தினகரன்' நாளேடு 2.9.2023 தேதியிட்ட இதழில் 'நோக்கம் என்ன?' என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.



தினகரன்

செப்டம்பர் 2, 2023 சனிக்கிழமை

நோக்கம் என்ன?

நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் 5 மாநிலங்களுக்கு சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. அடுத்த ஆண்டு மே, ஜூன் மாதங்களில் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இப்படிப்பட்ட நிலையில், இம்மாதம் 18ம் தேதி முதல் 22ம் தேதி வரை சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் என ஒன்றிய பாஜ அரசு அறிவித்துள்ளது. இச்சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தில் 2018ம் ஆண்டு முதல் பாஜ அரசு கொண்டுவர விரும்பும் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' என்னும் நடைமுறையை ...

அது வருமாறு:-

நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் 5 மாநிலங்களுக்கு சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. அடுத்த ஆண்டு மே, ஜூன் மாதங்களில் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. இப்படிப்பட்ட நிலையில், இம்மாதம் 18ம் தேதி முதல் 22ம் தேதி வரை சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறும் என ஒன்றிய பாஜ அரசு அறிவித்துள்ளது. இச்சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தில் 2018ம் ஆண்டு முதல் பா.ஜ. அரசு கொண்டுவர விரும்பும் 'ஒரே நாடு, ஒரே தேர்தல்'என்னும் நடைமுறையை அமல்படுத்த இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது வரை இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி நாடாளுமன்ற தேர்தல், சட்டசபை தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தல் என மூன்று வகைகளில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நாடு முழுவதும் தேர்தல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதுதவிர, அரசுகள் கவிழும் பட்சத்திலும், கட்சித்தாவல்களாலும், வேட்பாளர்கள் மறைந்தாலும் இடைத்தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

எனவே, ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கான சட்ட விதிகளை உருவாக்குதல், அதை நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க, முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒன்றிய அரசு குழு ஒன்றை நேற்று அமைத்துள்ளது.

நாட்டில் கடந்த 1967ம் ஆண்டு வரை சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் ஒரே காலக்கட்டத்தில்தான் நடத்தப்பட்டு வந்தன. ஆட்சி கலைப்பு உள்ளிட்டவைகளால் தேர்தல்கள் நடத்தப்படும் காலங்கள் மாறின.

இந்நிலையில், மீண்டும் ஒரே நாடு, ஒரே தேர்தல் முறையை அமல்படுத்துவது குறித்து ஒன்றிய அரசு தீவிரமாக யோசித்து வருவது, நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை உருவாக்கியுள்ளது.

கடந்த 2019ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலுக்கு மட்டும் அரசியல் கட்சிகள், தேர்தல் ஆணையம் ஆகியவை சுமார் ரூ.60 ஆயிரம் கோடி செலவு செய்துள்ளன. இதேபோல், சட்டமன்ற தேர்தலுக்கும் தேர்தல் ஆணையம் குறிப்பிட்ட அளவில் செலவு செய்கிறது.

எனவே, இந்த 2 தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்தினால் இந்த செலவுகளை குறைக்க முடியும் என்றும், 2 தேர்தல்களை சேர்த்து நடத்துவதன் மூலம் நிர்வாக திறனை மேலும் அதிகரிக்க முடியும் என்றும் ஒன்றிய பா.ஜ. அரசு கூறியுள்ளது. மேலும், "ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்கள், சட்டமன்ற தேர்தலின்போது அந்தந்த மாநிலத்தில் அமல்படுத்த முடியாத சூழல் உருவாகிறது. தேர்தலை ஒன்றாக நடத்தினால் இதுபோன்ற இடையூறுகள் ஒருமுறை மட்டுமே ஏற்படும். அனைத்திற்கும் மேல் ஒரே நாடு, ஒரே தேர்தல் முறையானது வாக்குப்பதிவு சதவீதத்தை அதிகரிக்கும்" என்றும் ஒன்றிய அரசு கூறுகிறது.

ஒன்றிய அரசின் இந்த முயற்சிக்கு அ.தி.மு.க. உள்ளிட்ட பா.ஜ. கூட்டணி கட்சிகள் மட்டுமே ஆதரவு தெரிவித்து வருகின்றன. எனவே இதன் பின்னணியில் வேறு நோக்கம் இருப்பதாகவும், ஏராளமான குளறுபடிகள் இருப்பதாகவும் எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. குறிப்பாக, ஒரே தேர்தல் நடத்துவதன் மூலம், மாநில பிரச்சினைகளுக்கு ஒன்றிய அரசு முக்கியத்துவம் தராது. மாநிலத்தின் தனித்தன்மையை பாதுகாக்க இயலாமல் போய்விடும் என்ற வலுவான குற்றச்சாட்டுகளை எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ளன.

ஒரே நாடு, ஒரே தேர்தல் முறை அமல்படுத்தப்பட்டால், தேசிய பிரச்சினைகளுக்கான முக்கியத்துவம்தான் அதிகரிக்கும். மாநில அரசின் கோரிக்கைகள் கண்டு கொள்ளப்பட மாட்டாது.

இதன்மூலம் மாநிலங்களை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர ஒன்றிய பா.ஜ. அரசு துடிக்கிறது. இந்த சூட்சுமத்துக்கு யாரும் அடிபணிந்து விடக்கூடாது என்பதில் எதிர்க்கட்சிகள் உறுதியாக இருக்கின்றன. வெல்வது யார்? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தங்கத் தமிழகமே வருக!



புத்தம் புதிய திராவிடமே
நித்தமொரு சாதனையே
சத்தான இந்தியாவை
சத்தமின்றி திரட்டுகிறாய்!

எத்தர்கள் நடுநடுங்க
எத்திசையும் ஒளி வீசுகிறாய்;
பித்தம் தெளிய மக்களை
புத்தனாகி நேசிக்கிறாய்!

இந்தியாவின் அச்சாணியாய்
எப்பொழுதும் சுழல்கிறாய்;
முந்தி பல விடயங்களை
முனைப்புடன் ஆற்றுகிறாய்!

சாமானிய மக்களும் உன்
சரித்திரம் புரட்டி படிக்கின்றார்
சந்திரயான் விஞ்ஞானியுமுன்
சாதனையைச் சொல்லி மகிழ்கின்றார்.

இந்தியாவின் இதயத்தில்
கூடுகின்ற கூட்டணிக்கு
வங்க கடலிலிருந்து கொள்கை
வாளெடுத்து வருகிறாய்!

காரிருள் சூழ்ந்த காலத்தில்
களமாடுகிறாய் தளபதியாக
பெரியாரும், அண்ணாவும்
கலைஞரும் உன்
கையிலிருக்கும் ஆயுதமே!

தங்கத் தளபதியே
கழகத் தலைவரே
தங்கத் தமிழகமே
தமிழகத்தின் முதல்வரே
வருக! வருக! வருக!
இந்திய மனங்களை
வென்றெடுக்க வருகவே!

திராவிடத்தின் கொடி
திக்கெட்டும் பறக்கட்டும்!
பெரியார் கொள்கைகள் இந்தியப்
பெருநிலமெங்கும் பரவட்டும்!!

கொள்கை முரசு கொட்டட்டும்
திசைகள் திக்கெட்டும் உன்
பேர் சொல்லட்டும்;
தோழமை கட்சிகள் கூடட்டும்
திசை தோறும், திசை தோறும் நம்
இந்தியா வெல்லட்டும்!

**வ.ரா.தமிழ்நேசன்**
இலக்கிய அணி அமைப்பாளர்
மும்பை புறநகர் மாநில தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இரா.சடகோபன்

### செப்டம்பர் 3 (1979)



சென்னையில் கழகத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் ஒருவர்.

1961ஆம் ஆண்டு சென்னை நகரக் குடிசை வாழ்வோர் மாநாடு நடத்தி அந்த சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தவர்.

கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும், 1959 முதல் 1968 வரை சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், 1965–66இல் துணை மேயராகவும், 1967இல் மாநகராட்சி மத்திய குழு தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்டவர்.

தலைவர் கலைஞரின் அன்புக்கு பாத்திரமானவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## தனித்தனி கட்சிகளாக இருந்தாலும் 'இந்தியா' கூட்டணி மதவாத பா.ஜ.க.வை வீழ்த்தி- தாய் நாடான

# இந்தியாவைக் காப்பாற்றுவதே எங்கள் இலக்கு!

## மும்பை - பத்திரிகையாளர்கள் சந்திப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டம்!

மும்பை,செப்.3-

**தனித்தனி கட்சிகளாக இருந்தாலும், 'இந்தியா' கூட்டணி மதவாத பா.ஜ.க.வை வீழ்த்தி - தாய் நாடான இந்தியாவைக் காப்பாற்றுவதே எங்கள் இலக்கு என்று மும்பையில் 'இந்தியா' கூட்டணிக் கூட்டத்தில்; பத்திரிகையாளர்கள் சந்திப்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திட்டவட்டமாக குறிப்பிட்டார்.**

மும்பையில் நேற்று முன்தினம் (01-09-2023) நடைபெற்ற இந்தியா கூட்டணியின் மூன்றாவது கூட்டத்தின் கூட்டுச் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் அளித்த அறிக்கையின் விவரம் வருமாறு:

அனைவர்க்கும் வணக்கம். இந்தியாவைக் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட இந்தியா கூட்டணியைச் சேர்ந்த அனைத்துத் தலைவர்களுக்கும் வணக்கம். பாட்னாவில் கூடும் போது 19 கட்சிகள் - பெங்களூரில் கூடும் போது 26 கட்சிகள் - மும்பையில் கூடிய இன்று 28 கட்சிகள் - என இந்தியா கூட்டணி நாளுக்கு நாள் வலிமை அடைந்து வருவதை ஊடகவியலாளர்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

### இந்தியா கூட்டணியை பாப்புலராக்கும் மோடி!

எங்கே சென்றாலும் - எங்கே பேசினாலும் தன்னுடைய ஆட்சியின் சாதனைகளைச் சொல்லாமல் - எங்களைப் பற்றியே பேசி எங்கள் கூட்டணிக்கு சிறந்த 'பப்ளிக் ரிலேஷன் ஆபீஸராக' 'பிரைம் மினிஸ்டர்' அவர்களே செயல்பட்டு வருகிறார். இந்தியா கூட்டணியை பாப்புலர் ஆக்கியதற்காக அவருக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

9 ஆண்டுகள் ஆட்சி செய்தும் சொல்வதற்கு சாதனைகளே இல்லாத ஆட்சி ஒன்றிய பா.ஜ.க ஆட்சி தான். சி.ஏ.ஜி. அறிக்கை சுட்டிக்காட்டியுள்ள 7.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முறைகேடுகள் பற்றிப் பேசாமல் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அமைதி காக்கிறார். மோடி ஆட்சி நாளுக்குநாள் 'unpopular' ஆகி வருகிறது. இந்தியா கூட்டணி ஒவ்வொரு நாளும் 'popular' ஆகி வருகிறது. இது ஒரு தேர்தலில் வெற்றி பெறுவதற்கான கூட்டணி மட்டும் அல்ல. இந்திய நாட்டையும் 140 கோடி இந்தியர்களின் எதிர்காலத்தையும் காப்பாற்றுவதற்கான கூட்டணி...

இது கட்சிகள் தங்கள் தேவைக்காக உருவாக்கிய கூட்டணி அல்ல; மாறாக, மக்கள் விருப்பத்தால் உருவாகி இருக்கிற மகத்தான அணி. எதிர்க்கட்சிகள் ஒன்றுபட மாட்டார்களா என ஏங்கிய இந்திய மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காக உருவாகி இருக்கிற அணி. மராட்டிய மக்கள் இந்த அணிக்கு இன்று பரிபூரணமான ஆதரவை தெரிவித்து இருக்கிறார்கள். இன்றைய கூட்டம், திருப்திகரமாக மட்டுமல்ல, திருப்புமுனையாகவும் அமைந்திருக்கிறது.




இந்தியா கூட்டணிக்கான ஆதரவும், எங்கள் மீதான எதிர்பார்ப்பும் நாட்டு மக்களிடையே நாளுக்குநாள் அதிகரித்த வண்ணம் இருக்கிறது.

### விசாரணை அமைப்புகளை ஏவி எதிர்க்கட்சிகளை பிளவுபடுத்தும் பா.ஜ.க.!

பொய்களையும் அவதூறுகளையும் வெறுப்பையும் முதலீடாக வைத்து பா.ஜ.க நடத்திவரும் பாசிச ஆட்சியின் 'கவுண்டவுன்' ஆரம்பமாகி உள்ளது. ஒன்பது ஆண்டு கால பா.ஜ.க ஆட்சியில் ஜனநாயகத்துக்குத் துளியும் மதிப்பில்லை. தற்போது அது இந்தியாவின் ஜனநாயகத்துக்கே அச்சுறுத்தலாக இருக்கிறது. மக்களாட்சியில் தன்னாட்சி அமைப்புகளையும், மரபுகளையும் சிதைத்த அரசாக; தங்களது எதிரான கட்சிகளின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்த்த அரசாக மோடி அவர்கள் தலைமையிலான அரசு வரலாற்றில் பதியப்படும். அதற்கு மகாராஷ்ராவே சிறந்த சாட்சி. எதிர்க்கட்சிகளை பிளவுபடுத்துவதும், முறைகேடாக சம்பாதித்த பணத்தைக் கொட்டி, விசாரணை அமைப்புகளை ஏவி அவர்களது ஆட்சியைக் கவிழ்ப்பதும் பா.ஜ.கயின் முழுநேரத் தொழிலாக மாறிவிட்டது. தன்னை எதிர்ப்பவர்களே அரசியலில் இருக்கக்கூடாது என நினைப்பதும் செயல்படுவதும் சர்வாதிகாரம். இந்தியாவில் தற்போது அரசியல் சர்வாதிகாரம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஆட்சியில் நாடாளுமன்றத்துக்கும் மதிப்பு இல்லை, நீதிமன்றங்களுக்கும் மதிப்பில்லை. தேர்தல் ஆணையம் இந்த அரசின் தலையாட்டி பொம்மையாக ஆகிவிட்டது. E.D., C.B.I., I.T., என எல்லா உயர் அமைப்புகளின் சுதந்திரத்தையும் பறித்துவிட்டு, கூட்டணிக்கு ஆள் பிடிக்கிற - அரசியல் எதிரிகளை அச்சுறுத்துகிற - தங்களுக்கு விருப்பத்துக்கேற்ப செயல்படும் ஏவல் அமைப்புகளாக மாற்றிவிட்டார்கள்.

### மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் நாம் பார்த்த இந்தியா இருக்காது!

நரேந்திர மோடி என்கிற தனிநபரிடம் இருந்து ஆட்சி அதிகாரத்தை பறிப்பது எங்கள் நோக்கம் அல்ல, யார் மீதும் தனிப்பட்ட வெறுப்போ வன்மமோ எங்களுக்கு இல்லை. மீண்டும் பா.ஜ.க.விடம் ஆட்சியைக் கொடுத்தால் நாம் பார்த்த இந்தியாவே இனி இருக்காது. அதனால் எதிர்க்கிறோம்.

தனித்தனி கட்சிகளாக இருந்தாலும் - தாய்நாடான இந்தியாவைக் காப்பாற்றுவது ஒன்றே எங்களது இலக்கு. அரசியல் லாபங்களுக்காக நாங்கள் அணி சேரவில்லை. இந்தியாவின் இறையாண்மையை - மாண்பை - மதச்சார்பின்மையை - சமூகநீதியை - சகோதரத்துவத்தைக் காப்பாற்றுவதற்காக சேர்ந்திருக்கிறோம்.

### மோடி ஆட்சியில் மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவில்லை!

அந்த இலட்சியத்தை மக்கள் சக்தியோடு நாங்கள் வெல்வோம். பா.ஜ.க வீழ்த்த முடியாத சக்தி அல்ல, வெவ்வேறு மாநிலங்களில் தனித்தனியாக வீழ்த்தப்பட்ட கட்சிதான் பா.ஜ.க. மிருக பலம் எனப்படும் 'brute majority' இருந்தும் ஏழை, எளிய மக்களுக்கு மோடி ஆட்சியால் எந்த நன்மையும் வரவில்லை. மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. தற்போது அதிகரித்து வரும் வெறுப்பரசியல் சூழலால், சராசரி இந்திய குடிமகனின் எதிர்காலம் - அப்பாவி மக்களின் உயிருக்கும் உடைமைக்குமான பாதுகாப்பு கேள்விக்குறியாகி இருக்கிறது. பா.ஜ.க முன்னெடுக்கும் வெறுப்பு அரசியலாலும், வகுப்பு மோதல்களாலும், தங்களுக்கு வேண்டிய பெருமுதலாளிகளுக்குத் துணை போகும் செயலாலும் உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு குறைந்திருக்கிறது.

### கவுண்டவுன் ஆரம்பம்...

**பொய்களையும் அவதூறுகளையும் வெறுப்பையும் முதலீடாக வைத்து பா.ஜ.க நடத்திவரும் பாசிச ஆட்சியின் 'கவுண்டவுன்' ஆரம்பமாகி உள்ளது. ஒன்பது ஆண்டு கால பா.ஜ.க ஆட்சியில் ஜனநாயகத்துக்குத் துளியும் மதிப்பில்லை. தற்போது அது இந்தியாவின் ஜனநாயகத்துக்கே அச்சுறுத்தலாக இருக்கிறது. மக்களாட்சியில் தன்னாட்சி அமைப்புகளையும், மரபுகளையும் சிதைத்த அரசாக; தங்களது எதிரான கட்சிகளின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைக் கவிழ்த்த அரசாக மோடி அவர்கள் தலைமையிலான அரசு வரலாற்றில் பதியப்படும். அதற்கு மகாராஷ்டிராவே சிறந்த சாட்சி.**

### ஒற்றைக் கட்சி நாடாக இந்தியாவை மாற்ற நினைக்கும் பா.ஜ.க.வுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நேரம் இது!

ஒரு நாடு ஒரு வரி, ஒரு நாடு ஒரு மொழி, ஒரு நாடு ஒரே கல்வி, ஒரு நாடு ஒரே தேர்தல், ஒரு நாடு ஒரே கட்சி என ஒற்றையாட்சியை - ஒற்றைக் கட்சி நாடாக இந்தியாவை மாற்ற நினைக்கும் பாஜகவுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய நேரம் இது.

### இந்தியாவை காக்கிற போரில் அனைவரும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்!

இந்தியாவை பாதுகாக்கிற மகத்தான அரசியல் களத்தில், கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை உள்ள எதிர்க்கட்சிகள் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு உள்ளன.

இந்திய மக்கள் ஒவ்வொருவரும் - இந்தியாவைக் காக்கிற போரில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டி கேட்டுக்கொண்டு ஊடகங்களான உங்கள் ஆதரவையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

---

### 'இந்தியா' கூட்டணி: 14 பேர் கொண்ட

## ஒருங்கிணைப்புக் குழு - தேர்தல் வியூகக் குழு அமைப்பு!

### மும்பையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு!

சென்னை, செப். 3-

மும்பையில் நடைபெற்ற இந்தியா கூட்டணியின் ஆலோசனை கூட்டத்துக்கு பிறகு, இக்குழு அறிவிக்கப்பட்டது. அதன்படி, 14 பேர் கொண்ட குழுவில் காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் கே.சி.வேணுகோபால், தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவர் ஹேமந்த் சோரன், உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா கட்சி மூத்த தலைவர் சஞ்சய் ராவத், ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைவர் தேஜஸ்வி யாதவ், திரிணாமுல் காங்கிரஸ் மூத்த தலைவர் அபிசேக் பானர்ஜி ஆகியோர் உள்ளனர். இதேபோல், ஆம் ஆத்மி கட்சியின் ராகவ் சத்தா, சமாஜ்வாதி கட்சியின் மூத்த தலைவர் ஜாவீத் அலிகான், ஐக்கிய ஜனதா தளம் மூத்த தலைவர் லாலன் சிங், இந்திய கம்யூனிஸ்ட் தேசிய செயலாளர் டி.ராஜா, தேசிய மாநாட்டு கட்சித் தலைவர் உமர் அப்துல்லா, மக்கள் ஜனநாயக கட்சித் தலைவர் மெஹபூபா முப்தி ஆகியோரும் உள்ளனர். குழுவில் இடம்பெறும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் பிறகு அறிவிக்கப்படுவார் என கூறப்பட்டுள்ளது.

**பிரச்சாரக் குழு!**

இந்தியா கூட்டணியின் பிரச்சார குழுவில் மாநிலங்களவை தி.மு.க. குழு தலைவர் திருச்சி சிவா, சமூக ஊடகங்களுக்கான குழுவில் தயாநிதி மாறன் எம்.பி., ஊடகங்களுக்கான குழுவில் கனிமொழி எம்.பி., ஆய்வுக் குழுவில் ஆ.ராசா எம்.பி. ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்க்குட்பட்ட ஓ. சிறுவயல் அரசு மேல்நிலைப்பள்ளியில், விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்இரா.சிவராமன், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.சரண்யா உட்பட பலர் உள்ளனர்.

---

### பொருளாதாரத்தில் பின்தங்கிய பழங்குடியினர் - நரிக்குறவர்கள் என - மொத்தம்

## 1500 குடும்பங்களுக்கு - ரூ.45 கோடியில் வீடுகள்!

### 'விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்' என- அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அறிவிப்பு!

*சென்னை, செப். 3-*

*ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் விடுத்த அறிவிப்பு வருமாறு:-*

*விளிம்பு நிலை மக்களுக்கான பொருளாதார முன்னேற்றமே அவர்களுக்கான சமூக நீதியாக அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கை உடைய முதல்வர் அவர்களின் எண்ணத்திற்கு உருக் கொடுக்கும் வகையில், 2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் தொடர்பாக கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்.*

*"பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற 1000 பழங்குடியினர் குடும்பங்கள் மற்றும் தற்போது பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள 500 நரிக்குறவர் குடும்பங்கள் என மொத்தம் 1500 குடும்பங்களுக்கு வீடுகள் ரூ.45.00 கோடி மதிப்பீட்டில் தகுதியின் அடிப்படையில் கட்டித் தரப்படும்"*

*மேற்காணும் அறிவிப்பினைச் செயல்படுத்தும் வகையில், 2023-2024 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் பின்தங்கிய வீடற்ற 1000 பழங்குடியினர் குடும்பங்கள் மற்றும் தற்போது பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள 500 நரிக்குறவர் குடும்பங்கள் என மொத்தம் 1500 பழங்குடியினர்களுக்கு தமிழ்நாட்டில், 19 மாவட்டங்களில் வீடுகள் கட்டுவதற்கு ரூ.79,28,40,000/ (ரூபாய் எழுபத்து ஒன்பது கோடியே இருபத்து எட்டு இலட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

*மேற்கண்ட 1500 வீடுகளை விரைந்து கட்டி முடித்திடத் தேவையான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

---

## கேரளாவில் 3 நாட்களுக்கு பலத்த மழை எச்சரிக்கை!

*திருவனந்தபுரம், செப். 3-*

*கேரளாவில் அடுத்த மூன்று நாட்களுக்கு பலத்த மழை பெய்யும் என்று மத்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. வழக்கமாக தென்மேற்கு பருவமழை காலத்தில் கேரளாவில் மழை இல்லாத நாளே இருக்காது. ஆனால், கேரளாவில் கடந்த ஒரு மாதத்திற்கு மேல் மழை இல்லாமல் வறண்ட வானிலை நிலவியது. மேலும் கோடைக் காலம் போல வெயில் சுட்டெரித்தது.*

*இந்நிலையில் தற்போது கேரளாவில் காலநிலை மெதுவாக மாறி வருகிறது. கடந்த சில தினங்களாக திருவனந்தபுரம், கொல்லம் உள்பட சில பகுதிகளில் மிதமான மழை பெய்து வருகிறது. இந்நிலையில் அடுத்த மூன்று நாட்களுக்கு கேரளாவில் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்யும் என்று மத்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. மழையுடன் பலத்த காற்று மற்றும் இடி மின்னலும் காணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

## ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் கீழ்

# ரூ.1430 கோடி மதிப்பீட்டில் 15 திருக்கோயில்களில் பக்தர்களுக்கான வசதிகள்!

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, செப்.3-

ஒருங்கிணைந்த பெருந் திட்ட வரைவின் (Master Plan) கீழ், ரூ.1,430 கோடி மதிப்பீட்டில் 15 திருக்கோயில்களில் பக்தர்களின் அனைத்து தேவைகளையும் நிறைவு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தகவல் தெரிவித்துள்ளார்.

இது குறித்த அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று முன்தினம் (01.09.2023) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள், 2021 2022, 2022 - 2023 மற்றும் 2023 - 2024 ஆம் ஆண்டுகளுக்கான சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 26 -வது மாதாந்திர சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பக்தர்கள் அதிக எண்ணிக்கையில் வருகை தருகின்ற திருக்கோயில்களில் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்கிடும் வகையில் ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவின் கீழ் 2021 - 2022 ஆம் ஆண்டில் 10 திருக்கோயில்களில் பெருந்திட்ட பணிகள் (Master Plan) தொடங்கப்பட்டன. ரூ.170.11 கோடி மதிப்பீட்டில் பெரியபாளையம், பவானி அம்மன் திருக்கோயில், ரூ.306.35 கோடி மதிப்பீட்டில் திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், ரூ.159.83 கோடி மதிப்பீட்டில் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி திருக்கோயில், ரூ.78.20 கோடி மதிப்பீட்டில் திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில், ரூ.103. 70 கோடி மதிப்பீட்டில் திருத்தணி சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், ரூ.64.65 கோடி மதிப்பீட்டில் சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில், ரூ.99.90 கோடி மதிப்பீட்டில் வடலூர் அருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையம், ரூ.99.98 கோடி மதிப்பீட்டில் பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், ரூ.78.55 கோடி மதிப்பீட்டில் திருவேற்காடு, தேவி கருமாரியம்மன் திருக்கோயில், ரூ.68.30 கோடி மதிப்பீட்டில் இருக்கண்குடி மாரியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் ரூ.1,230 கோடி மதிப்பீட்டில் பெருந்திட்ட வரைவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2023 - 2024 ஆம் ஆண்டு அறிவிப்புகளின்படி, அழகர்கோயில், கள்ளழகர் திருக்கோயில், மருதமலை, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சிறுவாபுரி, பால சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், மேல்மலையனூர், அங்காளபரமேஸ்வரி திருக்கோயில், திருச்சி மாவட்டம், குமாரவயலூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் ரூ. 200 கோடி மதிப்பீட்டிலும் ஒருங்கிணைந்த பெருந்திட்டப் (Master Plan) பணிகள் கீழ் மேற்கொள்ளப் படவுள்ளன. இப்பணிகளின் முன்னேற்றம் குறித்து இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

சிறப்பு திட்டங்களாக நாகப்பட்டினம் மாவட்டம், துளசியாப்பட்டினத்தில் தமிழ்மூதாட்டி ஔவையாருக்கு ரூ.18 கோடி மதிப்பீட்டில் மணி மண்டபம், மயிலாப்பூரில் ரூ.28.76 கோடி மதிப்பீட்டில் ஆன்மிக கலாச்சாரம் மையம், மயிலாப்பூர் திருவள்ளுவர் திருக்கோயிலை ரூ.15 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்றபின் புதியதாக 3 தங்கத்தேர்களும், 5 வெள்ளித் தேர்களும், 51 புதிய மரத்தேர்கள் செய்யும் பணிகளும், 13 மரத்தேர்களை மராமத்து செய்யும் பணிகளும் நடைபெற்று வருகிறது. இவற்றின் தற்போதைய நிலை குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

**ரோப் கார் தானியங்கி லிப்ட் வசதி!**

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பக்தர்கள் மற்றும் முதியோர்கள் மலைக் கோயில்களுக்கு செல்ல வசதியாக ரோப் கார் மற்றும் தானியங்கி லிப்ட் வசதி ஏற்படுத்தி தரப்பட்டு வருகின்றன. கரூர், அய்யர் மலை திருக்கோயில், சோளிங்கர் நரசிம்ம சுவாமி திருக்கோயில் ஆகியவற்றிக்கு ரோப் கார் அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. விரைவில் பக்தர்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். அனுவாவி, திருக்கழுக்குன்றம், திருநீர்மலை, பழனி இடும்பன் மலை ஆகிய திருக்கோயில்களுக்கு ரோப் கார் வசதி ஏற்படுத்தி தரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருப்பரங்குன்றம், திருச்செங்கோடு கோரக் குட்டை ஆகிய மலைக் கோயில்களில் ரோப்கார் அமைப்பதற்கு சாத்திய கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன. அதேபோல் மருதமலை மற்றும் சுவாமிமலை திருக்கோயில் களுக்கு தானியங்கி மின்தூக்கி (Lift) அமைப்பதற்குண்டான சாத்திய கூறுகள் ஆராயப்பட்டு, மருதமலையில்ரூ.5.20கோடி மதிப்பீட்டில் தானியங்கி லிப்ட் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுவாமி மலையில் சுமார் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் தானியங்கிலிப்ட் அமைக்கப்படும்.

திருக்குளங்களை பொறுத்தளவில் 2021 - 2022 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி மாதவரம், கைலாசநாத சுவாமி திருக்கோயி லுக்கு ரூ.2.41 கோடி மதிப்பீட்டில் புதிய திருக்குளம் அமைக்கும் பணிகளும், 35 திருக்குளங்களை ரூ.18 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகளும், 2022 - 2023 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி, ரூ.2 கோடி மதிப்பீட்டில் 3 புதிய திருக்குளங்கள் ஏற்படுத்தும் பணிகளும், ரூ.35 கோடி மதிப்பீட்டில் 40 திருக்குளங்களை மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. மேலும், 2023 - 2024 ஆம் ஆண்டு அறிவிப்பின்படி ரூ.25.44 கோடி மதிப்பீட்டில் 45 திருக்குளங்களை மேம்படுத்தும் பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திருக்கோயில்களில் உலோகத் திருமேனிகளை பாதுகாத்திடும் வகையில் பாதுகாப்பறைகள் (Strong Rooms) ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 1,833 உலோகத் திருமேனி பாதுகாப்பறைகள் கட்டுவதற்கு முடிவெடுக்கப்பட்டு 1,737 பாதுகாப்பறைகள் கட்டிட பணியாணை வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 139 பணிகள் நிறைவுற்றுள்ளன. 927 பணிகள் நடைபெற்று வருகின்றன. இதர பணிகள் தொடங்கப்படவுள்ளன.

**குடமுழுக்கு விழா!**

முதலமைச்சர், 1,000 ஆண்டுகளுக்கு மேல் தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து திருப்பணி மேற்கொள்ள 2022 - 2023 ஆம் ஆண்டில் ரூ.100 கோடியும், 2023 24 ஆம் ஆண்டிற்கு ரூ.100 கோடியும் அரசு மானியமாக வழங்கியுள்ளார்கள். அதன்படி 2022 - 2023 ஆம் ஆண்டில் ரூ.140 கோடி மதிப்பீட்டில் 113 தொன்மையான திருக்கோயில்களும், 2023 24 ஆம் ஆண்டில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் 84 திருக்கோயில்களும் அரசு மானியம், திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் பங்களிப்புடன் புனரமைத்து பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுள் 4 திருக்கோ யில்களில் குடமுழுக்கு விழா முடிவுற்றுள்ளது. 6 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு விழாவிற்கான நாள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டு இதுவரை 2,500 கிராமப்புற திருக்கோயில்களுக்கும் 2,500 ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியிலே இருக்கின்ற திருக்கோயில்களுக்கு தலா ரூ.2 லட்சம் வீதம் ரூ. 100 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

**ஒரு கால பூஜை! 2000 கோயில்கள் தேர்வு!**

அதேபோல ஒருகால பூஜை திட்டத்தில் திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டு வந்த வைப்பு நிதி ஒரு லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சமாக உயர்த்தப்பட்டு, இதுவரை 15,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இந்தாண்டு இத்திட்டத்திற்காக 2,000 திருக்கோயில்களை தேர்வு செய்வதற்கான பணிகள் விரைவுப்படுத்தப்பட்டுள்ளன. ஒருகால பூஜை திட்டத்தின் கீழ் பயன்பெறும் திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.1,000 இவ்வரசு பொறுப்பேற்ற பின் முதன்முறையாக வழங்கப்பட்டு வருகிறது.

பருவதமலை, போளூர், வெள்ளியங்கிரி, சதுரகிரி, கண்ணகி கோயில் ஆகியவற்றிற்கு மலைப்பாதை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்யும் பணிகள் குறித்தும், அட்டவீராட்டணம் தலங்கள், நவகிரக கோயில்கள், நவகயிலாய கோயில்கள், பஞ்ச சபை கோயில்கள் மற்றும் 12 சிவாலய ஓட்ட திருக்கோயில்களில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆட்சி பொறுப்பேற்றபின் 925 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளன. வருகின்ற செப்டம்பர் 3 ஆம் தேதி 38 திருக்கோயில்களிலும், 4 ஆம் தேதி 13 திருக்கோயில்களிலும் குடமுழுக்கு நடைபெறவுள்ளது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான ரூ.5,169 கோடி மதிப்பீட்டிலான 5721 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. இப்படி திருக்கோயில்களின் நலன்களை காத்திடும் வகையிலும், இறையன்பர்கள் பயன்பெறும் வகையிலும் ஒவ்வொரு திட்டத்தையும் சிறப்பாக செயல்படுத்தி வருவதனால் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள் அனைத்து தரப்பினராலும் போற்றப்பட்டு வருகிறது என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, தலைமைப் பொறியாளர் சி.இசையரசன், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோனூர் ஊராட்சியில் 41ஏக்கர் நிலப்பரப்புள்ள சங்கான்குளத்தை தனது சொந்த செலவில் தூர்வாரி கொடுக்கும் ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு விவசாயிகள், கிராம மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர். கோனூர், கரிசல்பட்டி ஊராட்சி, கசவனம்பட்டி, தருமத்துப்பட்டி, அனுமந்தராயன்கோட்டை, குட்டத்துப்பட்டி ஊராட்சி கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன் பெறுகிறார்கள்.

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் - இன்று நடைபெறுகிறது!

# வடசென்னை ந.மனோகரன் புதல்வர் - மாணவரணி ந.ம.மகேஷ்குமார் திருமணம்!

### பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு! அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை!

சென்னை, செப்.3-

சென்னை-ஆர்.கே. நகர் பகுதி - கழக மூத்த முன்னோடி (நினைவில் வாழும்) மெட்டல் பாக்ஸ் மு. நடராசன் - ந.நாகம்மாள் ஆகியோரின் மகன் வழிப் பேரனும் - சென்னை வடக்கு மாவட்டக் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் - தமிழ்நாடு டிரெய்லர் லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் வடசென்னை ந. மனோகரன் - திருமதி இந்திராமனோகரன் ஆகியோரின் புதல்வரும் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளருமான ந.ம.மகேஷ் குமாருக்கும் - சென்னை - பொன்னியம்மன் மேடு - சு.கஜபதி-க. தாட்சாயணி ஆகியோரின் மகள் க. ரம்யாவுக்கும் திருமணம் இன்று (3.9.2023 - ஞாயிற்றுக்கிழமை) சென்னை - திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் - டோல்



கேட் அருகில் அமைந்துள்ள தங்கம் திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

மணவிழாவிற்கு சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு முன்னிலை வகிக்கிறார்.

சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா. இளைய அருணா, ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

திருமணத்திற்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று, திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகிறார்.

கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக இளைஞர் அணிச் செயலாளரும் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி., கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் வாழ்த்திப் பேசுகின்றனர்.

கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மேயர் பிரியா ராஜன் மாவட்டச் செயலாளர்கள் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ., ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ., நே.சிற்றரசு எம்.சி., த.வேலு எம்.எல்.ஏ., டி.ஜே.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ., துணை மேயர்.மு. மகேஷ்குமார்,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கப்பாண்டியன், இரா. கிரிராஜன், மு.சண்முகம், பி.வில்சன், என்.ஆர்.இளங்கோ, டாக்டர் கனிமொழி என். வி.என். சோமு,

சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, ஆர். டி.சேகர், ஐட்ரீம் மூர்த்தி, கே.பி. சங்கர், சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.கே. மோகன், டாக்டர் நா. எழிலன், எஸ்.ஆர்.ராஜா, எஸ். அரவிந்த் ரமேஷ், இ. பரந்தாமன், அ. வெற்றியழகன்

தலைமைக் கழக நிர்வாகிகள் பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, அறிவாலயம் பத்மநாபன், என். ஜெயக்குமார், கு.க. செல்வம், ப.ரங்கநாதன், குமரி விஜயகுமார், முரசொலி கே.சேது, பி.குமரேசன், எஸ். ஜோயல், ஜி.பி. ராஜா, டாக்டர் இரா. மாசிலாமணி, விஜயா தாயன்பன், க. சோமு, வேளச்சேரி, பி. மணிமாறன், நாமக்கல் இரா.நக்கீரன், ஈரோடு இறைவன், பூவை சி. ஜெரால்டு, கவி.கணேசன், எஸ்.மோகன் தமிழ், க.அமுதரசன், சி.பிரதீப், கும்மிடிப்பூண்டி எம்.எல். ரவி

மாநில நிர்வாகிகள் இரா. மதிவாணன், பி.டி.பாண்டிச்செல்வம், இரா.கருணாநிதி, ஆர்.எம்.டி.ரவீந்திரன், இரா. நரேந்திரன், சிம்லா முத்துச்சோழன் உள்பட பலரும் இம்மணவிழாவில் கலந்து கொள்கிறார்கள்.

## சிவகங்கை மாவட்டம்

# திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட 5 பள்ளிகளைச் சார்ந்த 474 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

திருப்பத்தூர், செப். 3-

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை மாவட்டம், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஓ. சிறுவயல் அரசு மேல்நிலைப் பள்ளி, கோட்டையூர் பேரூராட்சிக்குட்பட்ட தஞ்சாவூர் அருணாச்சலம் செட்டியார் அரசு மேல்நிலைப் பள்ளி, சிதம்பரம் செட்டியார் (பெண்கள்) உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி, பள்ளத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட அருணாச்சலம் செட்டியார் உதவி பெறும் மேல்நிலைப் பள்ளி மற்றும் கானாடுகாத்தான் பேரூராட்சிக்குட்பட்ட மு.சி.த.மு.சிதம்பரம் செட்டியார் உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழகத்தில் சிறப்பான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு அனைத்து துறைகளையும் சிறந்து விளங்கி வருகிறது. குறிப்பாக கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய இரண்டையும் தனது இரு கண்களாகக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். அதில் கல்வித் துறையில் மாணாக்கர்களின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு கல்வித் துறைக்கென அதிகளவில் நிதி ஒதுக்கீடு செய்து கல்வித் துறையில் புரட்சியை ஏற்படுத்த வருகிறார்கள். அந்தவகையில், கல்வி வளர்ச்சி பெற்ற மாநிலங்களில் உயர் கல்வியில் இந்திய அளவில் 24 சதவீதம் உள்ளது. அதில் தமிழகம் 52% உயர்கல்வியில் வளர்ச்சி பெற்ற மாநிலமாக சிறந்து விளங்கி வருகிறது.

இதுபோன்று, பள்ளிக் கல்வித்துறையில் மாணாக்கர்களுக்கு பயனுள்ள வகையில், பேருந்து பயண அட்டை, இலவச நோட்டு புத்தகங்கள் உள்ளிட்ட அனைத்தையும் பெற்றோர்களின் சிரமத்தை குறைக்கின்ற பொருட்டு மாணாக்கர்களின் பெற்றோரின் நிலையிலிருந்து அனைத்தையும் வழங்கி வருகிறார்கள். அத்திட்டங்களில் ஒன்றாக சிறந்து விளங்கி வரும் விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் இருந்து பள்ளிக்கு வருகின்ற மாணாக்கர்கள் பெருமளவில் பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் நமது மாவட்டத்தில் மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் தற்போது தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, இன்றைய தினம் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஓ.சிறுவயல் அரசு மேல்நிலைப்பள்ளியில் 20 மாணவர்களுக்கும், 34 மாணவியர்களுக்கும், கோட்டையூர் பேரூராட்சிக்குட்பட்ட தஞ்சாவூர் அருணாச்சலம் செட்டியார் அரசு மேல்நிலைப் பள்ளியில் 55 மாணவர்களுக்கும், 35 மாணவிகளுக்கும், சிதம்பரம் செட்டியார் (பெண்கள்) உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் 211 மாணவிகளுக்கும், பள்ளத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட அருணாச்சலம் செட்டியார் உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் 59 மாணவர்களுக்கும், 43 மாணவிகளுக்கும், கானாடுகாத்தான் பேரூராட்சிக்குட்பட்ட மு.சி.த.மு.சிதம்பரம் செட்டியார் உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் 5 மாணவர்களுக்கும், 12 மாணவிகளுக்கும் என 5 பள்ளிகளைச் சார்ந்த மொத்தம் 474 மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

போட்டிகள் நிறைந்த இந்த நவீன காலத்தில் மாணாக்கர்கள் தங்களது அறிவுத்திறன்களை வளர்த்துக் கொள்வது மிகவும் அவசியமாக கருதப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு, சிறந்த முறையில் பயில வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொலைநோக்கு சிந்தனையுடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் மூலம் பயன் பெற்று வரும் மாணவ மாணவியர்கள், அதனை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தங்களது பெற்றோர்களுக்கும் தங்களது ஆசிரியர்களுக்கும் தாங்கள் பயின்ற பள்ளிக்கு பெருமை சேர்த்திட வேண்டும்.

மேலும், மேற்கண்ட பள்ளிகளில் மேம்படுத்த வேண்டிய பல்வேறு மேம்பாட்டு வசதிகள் குறித்து கோரிக்கைகளும் வரப்பெற்றுள்ளன. அக்கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், மேற்கண்ட பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு பொது தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு ஊக்க தொகையாக முதலிடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.10,000/மும், இரண்டாம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.5,000/ மும், மூன்றாம் இடம் பெற்றவர்களுக்கு தலா ரூ.3,000/ மும் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தனது சொந்த நிதியிலிருந்து வழங்கினார்.

முன்னதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் திருப்பத்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தில் மொத்தம் 48 கடைகள், ஒரு கழிப்பறை, ஒரு சைக்கிள் ஸ்டாண்ட் ஆகியவைகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கென திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் இரா.சிவராமன், சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் திருமதி மு.சரண்யா, பேரூராட்சி தலைவர்கள், திருமதி கோகிலாராணி (திருப்பத்தூர்) கார்த்திக்சோலை (கோட்டையூர்), திருமதி எஸ். சாந்தி (பள்ளத்தூர்), திருமதி ஆர்.ராதிகா (கானாடுகாத்தான்) மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர்கள், பள்ளிக்கல்வி துறையை சார்ந்த அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்டம் 32வது வட்ட தி.மு.க. சார்பில் நாம் என்ற உறுப்பினர் விஜய மௌசுமி பொன்.சேது ராமலிங்கம் ஏற்பாட்டில் மாபெரும் மருத்துவ முகாமை மாநகர் மாவட்டச் செயலாளர் தளபதி எம்.எல்.ஏ. துவக்கி வைத்த போது எடுத்த படம். உடன் மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், கழக நிர்வாகிகள் மூவேந்திரன், ஜெயராஜ், பொன் சேதுராமலிங்கம், சரவண புவனேஸ்வரி, முத்து கணேஷ், ஆறுமுகம், இளைஞர் அணி சௌந்தரராஜன், யாசின் பாபு மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பள்ளிப்பட்டில் பிரச்சாரக்கூட்டம்!

திருவள்ளூர், செப்.3-

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் குமாராஜ்பேட்டை, மேளப்பூடி, ஊராட்சிகளில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திராவிட மாடல் அரசின் சாதனைகள் விளக்கியும் நாடாளுமன்றதேர்தலுக்கான திண்ணைப் பிரச்சார கூட்டம் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் ஆலோசனைப்படி பள்ளிப்பட்டு மத்திய ஒன்றிய பொறுப்பாளர் பி.டி.சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத் பாலா பங்கேற்று பேசுகையில் திராவிடம் மாடல் ஆட்சியில் குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் என பல்வேறு திட்டங்களை பெண்களுக்கான வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்து வருவதை பட்டியலிட்டு பேசினார்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி!

# எல்.ஐ.சி.யின் 67வது பிறந்த நாள்!

சென்னை, செப்.3–

வரலாற்றில் இன்று இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், (LIC) இந்தியாவின் பிரம்மாண்டமான நிதி நிறுவனம், இன்று (செப் 1) 67 வது பிறந்த நாளைக் கொண்டாடுகிறது. 246 தனியார் காப்பீட்டு நிறுவனங்களை இணைத்து நாட்டுடைமையாக்கி 1956 செப்டம்பர் 1 ஆம் நாள் உருவாக்கப்பட்டது.

கடந்த 64 ஆண்டுகளாக தேச நிர்மாணப் பணிகளுக்கு எல்.ஐ.சி.யின் பெரும் பங்களிப்பு மகத்தானது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் துவங்கி, 13 வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டு வரை எல்.ஐ.சியின் மொத்த பங்களிப்பு ரூ. 34 லட்சம் கோடிகளை கடந்துள்ளது. அரசு நிறுவனமான இதன் வெற்றி ஆயுள் காப்பீட்டுத் தொழிலுக்கு மட்டுமன்றி எல்லாத் தொழில் நிறுவனங்களுக்குமே ஓர் சீரிய முன்னுதாரணம் ஆகும்.


1956–ல் 5 கோடி அரசு முதலீட்டோடு துவங்கிய எல்.ஐ.சி., பின்னர் சட்டத் தேவைகளுக்காக ரூ.100 கோடிகளாக அதன் மூலதனம் உயர்த்தப்பட்டாலும், எந்தவொரு நேரத்திலும் அரசிடம் இருந்து எல்.ஐ.சி கூடுதல் மூலதனத்தை எதிர்பார்த்ததே கிடையாது. அவ்வளவு சிறிய மூலதன தளத்தில் எல்.ஐ.சியின் சொத்து மதிப்பு 32 லட்சம் கோடிகளாக இன்றைய நாளில் வளர்ந்துள்ளது. இது எல்.ஐ.சியின் பளிச்சிடும் சாதனையாகும்.

இம் மாபெரும் தேசத்தின் மூலை முடுக்குக்கெல்லாம் எல்.ஐ.சியின் சிறகுகள் விரிந்துள்ளன. அதன் எதிர்பார்ப்புகள் பொய்த்துப் போகவே இல்லை. உலகம் முழுவதுமுள்ள ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களில் 42 கோடி பாலிசிகளோடு எல்.ஐ.சி எட்டியுள்ள உயரம் ஒப்பிட இயலாத ஒன்று. வேகமாக வளர்கிற நாடுகளின் ஆதாரத்தொழில் வளர்ச்சிக்கு “உள் நாட்டு சேமிப்பு” திரட்டலே மிகச் சிறந்த வழிமுறை என்பதை எல்.ஐ.சி நிரூபித்துள்ளது.

இந்திய ரயில்வே நிதித் தேவைகளுக்காக எல்.ஐ.சியை அணுகிய போது 1.5 லட்சம் கோடிகளை, அதாவது ஆண்டுக்கு 30000 கோடிகள் வீதம் 5 ஆண்டுகளுக்கு, தருவதாக உடனே உறுதி தந்தது. அது போன்று நெடுஞ்சாலை, குடிநீர் திட்டங்கள், போக்குவரத்து, பாலங்கள், துறைமுக மேம்பாடு, நீர்ப்பாசனம், மின்சாரம் என ஆதாரத் தொழில்களுக்கு பெரும் நிதியாதாரங்களை தந்துள்ளது. இவ்வளவு சீரும் சிறப்போடும் பணியாற்றிவரும் – இந்திய பொருளாதாரத்தை தாங்கி நிற்கும் நம்பிக்கை தூணாக விளங்கும் இந்தியாவின் தலை சிறந்த பொதுத் துறை நிறுவனமாகிய எல்.ஐ சியின் பங்குகளை தனியாருக்கு விற்று அதனை ஒழித்துக்கட்ட மோடி அரசு முயன்று வருகிறது.



# அண்ணா சொன்னபடி....!!!



**80**களின் பிற்பகுதியில் நோயுற்றிருந்த எம். ஜி. ஆரின் ஆட்சி காலத்தில், இலங்கை தமிழர் பிரச்சினை ஒரு பக்கம். இந்தித் திணிப்பு மறுபக்க மெனவும், 'அவற்றோடு ஆசிரியர்கள் போராட்டம், ஆர்ப்பாட்டம் சிறைவாசம் என தமிழ்நாட்டு அரசியல் தணலில் சிக்கிய மெழுகாய் தகித்திருந்த காலம்.

ஆளுங்கட்சி அ.தி.மு.க. என்றாலும் அன்றைய செய்தியாளர்களுக்கு தீனியாவது தி.மு.க. தலைவர்களின் அன்றாட மக்கள் நலன் சார்ந்த செயல்பாடுகள் தான்.

தலைவர் கலைஞர் அவர்கள் அப்போது மேலவை உறுப்பினராக இருந்து, அதையும் கலைத்து தொலைத்த எம். ஜி. ஆரின் வன்மத்தை சட்டை செய்யாமல், இலங்கை தமிழர் துயர் துடைக்க மதுரையில் மறைந்த வாஜ்பாய், ஆந்திரத்து என். டி. ராமாராவ் உள்ளிட்ட இந்திய தலைவர்களையும் அழைத்து, மாநாடு நடத்தி, விடுதலைப் போராட்ட அமைப்புகளான டெலோ, டெசோ, ஈ.பி.ஆர்.எல்.எப், பிளாட் போன்றவற்றிற்கு எதிர்க்கட்சியாக இயன்ற நிதியுதவியும் வழங்கினார். இதோடு இணைந்து இந்தித் திணிப்பை எதிர்க்க, தேவநாகரி வடிவில் உள்ள இந்தியாவின் ஆட்சிமொழி என எழுதப்பட்ட சட்டநகல் எரிப்பு போராட்டத்தில் கைதாகி, கைதியுடையை ஏற்குமளவிற்கு, தன்னை வருத்திக் கொண்டு, தமிழ்நாட்டின் தலைப்புச் செய்திகளில் தினம் தினம் வலம் வந்தார்.

எம். ஜி. ஆர். உள்ளபடியே வாய்மூடி மௌனியாகத்தான் இருந்தார். ஆனாலும் அவரது மனதைக் குளிர்வித்து மறுபடியும் மந்திரி சபையில் இடம் பெற நினைத்த மதுரை காளிமுத்து, "கருணாநிதி எங்கு சென்றாலும் நான் விடமாட்டேன். அவர் இந்திர மண்டலம் சென்றாலும், சந்திர மண்டலம் சென்றாலும் விடாமல் பின்தொடர்வேன்." என்றொரு மேடையில் பேசிவிட்டார். வார்த்தைகளை வதம் செய்யாமல், வார்த்தைகளால் வதம் செய்யும் முத்தமிழ் வித்தகரல்லவா நம் தலைவர். ஒரே வார்த்தையில் உடைத்துப் போட்டார். காளிமுத்துவின் கடுப்பான பேச்சை!

"தம்பி காளிமுத்து இன்னும் என்னைப் பின்பற்றுவதில் எனக்கு மகிழ்ச்சி! அதோடு அவர் சந்திர இந்திர மண்டலங்கள் அலைய வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்த வாரம் இந்தித் திணிப்பினை எதிர்த்து காரக்கிரகம் செல்வேன். காளிமுத்து பின் தொடரலாம். " என்று தலைவர் கலைஞர் அவர்கள் போட்ட போட்டில் வார்த்தைகள் இன்றி, வேர்த்து வியர்க்க அமைதியானார் காளிமுத்து.

இப்படி தலைவர் கலைஞரிடம் வாய்விட்டு, வாங்கிக் கட்டிக் கொள்வதில் பேதங்களின்றி, பேசி, பேட்டிகள் கொடுத்து, நீட்டி முழக்கி, நிம்மதியைத் தொலைத்தது அதிமுக கூடாரம். அப்படித்தான் ஒரு நாள் சும்மா இருக்கப் பொறுக்காமல், நாவலர் நெடுஞ்செழியன் " கருணாநிதி என்பது வடமொழிச் சொல். கலைஞர் என்னை நாடினால், நான் வேண்டுமானால், அதை அவருக்கு தமிழ்ப்படுத்தித் தருகிறேன். என்று சொல்லி விட்டார்.

அடுத்தநாளே பத்திரிக்கையாளர் நிறைந்த மன்றத்தில் படக்கென ஒரு நிருபர் இதை நினைவூட்டி தலைவர் கலைஞரிடம் கேள்வி கேட்க, " நாவலர் நெடுஞ்செழியன் பழைய நட்பு மறவாமல் எனக்கு உதவிட வந்ததற்கு முதலில் அவருக்கு எனது நன்றி! ஆனால் ஐம்பதாண்டுகளுக்கு முன்பே, அண்ணல் தங்கோ எனும் தமிழறிஞர் , எனது கருணாநிதி எனும் வடமொழி பெயருக்கு மாற்றாக " அருட்செல்வம் " என மாற்றிக் தருவதாக அறிவித்தார். எதற்கும் அண்ணாவின் இசைவை நாடும் நான், இதற்கும் அவரின் அனுமதி கேட்டேன். இல்லை தம்பி, ஏற்கனவே திரையுலகில், அரசியல், பத்திரிகை, என உனது பெயர் கருணாநிதி என்றே என்றோ, புகழ் பெற்று மக்களை சென்றடைந்து விட்டது. பெயர் மாற்றம் அவசியமில்லை என்று சொல்லிவிட்டார். அண்ணா சொன்னால், அதுவே எனக்கு வேதம் என்பதனால் அருட்செல்வம் எனும் பெயர் மாற்றம் வேண்டாமென அப்போதே விட்டுவிட்டேன். எல்லாம் சரி இவ்வளவு தமிழ் பற்று மிக்க நாவலரின் பேத்தி பெயர் ஸ்வப்னா வாமே! முதலில் அவர் தனது பேத்தியின் பெயரை தமிழ்படுத்தட்டும் " என்று முடித்தார்.

வீணாக வந்து விளக்கில் விழுந்த விட்டில் பூச்சியின் நிலையானது நாவலரின் நிலை.

நிருபர்கள் கூட்டமும் இந்த நெத்தியடி பதிலை ரசித்தப்படியே சிரித்துக் கலைந்தது.

கேள்விக்கணை தொடுப்போரை அந்தக் கேள்வியாலேயே கட்டிப்போடும் வித்தையை அண்ணாவிடம் அணுவளவும் மாறாமல் கற்ற தம்பி தான் என்பதை எப்படியெல்லாம் நிலைநிறுத்தினார் என்பதுநமக்கெல்லாம்மாபெரும்பிரம்மிப்பன்றோ!

அவரே அண்ணாவைப்பற்றி குறிப்பிடும் போது,

"வாதம் செய்வதிலே, வழக்கறிஞர் சிங்கமெல்லாம் தோற்க நேரும்.

பிடிவாதம் செய்வதிலே பேச்சில்லை அண்ணனுக்கு" என்பர்.

இந்த சிறப்பு அண்ணாவின் தம்பி தலைவர் கலைஞருக்கும் மிகவும் பொருந்தும்.



வழக்கறிஞர்.
**வெ. அன்புவாணன்**
கொள்கைப் பரப்பு
துணைச் செயலாளர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி:** ஏண்ணே; ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத், இனி எல்லோரும் 'பாரதம் ( Bharat )' என்றுதான் அழைக்க வேண்டும்; 'இந்தியா ( India )' என்று கூறுவதை நிறுத்த வேண்டும் - என்று அறிவுறுத்தி இருக்கிறாரே ?


**பெரியதம்பி : ஆமாம் தம்பி; நமது நாடு முழுமையிலும் உள்ள 28 அரசியல் கட்சிகளின் கூட்டணிக்கு 'இண்டியா ( I.N.D.I.A. = Indian National Democratic Inclusive Alliance )' என்று பெயர் வைத்ததில் இருந்தே, பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். உள்ளிட்டவை 'இந்தியா' என்று சொல்லுவதற்குத் தயக்கமும், தடுமாற்றமும், அச்சமும் கொண்டுள்ளன. அதன் வெளிப்பாடுதான், இனி இந்தியா என்று கூறாமல், பாரதம் என்று கூற வேண்டும் என ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் அனைவர்க்கும் விடுத்திருக்கும் அழைப்பு.**

**நமது அரசமைப்புச் சட்டத்தின் முதல் பிரிவிலேயே, 'India, that is Bharat, shall be a Union of States' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதில் இந்தியா என்பது மூத்த முன்னோடிச் சொல். அதனால் எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு I.N.D.I.A. என்ற சொல்லை, உயரிய தத்துவார்த்தப் பின்னணிப் பொருளுடன் கூடிய பெயராகத் தேர்வு செய்து, பின்பற்றி வருகிறார்கள்.**

**இனி பாரத் என்று மட்டுமே கூறுவேன் எனப் பிடிவாதம் செய்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் இந்தியாவுக்கு எதிரானவர்களே!**

# ஒரே நாடு ஒரே தேர்தல்: இந்துராஷ்டிர செயல் திட்டம்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!



சென்னை, செப். 3 -

2014 இல் நரேந்திர மோடி தலைமையில் பாரதிய ஜனதா கட்சி அரசு பொறுப்பேற்றதிலிருந்து ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே கல்வி முறை, ஒரே வரி, ஒரே குடும்ப அட்டை என்று எல்லாவற்றையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து டெல்லியில் அதிகாரங்களை குவித்து வைத்துக் கொண்டு எதேச்சதிகார ஆட்சி நடத்துகிறது.

இதன் உச்சகட்டமாக ஒரே நாடு; ஒரே தேர்தல் என்று நீண்ட காலமாக பா.ஜ.க. கூறிவரும் திட்டத்தைச் செயல்படுத்த மோடி அரசு தீவிரமாக முனைந்திருக்கிறது.

இந்திய குடியரசின் முன்னாள் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரே நாடு; ஒரே தேர்தல் குறித்து ஆய்வு செய்திட ஒன்றிய பா.ஜ.க. அரசு குழுவை அறிவித்திருக்கிறது.

குடியரசு தலைவர் பதவியில் இருந்தவரை மரபுகளை மீறி இத்தகைய குழுவுக்கு தலைவராக நியமித்த மோடி அரசின் செயல் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல; கண்டனத்துக்குரியது.

மோடி தலைமையில் ஆட்சியில் அமர்ந்திருக்கும் பாசிச ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க. தனது இந்துராஷ்டிர இலக்கை அடைவதற்காக பல்வேறு சட்டரீதியான ஆயத்தப் பணிகளை, பரிசோதனைகளை செய்துவருகிறது.

குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்புரிமைச் சட்ட நீக்கம், பசுவதைத் தடுப்புச் சட்டம், லவ் ஜிகாத் தடுப்புச் சட்டம், மத மாற்றத் தடைச்சட்டம், புதிய கல்வி(காவி)க் கொள்கை, சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் (உஃபா), என்.ஐ.ஏ. சொத்து சேதத் தடுப்புச் சட்டம், ஆதாரை வாக்காளர் அட்டையுடன் இணைப்பது என பல்வேறு சட்டங்களை இதற்கான சான்றாகச் சுட்டிக்காட்டலாம்.

அதன் வரிசையில் தற்போது, 'ஒரே நாடு, ஒரே தேர்தல்' சட்டத்தையும் நடைமுறைக்கு கொண்டு வர இருக்கிறது.

2014இல் இருந்தே பா.ஜ.க. தனது தேர்தல் அறிக்கையில், 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' என்ற திட்டத்தை முன்வைத்து வருகிறது. இதை நடைமுறைப் படுத்துவதற்கான திட்டங்களை 2017ஆம் ஆண்டு நிதி ஆயோக் வகுத்துக் கொடுத்தது.

2018ஆம் ஆண்டு சட்ட ஆணையம் இந்த 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' திட்டத்திற்காக அரசியலமைப்பு சட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது.

இந்நிலையில், கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் தேதியன்று, இந்திய தலைமை தேர்தல் ஆணையர் சுஷில் சந்திரா "ஒரே நாடு; ஒரே தேர்தல் என்பது நல்ல பரிந்துரை. ஆனால் இதற்கு அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வர வேண்டும். அனைத்து தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவதற்கு தேர்தல் ஆணையம் தயாராக உள்ளது" எனக் கூறி, பா.ஜ.க செயல் திட்டத்திற்கு ஒத்துழைக்கத் தயார் என்று பச்சைக் கொடி காட்டினார்.

தலைமை தேர்தல் ஆணையாளர் கூறியவாறு அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து ஒரே நாடு ஒரே தேர்தல் முறையை செயல்படுத்த தொடக்கமாக, செப்டம்பர் 18 ஆம் தேதி முதல் செப்டம்பர் 28 ஆம் தேதி வரை நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது.

இந்தச் சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் 'ஒரே நாடு; ஒரே தேர்தல்' சட்ட முன்வரைவு தாக்கல் செய்யப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

மக்களாட்சி கோட்பாடுகளின் ஆணிவேர்களை அறுத்து எரிந்து நாடாளுமன்ற ஜனநாயகத்தை குழி தோண்டி புதைத்து, சர்வாதிகார இந்துராஷ்டிரத்தைக் கட்டமைக்கத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க.வின் திட்டத்தை ஜனநாயக முற்போக்கு சக்திகள் கரம் கோர்த்து முறியடிக்க வேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர்வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# பா.ஜ.க.வை எளிதாக தோற்கடிப்போம்!

## ராகுல் காந்தி பேச்சு!

மும்பை, செப். 3 -

மும்பையில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கூறியதாவது:

இந்தியா கூட்டணியில், நம் நாட்டின் 60 சதவீத மக்கள் தொகையை பிரதிநிதித்துவப் படுத்துவதாக உள்ளது. நாம் ஒன்றுபட்டால் பா.ஜ.வை எளிதில் தோற்கடிக்க முடியும். பிரதமரும் அதானியும் ஊழலின் கூட்டணியாக உள்ளனர். அதனை இந்தியா முன்னணி நிரூபணம் செய்யும். கட்சிக் கொள்கைகளில் வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், கூட்டணியில் உள்ள தலைவர்களிடையே ஒன்றுபடுவதற்காக விட்டுக்கொடுத்து போகும் தன்மை உள்ளது.

**ராஷ்டிரீய ஜனதா தளத் தலைவர் லாலு பிரசாத் யாதவ்:**

நாம் ஒற்றுமையாக இல்லாததால், மோடி முன்னோக்கிச் சென்றார். இதனால் நாடு பாதிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இருந்தே பா.ஜ.வுக்கு எதிராக போராடி வருகிறேன். அது நாட்டை எரிக்கும் கட்சி. எங்களைப் பற்றி பொய்களைப் பரப்பி இவர்கள் ஆட்சிக்கு வந்தனர்.

**டெல்லி முதல்வர், ஆம் ஆத்மி தலைவர் அரவிந்த் கெஜ்ரிவால்:**

இந்த கூட்டணி 28 அரசியல் கட்சிகள் மட்டும் இணைந்த கூட்டணி அல்ல. 21ம் நூற்றாண்டின் இந்தியாவை உருவாக்க 140 கோடி இந்தியர்களும் இணைந்த கூட்டணியாகும். நாடு இதுவரை கண்டதிலேயே, மிகவும் ஊழல் நிறைந்த, திமிர் பிடித்த அரசு இது.

### துயரங்களிலிருந்து விடுபட நம்பிக்கையுடன் காத்திருக்கும்

# மக்களின் எதிர்பார்ப்பை 'இந்தியா' கூட்டணி நிச்சயம் நிறைவேற்றும்!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் நம்பிக்கை!



தீக்கதிர்
2023 செப் 02 சனிக்கிழமை
ஆட்சி மாற்றத்திற்கான அச்சாரம்
மதச்சார்பற்ற கட்சிகள் அடங்கிய இந்தியா கூட்டணியின் பாட்னா, பெங்களூரு கூட்டத்தை தொடர்ந்து மும்பையில் நடைபெற்ற 3ஆவது கூட்டமும் வெற்றிகரமாக அமைந்துள்ளது. முதல் இரண்டு கூட்டங்களுக்கு பிறகு பிரதமர் நரேந்திரமோடி இந்த கூட்டணியை கடுமையாக தாக்கி பேசிவருவதில் இருந்து இந்த கூட்டணி குறித்து அவருக்குள் உள்ள அச்சம் வெளிப்பட்டு விட்டது. அதுமட்டுமல்ல, இந்தியா என்ற நாட்டின் அன்புக்குரிய பெயரை பிரதமரும் மத்திய அமைச்சர்களும் பயங்கரவாத அமைப்புடன் ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். அடிமையின் சின்னம் என்றும் வசை பாடுகிறார்கள்.

சென்னை, செப். 3 -

மக்கள் தங்கள் துயரங்களிலிருந்து விடுபட இந்தியா கூட்டணியின் மீது மிகுந்த நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்பை இந்தியா கூட்டணி நிச்சயம் நிறைவேற்றும் என 'தீக்கதிர்' நாளேடு செப்.2 தேதியிட்ட இதழில் "ஆட்சி மாற்றத்திற்கான அச்சாரம்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

மதச்சார்பற்ற கட்சிகள் அடங்கிய இந்தியா கூட்டணியின் பாட்னா, பெங்களூரு கூட்டத்தை தொடர்ந்து மும்பையில் நடைபெற்ற 3ஆவது கூட்டமும் வெற்றிகரமாக அமைந்துள்ளது. முதல் இரண்டு கூட்டங் களுக்கு பிறகு பிரதமர் நரேந்திர மோடி இந்த கூட்டணியை கடுமையாக தாக்கி பேசிவருவதில் இருந்து இந்த கூட்டணி குறித்து அவருக்குள் உள்ள அச்சம் வெளிப்பட்டு விட்டது. அதுமட்டுமல்ல, இந்தியா என்ற நாட்டின் அன்புக்குரிய பெயரை பிரதமரும் மத்திய அமைச்சர்களும் பயங்கரவாத அமைப்புடன் ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். அடிமையின் சின்னம் என்றும் வசை பாடுகிறார்கள்.

இந்தியா என்ற பெயரில் உள்ள சட்டங்களில் அந்த வார்த்தையை மாற்றுகிறார்கள். இந்தியா என்ற பெயரை கேட்டாலே எரிச்சல் அடைகிறார்கள். இந்த கூட்டணியில் சேர்ந்துள்ள மாநில கட்சிகளுக்கு எதிராக அமலாக்கத்துறை, வருமான வரித்துறையை ஏவி திடீர் திடீரென சோதனைகளை நடத்துகிறார்கள்.

கடந்த 9 ஆண்டுகளாக பா.ஜ.க.வும் ஆர்.எஸ்.எஸ். ஸும் பரப்பிய வகுப்புவாத விஷம் இப்போது அப்பாவி ரயில் பயணிகள் பள்ளிக் குழந்தைகளுக்கு எதிராகத் திரும்பியுள்ளது. மோடியின் பாரதம் கொடூரமான பலாத்காரத்தில் ஈடுபட்டவர்களை விடுதலை செய்து கவுரவிக்கிறது. பழங்குடியினர் வன உரிமையை பறிக்கிறது. பழங்குடியினர் மற்றும் தலித்துகள் மீது சிறுநீர் கழிக்க வைக்கிறது.

மாநிலங்களுக்கு வரி வருவாயில் பங்கு மறுக்கப்படுகிறது. எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு ஊரக வேலை உறுதித்திட்ட நிலுவைத் தொகையை வழங்காமல் பழிவாங்குகிறது. நிதி ஆயோக் பரிந்துரையின்படி சிறப்பு மானியங்கள் விடுவிக்கப்பட வில்லை. அமலாக்கத் துறை, சி.பி.ஐ. தலைமை இயக்குநர்கள், தேர்தல் ஆணையர்கள் பா.ஜ.க. நிர்வாகிகள் போல் நியமிக்கப் படுகின்றனர்.

இந்தியா கூட்டணி நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஒற்றுமையுடன் செயல்படுவதால் பா.ஜ.க. வினருக்கு பதற்றம் அதிகரித்துள்ளது. அதனால் தான் நாடாளுமன்றத்தில் கேள்வி கேட்பவர்கள் இடைநீக்கம் செய்யப்படுகிறார்கள்.

மக்கள் நலன் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் தொடர்பாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் கூடிய விரைவில் பொதுக் கூட்டங்களை கூட்டாக ஏற்பாடு செய்ய இந்தியா கூட்டணியின் மும்பை கூட்டம் முடிவு செய்துள்ளது. இந்த கட்சிகள் ஒத்த கருத்துடன் கூட்டாக செயல்பட்டால் பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வருவது சாத்தியமில்லை. பா.ஜ.க. வின் எதேச்சதிகாரமான தவறான ஆட்சியால் பாதிக்கப் பட்டுள்ள மக்கள் தங்கள் துயரங்களிலிருந்து விடுபட இந்தியா கூட்டணியின் மீது மிகுந்த நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள். அவர்க ளின் எதிர்பார்ப்பை இந்தியா கூட்டணி நிச்சயம் நிறைவேற்றும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


**பெருநகர சென்னை மாநகராட்சி மின்துறை**

கலைஞர் 100 1924 - 2023

மி.து.ந.க.எண்.சி.பி.மே2 / பி1 / 3695 / 2023

**குறுகிய கால மறு மின் ஒப்ப அறிவிப்பு**

**பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மண்டலங்களில் உபயோகப்படுத்தும் 1040 எண்ணிக்கையில் ஒயர்லஸ் கருவிகளுக்கு (UHF Wireless sets) PMRTS சேவை 1 வருட காலத்திற்கு வழங்கும் பணி. இப்பணிகளுக்கான தோராய மதிப்பு ரூ.67,39,200/- ஆகும்.**

**ஒப்பந்தாரர்கள் http://tntenders.gov.in இணையதளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் 12.09.2023 பிற்பகல் 03.00 மணிக்குள் பங்கேற்கலாம், 13.09.2023 பிற்பகல் 03.15 மணிக்கு ஒப்பங்கள் திறக்கப்படும்.**

**கண்காணிப்பு பொறியாளர் / மின்சாரம்**

செ.ம.தொ.இ / 4866 / ஒப்பந்தப்புள்ளி / 2023


### அமைச்சர் மா. மதிவேந்தன் தலைமையில்

# வன உயிரியல் பூங்காக்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்!

## வேளச்சேரி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் ஆய்வுக்கூட்டம்!

சென்னை, செப்.3-

வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் தலைமையில் தமிழ்நாடு வனத்துறையால் நிர்வகிக்கப்படும் வன உயிரியல் பூங்காக்களில் செயல்படுத்தப்படும் செயல் திட்டங்கள் குறித்த விரிவான ஆய்வுக் கூட்டம் சென்னை வேளச்சேரி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் (01.09.2023) வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் தலைமையில் தமிழ்நாடு வனத்துறையால் நிர்வகிக்கப்படும் வன உயிரியல் பூங்காக்களில் செயல்படுத்தப்படும் செயல் திட்டங்கள் குறித்த விரிவான ஆய்வுக் கூட்டம் சென்னை வேளச்சேரி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வனத்துறையால் பராமரிக்கப்பட்டு வரும் வன உயிரின பூங்காக்களில் நடைபெற்று வரும் செயல்பாடுகள் குறித்து துறை ரீதியான தலைவர்கள் அமைச்சர்களிடம் விளக்கம் அளித்தனர். அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டி சிறுவர் பூங்கா, வேலூர் அமிர்தி உயிரியியல் பூங்கா, சேலம் குரும்பட்டி உயிரியல் பூங்கா மற்றும் திருச்சி உயிரியல் பூங்கா ஆகியவற்றின் தற்போதைய மேம்பாட்டு பணிகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் அமைச்சர் அவர்கள் உயிரியல் பூங்காக்களில் உள்ள விலங்குகள் நலன் குறித்தும், வன உயிரினங்களுக்கு வனத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் மருத்துவம் குறித்தும் கேட்டறிந்தார். பூங்காக்களைச் சுற்றி பார்க்க வருகை தரும் பொது மக்கள் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்தவும் அறிவுரை வழங்கினார். மேலும் வண்டலூர் உயிரியல் பூங்காவில் கூடுதல் விலங்குகளை காட்சிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

தமிழக முதல்வரின் அறிவிப்பிற்கிணங்க கிண்டி சிறுவர் பூங்காவில் ரூபாய் 20 கோடி மதிப்பீட்டிலும் சேலம் உயிரினப் பூங்காவில் ரூபாய் 8 கோடி மதிப்பீட்டிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறும் வனத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இவ்வாய்வு கூட்டத்தில் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (துறைத் தலைவர்), சுப்ரத் மஹபத்ரா, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாசரா ரெட்டி, இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு திருமதி த.தமிழ்மொழி, அமுது அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா துணை இயக்குநர் (பொறுப்பு), திருமதி. காஞ்சனா மற்றும் சென்னை, சேலம், திருச்சி, வேலூர் மாவட்ட வன அலுவலர்கள் பிரசாந்த், சாசாங், கலாநிதி, திருச்சி உதவி இயக்குநர், சம்பத் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் தலைமையில் தமிழ்நாடு வனத்துறையால் நிர்வகிக்கப்படும் வன உயிரியல் பூங்காக்களில் செயல்படுத்தப்படும் செயல் திட்டங்கள் குறித்த விரிவான ஆய்வுக்கூட்டம் சென்னை வேளச்சேரி, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் நடைபெற்றது.

### தி.மு.க. அயலக அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (இரண்டாவது பட்டியல்)

## தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, எம்.பி., அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. அயலக அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

தலைவர் - எஸ். ஜெயபிரகாஷ் ராஜாஜிபுரம், திருவள்ளூர்

துணை தலைவர் குத்தூஸ் ரகுமான் நேருநகர், திருத்தணி நகரம்,

அமைப்பாளர்-**ஜி.ஜெய்கிருஷ்ணா** பஜார் வீதி, திருவள்ளூர் நகரம்

துணை அமைப்பாளர்கள் பி. ராஜா 1/15, பெருமாள் கோவில் தெரு, கண்ணூர் கிராமம், கடம்பத்தூர் எம்.கருணாநிதி நரசிங்கபுரம், பேரம்பாக்கம் ஜி. மனோகரன் திருமலை ராஜு பேட்டை பள்ளிப்பட்டு வட்டம் மணி கொளத்திகுப்பம் இரா.இ.பேட்டை ராஜசேகர் சுப்பிரமணியநகர், திருத்தணி நகரம். எம். கௌதம் 114/92 தொடூர் கிராமம் இராமஞ்சேரி அஞ்சல் திருவள்ளூர் - 631204 எஸ்.டி. கோபிநாத் சிறுவானூர் கிராமம், திருப்பாச்சூர் டி.டி.சதீஷ், ஜெயாநகர் மெயின் ரோடு, ஜெயாநகர், திருவள்ளூர். சி. ஆண்ட்ரூஸ் 50 அம்பேத்கார் தெரு, சித்தம்பாக்கம் முன்னவேடு அஞ்சல், திருவள்ளூர் - 602021.

### திருவள்ளூர் மத்திய மாவட்டம்

தலைவர் - ஏ.பி.எஸ். சேகரன் 1/4 கே.எஸ். நகர், பூவிருந்தவல்லி, சென்னை 600056

துணை தலைவர் - டி. ரவி, 2 கஸ்தூரிபாய் நகர், சுந்தர சோழபுரம், திருவேற்காடு, சென்னை 600077

அமைப்பாளர் - **ஆர். ஆதிகேசவன்** 10 வெங்கடேஷ்வரா நகர், சத்திரம் பட்டாபிராம், சென்னை 600072

துணை அமைப்பாளர்கள் - எஸ். என். குமார் 1/13 தொழுத் தெரு, காக்களூர் கிராமம், திருவள்ளூர். சி.தங்கராஜ் 18, 8 வது குறுக்கு தெரு, லட்சுமிபுரம், திருநின்றவூர் சு.சந்தோஷ் குமார் 1/41, ஸ்ரீராம் நகர், 2 வது தெரு, திருநின்றவூர் எ. கணேஷ் குமார் 36/67, தெரு வீதி, அம்மன் கோவில் தெரு, நூம்பல், சென்னை600077 டி. சுபசங்கரன் 9, பெருமாள் கோவில் தெரு, சின்னகோலடி, திருவேற்காடு சென்னை600077 வி. ஜெய்சங்கர் 199, சக்தி நகர், காக்களூர் எஸ்டேட், திருவள்ளூர்602003 எம். ராஜாராமன் 4/106 பஜனை கோவில் தெரு மேல்பாக்கம் கண்ணப்பாளையம், சென்னை 77 கே. கண்ணன் 152 பெருமாள் கோவில் தெரு லட்சுமிபுரம், கோடுவள்ளி திருவள்ளூர் - 55 எஸ். சதீஷ் குமார், 3, 133 டாக்டர் அம்பேத்கார் தெரு வெள்ளகுளம், திருவள்ளூர் 25 தீ.குடியரசு 14, அய்யனார் தெரு திருமுல்லைவாயில் சென்னை600060

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - பி.எம்.நீலகண்டன் 43, பஜனைகோவில் தெரு, மேல்ஒட்டிவாக்கம் கிராமம் முசரவாக்கம் அஞ்சல், காஞ்சிபுரம்

துணை தலைவர் - டி. எ. கோபாலகிருஷ்ணன் காகாநெல்லூர், உத்திரமேரூர் காஞ்சிபுரம் மாவட்டம்.

அமைப்பாளர் **ரா.ரங்கன்** வேட்டைக்கார குப்பம் கிராமம், கொடூர் அஞ்சல், செய்யூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - சி.டில்லிபாபு பேராசிரியர் நகர் ஓரிக்கை காஞ்சிபுரம். கி. சிவலிங்கம் கீழத்தெரு மேச்சேரி, மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம். பெ.பராதி பாபு ஸ்ரீராம் நகர் முதல் தெரு, திருவாளூர் கிராமம் பவுஞ்சூர்அஞ்சல், செங்கல்பட்டு மாவட்டம். பூ. இளங்கோவன் சாலையூர் கிராமம் விலங்கனூர் அஞ்சல், செங்கல்பட்டு மாவட்டம். கு.துரைவேல் 16, திருவானைக்கோயில் ஊராட்சி (ம) அஞ்சல், உத்திரமேரூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம். எம்.பி. கதிரவன் முகையூர் கிராமம் மற்றும் அஞ்சல், செய்யூர் வட்டம் செங்கல்பட்டு மாவட்டம் எஸ். விஸ்வநாதன் 6, நேமம் சாலை, பள்ளி பேட்டை, ஈபி காலனி, அச்சரப்பாக்கம் 603301

### தருமபுரி கிழக்கு மாவட்டம்

தலைவர் - ஆர்.ராஜா 91வி. அண்ணா நகர் 3வது தெரு பிடமனேரி, தருமபுரி,

துணை தலைவர் - ஜி. மாரியப்பன் ஜருகு.நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி.

அமைப்பாளர் - **செந்தில்குமார்** சின்னம்பள்ளி பொன்னகரம் வட்டம், தருமபுரி.

துணை அமைப்பாளர்கள் - எம்.சிவகுமார் சினிமா தியேட்டர் எதிரில், இரண்டூர் வலி, தருமபுரி எம்.கே. தமிழரசன் முத்தான் தெரு, நெருப்பூர் பென்னாகரம் வட்டம், தருமபுரி எம்.முருகேசன் எட்டியம்பட்டி, பென்னாகரம் வட்டம், தருமபுரி. ஆர். ரமேஷ் டி. கணிகார அள்ளி, தொப்பூர், நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி எம். தன்ராஜ் வாதலாபுரம், அஜ்ஜன அள்ளி, பென்னாகரம் வட்டம், தருமபுரி. எம்.புகழ்முகிலன் 1/504, வீட்டு வசதி வாரியம், விருபாட்சிபுரம், தருமபுரி. எம்.சக்திவேல் நெசவாளர் காலனி, தருமபுரி, எ. ஆர். முருகேசன் பாரதிபுரம், தருமபுரி.

### தருமபுரி மேற்கு மாவட்டம்

தலைவர் - வா. பாரதி, 1/72, பூனத்தன அள்ளி கிராம்ம் கோவிலூர் அஞ்சல், காரியமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம். துணைத்

தலைவர் - எ. சண்முகம் பொய்யப்பட்டி அஞ்சல், அரூர் அஞ்சல், தருமபுரி மாவட்டம்636906

அமைப்பாளர் - **சி.சரவணன்** பாரதிபுரம், எச்.ஈச்சம்பட்டி அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்636902

துணை அமைப்பாளர்கள் - கேஎஸ். மனோகரன் கெலவள்ளி கிராமம்அஞ்சல், காரிமங்கலம் வட்டம், தருமபுரி மாவட்டம்635202 பி. அண்ணாமலை இட்லப்பட்டி கிராமம், மாம்பட்டி அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்636902 இரா.ஸ்ரீகோகுல்நாத் 135, தருமபுரி மெயின் ரோடு பொ.மல்லாமாபுரம் கிராமம் பாப்பிரெட்டிபட்டி வட்டம், தருமபுரி மாவட்டம்635310 என். குணசேகரன் 115எ, காருக்கனஅள்ளி கிராமம் தாண்டுகாரனஅள்ளி அஞ்சல், பாலக்கோடு வட்டம், தருமபுரி மாவட்டம்636808 எம்எஸ். ராஜ்குமார் 3/147, மருதிப்பட்டி கிராமம் அஞ்சல், அரூர் வட்டம், தருமபுரி மாவட்டம்635305 எம்.யதிந்தர் 74, ஆண்டி கவுண்டர் நகர், மாரண்டஅள்ளி, பாலக்கோடு வட்டம், தருமபுரி மாவட்டம்-636806 ஆர். தளபதி கரகூர் கிராமம், சீரியம்பட்டி அஞ்சல், பாலக்கோடுவட்டம், தருமபுரி மாவட்டம்636808 சி.லட்சுமணன் கோழிமேக்கனூர் கிராமம் வெங்கடசமுத்திரம்அஞ்சல், பாப்பிரெட்டிபட்டி வட்டம், தருமபுரி மாவட்டம்636905 எ. மதியன்பன் சேலம் மெயின் ரோடு கடத்தூர பாப்பிரெட்டிபட்டிவட்டம், தருமபுரி மாவட்டம்-635303

### கடலூர் கிழக்கு மாவட்டம்

தலைவர் - திரு.மஸ்கட் 2, வது தெரு, தௌத் நகர், குண்டுசாலை, கடலூர் மாவட்டம்

துணை தலைவர் - டிகேபி. சேகர் 275/1, கச்சேரி தெரு, டிகேபி நகர் காட்டு மன்னார்கோயில், கடலூர் மாவட்டம்

அமைப்பாளர் - **ரா வாசு (எ) விசுவராஜ்** 1, மருதமுத்து நகர், சீர்காழி மெயின்ரோடு, அம்மாபேட்டை அஞ்சல் கடவாச்சேரி, சிதம்பரம் வட்டம் கடலூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ப முஹம்மது இத்ரீஸ் சிதம்பரம் மெயின் ரோடு, சித்தம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம் இரா. வீரகுணசேகரன் 13, வானூர் வீதி, குறிஞ்சிப்பாடி, 607302, கடலூர் மாவட்டம் ந.திருநாவுக்கரசு 12, ஆனைக்காரன் தெரு, சிதம்பரம் வட்டம், கடலூர் மாவட்டம் பா.செல்வராஜ் 55, வடக்கு தெரு, பூந்தோட்டம் வாக்கூர் அஞ்சல், சிதம்பரம் தாலுக்கா, கடலூர் மாவட்டம் கோ.பார்த்திபன் 1/55, முருகன்கோயில் தெரு, செல்லஞ்சேரி அஞ்சல், கடலூர் வட்டம், கடலூர் மாவட்டம்

### கடலூர் மேற்கு மாவட்டம்

தலைவர் - எ. கலிலூர் ரகுமான் 122 , பள்ளிவாசல் தெரு, மேல்கவரப்பட்டு கிராமம் மற்றும் அஞ்சல், பண்ருட்டி தாலுகா, கடலூர்மாவட்டம்

துணை தலைவர் - எஸ். சரவணன் 3/2, ராமன் தெரு2 இராமச்சந்திரன் பேட்டை விருத்தாச்சலம் வட்டம் கடலூர் மாவட்டம்

அமைப்பாளர் - **ரெ.சேதுராமன்** 111, மேலவீதி, திட்டக்குடி, திட்டக்குடி தாலுகா, கடலூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - பூ.ராஜா 37, கீழ்கோலாறு வீதி, வசிஸ்டபுரம், திட்டக்குடி வட்டம் கடலூர் மாவட்டம் க.சுரேந்தர் ராஜ் டி 3.5 சர்தார் வல்லபாய் பட்டேல் தெரு, வட்டம்20 நெய்வேலி வட்டம், கடலூர் மாவட்டம் த.வீராசாமி 1/14, வடக்கு தெரு, துறையூர் முருகன்குடி , அஞ்சல், திட்டக்குடி வட்டம் கடலூர் மாவட்டம் பி. ராஜராஜசோழன் 145, கிழக்குத் தெரு, பெருமுளை கிராமம் மற்றும் அஞ்சல், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம் எஸ். ராஜ்குமார் 13, பாரதியார் தெரு, தொரப்பாடி புதுப்பேட்டை அஞ்சல், பண்ருட்டி தாலுகா, கடலூர் மாவட்டம். கிருஷ்ணராஜ் 1இ/256, மாரியம்மன் கோயில் தெரு, புலவனூர் அருகில், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம் இ.செந்தில்குமார் பூதாமூர் புதிய காலனி, அம்மன் கோயில், விருத்தாச்சலம் வட்டம், கடலூர் மாவட்டம்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்

தலைவர் - எம். பூசன்குமார் 3/416 இம்மிடிநாயகனப்பள்ளி கிராமம் மேலுமலை அஞ்சல், , சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி 635115

துணை தலைவர் - சுரேஷ் 2/34 சாரகப்பள்ளி கிராமம் மற்றும் அஞ்சல், தேன்கனிகோட்டை வட்டம் கிருஷ்ணகிரி 635114

அமைப்பாளர் - **எம்.ராஜா** 45, பிரகாஷ் நகர் மெயின், தேன்கனிக்கோட்டை ரோடு, ஒசூர், கிருஷ்ணகிரி635109

துணை அமைப்பாளர்கள் - பிரவின்குமார் 2/559 எஃப் அப்துல்கலாம் நகர் பேரிகை கி, ஒசூர் வட்டம் கிருஷ்ணகிரி - 635105 ஜி.சதீஷ்குமார் 349617/329213, பாரதிநகர், மூக்கொண்டப்பள்ளி, ஒசூர், கிருஷ்ணகிரி635109 எ.புருசோத்தமன் 2/197, மேகலசின்னம்பள்ளி கிராமம் (ம) அஞ்சல் கிருஷ்ணகிரி635120 மு. கணேஷ் 2/306, சஜ்ஜலப்பட்டி கிராமம், ராயக்கோட்டை அஞ்சல், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி சுரேஷ் நேரலகிரி கிராமம். நேரலகிரி அஞ்சல், கிருஷ்ணகிரி வட்டம்635001 எஸ். தீனதயாளன் 3/383 மாட்டு ஒணி கிராமம் மேகல சின்ன பள்ளி கிருஷ்ணகிரி 635120

### விழுப்புரம் வடக்கு மாவட்டம்

தலைவர் - எம்.நூருல்லா 112/1, பஜார் வீதி, புத்தனந்தல் கிராமம், வெள்ளிமேடுபேட்டைஅஞ்சல், திண்டிவனம் வட்டம் விழுப்புரம் மாவட்டம்,

துணை தலைவர் - ஒய். முஸ்தபா 338 பூந்தோட்டம் தெரு வீதி திண்டிவனம் வட்டம் விழுப்புரம் மாவட்டம்

அமைப்பாளர் - **ஜா.காதர் நவாஸ் பி.எஸ்சி., எம்.பி.ஏ.,** 33, காலிமான் கொள்ளை தெரு, திண்டிவனம்604001, விழுப்புரம் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - எம்.சையத் இப்ராஹிம் 1எ3 முத்துகிருஷ்ணன் தெரு கிடங்கள்1 திண்டிவனம்604001 விழுப்புரம் மாவட்டம் தேசம் ஆர்.பாலா (எ)பாலகிருஷ்ணன் 404, புதிய காலனி, பிரம்மதேசம் கிராமம் மற்றும் அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் பி. நடனசபாபதி 58, கலைவாணர் தெரு பெரியதச்சூர் கிராமம் மற்றும் அஞ்சல் திண்டிவனம்வட்டம் எஸ்.பற்குணன் பி.காம் 3343, முத்தாலம்மன் கோவில் தெரு செட்டிகுப்பம் கிராமம், அனுமானத்தை அஞ்சல், மரக்காணம் வட்டம், விழுப்புரம் மாவட்டம் ம. லோகநாதன் எம்.ஏ 46 மாரியம்மன் கோயில் தெரு, நொளம்பூர் கிராமம் மற்றும் அஞ்சல் திண்டிவனம் வட்டம் வீ. ராஜ்குமார் 115 விநாயகர் கோயில் தெரு கட்டாஞ்சிமேடு கிராமம் மேல்சேவூர் மதுரா அஞ்சல் செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம் ஆர்.பெருமாள் 7890, கருமாரி தெரு கூனிமேடு கிராமம் (ம)அஞ்சல் மரக்காணம் வட்டம் தீ. மதிவாணன் 206 மாரியம்மன் கோயில் தெரு கொரளூர் கிராமம், மயிலம் அஞ்சல் திண்டிவனம் வட்டம் எஸ். ஷேக்வாகித் 226 கபூர் ஷாகிப் தெரு பள்ளியம்பட்டு கிராமம் மீனாம்பூர் அஞ்சல் செஞ்சி வட்டம் தா. புனிதன் 10/8 கலைஞர் கருணாநிதி நகர் கிடங்கில்2 திண்டிவனம்

### திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.

தலைவர் - ப.பிரபு, 7/7, மெயின்ரோடு, சுரக்காப்பட்டி, தருமத்துப்பட்டி அஞ்சல், திண்டுக்கல் துணைத்

தலைவர் - ரா. பாலசுப்பிரமணிய துரைராஜா 14, நாடாள்வார் தெரு, பாலசமுத்திரம், பழனி624610.

அமைப்பாளர் - **தா.செபாஸ்டின்,** 19/9, திருவள்ளுவர் சாலை, சண்முகபுரம், பழனி. திண்டுக்கல் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - கெ.ஞானசேகரன், 293, பொம்மணங்கோட்டை, கே.புதுக்கோட்டை அஞ்சல், ரெட்டியார்சத்திரம். திண்டுக்கல்624 622. தே. மணி, 18/1/24, மாரிமுத்து தெரு, கீழக்கோட்டை, சின்னாளப்பட்டி624 301. வீ. கார்த்திக், 614, நேதாஜி நகர், சிவகிரிபட்டி, பழனி. த.அழகுராஜா, '3/188, கிழக்குத் தெரு, குண்டலப்பட்டி, சிறுநாயக்கன்பட்டி அஞ்சல், நிலக்கோட்டை. சை.அன்சர்அலி, 39ஏ, கைவினைஞர் குயவர் 2வது. நாகல்நகர், திண்டுக்கல். சி.ஆர். முருகன் எஸ். பாறைப்பட்டி அஞ்சல்செம்பட்டிவழி ஆத்தூர் வட்டம் - 624707. ப. பாலகிருஷ்ணன் 770 ஆர். எம். காலனி, 8வது கிராஸ் திண்டுக்கல்

### திண்டுக்கல் மாநகரம்

தலைவர் - உ. ரிஜ்வான் முகமது 2/35 நத்தர்சா தெரு பேகம்பூர், திண்டுகல்.

துணை தலைவர் - ரா. மணிகண்ட பிரபு 7/9 கோபால சமுத்திரம் திண்டுக்கல் 624001

அமைப்பாளர் - **மு. நசீர்** 39ஏ / 17 பத்தவச்சலம் நகர் பேகம்பூர், திண்டுக்கல்.

துணை அமைப்பாளர்கள் - அ. மாரிமுத்து 13 என்.ஏ. டிவிஏ நகர் வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர் அ. சந்தியாகு 104 கிழக்கு மரியநாதபுரம் திண்டுக்கல் 3 ஜெ. விமல் பிரேம் ஆனந்த் 113/ஏ மேற்கு மரியநாதபுரம் திண்டுகல் 3 அ. விவிலிய தீபன் 3 எனாமல் பேக்டரி ரோடு8 வது தெரு, விஸ்தரிப்பு ஏரியா மேட்டுப்பட்டி, பேகம்பூர். திண்டுக்கல்ரா. செந்தில்குமார் 9ஏ ஆக்னஸ்மேரி தெரு, சோலைஹால் ரோடு, திண்டுக்கல்

### மதுரை மாநகர் மாவட்டம்

தலைவர் - பிஎம்.ஷேக் அகமது அப்துல்லா 22, செந்தில் குமரன் தெரு, டி.ஆர்.ஓ.காலனி கோ.புதூர், மதுரை7

துணை தலைவர் - எஸ். மாரிமுத்து 194, வ.உ.சி மெயின் வீதி, ஏற்குடி அச்சம்பத்து மதுரை19

அமைப்பாளர் - **எ. சையது அலி** 5எ. தாகூர் நகர், எஸ்எஸ் காலனி மதுரை

துணை அமைப்பாளர்கள் ஜெ.முகமது இஸ்மாயில் மாரியம்மன் கோவில் தெரு, கோரிப்பாளையம், மதுரை2 ஆர். சரத் குமார் 43/16டி பாண்டியன் நகர், அழகப்பன் நகர், மதுரை3 சை.அ.நாகூர் அனீபா 125/103, காமாட்சி நகர் விளங்குடி மதுரை625018 எஸ். சுப்புராஜ் 26, நேதாஜி 3வது குறுக்குத்தெரு, பொன்மேனி மெயின்ரோடு மதுரை பிஎஸ்எ. அப்துல்லா 3/4, சோலை அழகுபுரம் மூன்றாவது தெரு, மதுரை11 எம்.அப்துல் மஜீத் 15, பெரியார் தெரு, டிஆர்ஓ. காலனி, கே.புதூர், மதுரை16 கேபி. காதர் பாட்ஷா 544, எல்லிஸ் நகர், பழைய காலனி குடிசைப்பகுதி, மதுரை16 எ. மன்சூர் ஆரிப் 912/5 யாகப்பா நகர் அண்ணா நகர் போஸ்டு மதுரை மாநகர் மாவட்டம்.

### திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

தலைவர் - ஏ.எஸ்.எம் ஜமால்தீன் 79, பள்ளிவாசல் கீழ 5ம் தெரு, பத்தமடை

துணை தலைவர் - வீ.பிரமார்க்ஸ் நம்பி 119/42, வடக்கு ரைஸ்மில் தெரு தெ.கள்ளிகுளம், இராதாபுரம் தாலுகா

அமைப்பாளர் - **கா.பீர்முகம்மது** பட்டாரியர் தெரு, கல்லிடை குறிச்சி

துணை அமைப்பாளர்கள் - குலசேகரன் 33/34, பெருமாள் கோவில் தெரு கீழபத்தை, களக்காடு அஞ்சல் - 627501 நாங்குநேரி வட்டம் தங்கபிரபு 2, முத்துராமலிங்கம் தெரு, திசையன்விளை அட்பெர்க் ஜெய்சன், பி.இ 14/58 சி.எஸ்.ஐ கோவில் தெரு, கண்ணங்குளம், வள்ளியூர் ஒன்றியம் காஜாமைதீன் 8, கைத்தா தெரு, பத்தமடை சங்கரநாராயணன் வைத்திலிங்கபுரம், விக்ரமசிங்கபுரம், சேக் செய்யது அலி 19ஏபி ஆசாத் தெரு, வார்டு எண் 11 சேரன்மகாதேவி627414

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

தலைவர் - சி. சுஜின் ஜெகேஷ் 63ஈ /11 ஏ2, பெருமாள் நகர், பட்டாசாலியன்விளை, கோட்டார் அஞ்சல் நாகர்கோயில் 629002

துணை தலைவர் - இ. செல்வன் 32ஏ அழகிய நகர், லூத்ரன் தொடக்கப்பள்ளி அருகில் ஆரல்வாய்மொழி, கன்யாகுமரி மாவட்டம்

அமைப்பாளர் - **முகமது பஷீர் (எ) கவிஞர் மு.பஷீர்** 157, 12எ, புளியன்விளை தெரு, பெருவிளை, நாகர் கோவில், கன்னியாகுமரி வட்டம்629003

துணை அமைப்பாளர்கள் - அ, ரபீக் 0எ/1பி செயிண்ட் சேவியர் தெரு, வேத நகர், இடலாக்குடி அஞ்சல் நாகர்கோவில் - 629002 அ.கில்லறி தாமஸ் 8/189சி, அண்ணா நகர், பள்ளம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் 629601 அ.சாதிக் 18/421, முகைதீன் பள்ளித்தெரு, குளச்சல், கன்னியாகுமரி மாவட்டம் வி.என்.நாகராஜன் 2926, வடக்கு ஆண்டிதோப்பு, பூதபாண்டி அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்629852 சாதிக் காதர் 21/52/2 பள்ளித் தெரு குளச்சல் கன்யாகுமரி மாவட்டம்

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்

தலைவர் - ரா கணேசன் காட்டு எடையார், உளுந்தூர் பேட்டை வட்டம் கள்ளகுறிச்சி மாவட்டம் 605751

துணை தலைவர் - சு நகுலன் கரடிசித்தூர் சின்னசேலம் கள்ளகுறிச்சி.606207

அமைப்பாளர் - **மா ராமதாஸ்** 84, மெயின் ரோடு, பழைய மோகூர், சோமண்டார்குடி அஞ்சல், சங்கராபுரம், கள்ளக்குறிச்சி-6060213

துணை அமைப்பாளர்கள் - ச தென்னரசு செல்லம்பட்டு, சங்கராபுரம், கள்ளக்குறிச்சி.606207 ந பழனிசாமி காம்பட்டு, கொனலவாடி, உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி.606107 ரா மணி 32, ஏ, கிணற்றுசந்து கச்சிராயபாளையம் வடக்கனந்தல், சின்னசேலம் கள்ளக்குறிச்சி.606207. சு.பிரபாகரன் 13, மீனாட்சிபுரம், உளுந்தூர்பேட்டை கள்ளக்குறிச்சி.606107 ச கார்த்திகேயன் பரிகம், சின்னசேலம், கள்ளக்குறிச்சி 606207

### இராணிபேட்டை மாவட்டம்

தலைவர் - எ.ஜி. செல்வராஜ், பி.ஏ., பி.எல்., 35, 4 வது குறுக்குத்தெரு தேவி நகர், ஆற்காடு இராணிப்பேட்டை,

துணை தலைவர் - ஆர். முகமது அலி, பி.ஏ., பி.எல்., 1, மதினா சாலை மேல்விஷாரம், வாலாஜா வட்டம், இராணிப்பேட்டை

அமைப்பாளர் **எம்.ஜெயக்குமார்** பி.ஏ., பி.எல்., 2/118எப், வாலாஜா ரோடு அம்மூர் கூட்ரோடு அம்மூர், இராணிப்பேட்டை

துணை அமைப்பாளர்கள் - டி.கே. நெப்போலியன், பி.எஸ்ச. எம்ஏ., எம்.எல்., 62/51தர்மராயர் தெரு, சுவால்பேட்டை, அரக்கோணம் இராணிப்பேட்டை முகம்மது சாதிக் உதீன், எல்.எல்.பி., 77, எல்.எப் ரோடு இராணிப்பேட்டை ஜெ. ஆனந்த் பி.ஏ., பி.எல்., 47, மலையப்பன் தெரு, கிருபில்ஸ்பேட்டை, அரக்கோணம் கே. ராம்குமார் பி.எ., எல். எல்.பி., 1, ஆற்காடு ரோடு, மருத்துவம்பாடி திமிரி எஸ். தமிழ்வாணன் 43, பஜனை கோவி தெரு, துறையூர் கிராமம், நெமிலி, இராணிப்பேட்டை ஆர். ஈஸ்வரி எம்.எ, பி.எல்., 24/1 கீழ்படவேட்டம்மன் கோவில் தெரு, வாலாஜா, இராணிப்பேட்டை பி. ஸ்ரீராம் 7/17 தர்மராஜா கோயில் தெரு, சுவால்பேட்டை ராணிபேட்டை 631004

### தஞ்சை வடக்கு மாவட்டம்

தலைவர் அ.அப்துல் முகம்மது 174, வடக்கு தெரு, சக்கராப்பள்ளி, பாபநாசம் வட்டம், துணைத்

தலைவர் - கே. ராமு 1177, நறுவொளி அக்ரஹாரம், கதிராமங்கலம், திருவிடைமருதூர்

அமைப்பாளர் - **எ. சுந்தரமூர்த்தி,** 3448, சிவன்கோவில் வடக்கு தெரு அம்மாசத்திரம், கும்பகோணம்

துணை அமைப்பாளர்கள் - ஆர். ரவிக்குமார் 1229, செட்டித்தெரு திருபாலத்துறை, பாபநாசம் கே. வெங்கடாஜலபதி 129, நடுத்தெரு, பூண்டி, அம்மாபேட்டை க.துரை 621, ஆடுதுறை சாலை, திருநீலக்குடி எ. ஜாகிர் உசேன், மெயின் ரோடு , பட்டவர்த்தி, புள்ளபூதங்குடி (போஸ்ட்), பாபநாசம் இசட். காஜா உசேன், 7எ 3வது குறுக்குத்தெரு, இளங்கா நகர், கும்பகோணம் எ. சாதிக் பாட்சா 2, ஆசாத் நகர், அய்யம்பேட்டை (போஸ்ட்) பாபநாசம் (தாலுக்கா) ஜெ. லிங்கேஸ்வரன் 27, குட்டியான தெரு, வி.ஜெ. இல்லம், இ.பி. காலனி வழி நடப்பு, கும்பகோணம்

### மயிலாடுதுறை மாவட்டம்

தலைவர் - முனைவர் ஆர். ராஜ்குமார் மஹாலட்சுமி மெட்டல்ஸ் மகாதான தெரு, மயிலாடுதுறை

துணை தலைவர் - மு.கி.சதக்கத்துல்லாஹ் 2/103, ராஜா தெரு, வேலம்புதுக்குடி609306

அமைப்பாளர் - **மா.வைத்தியநாதன்** மெயின் ரோடு, குரங்குபுத்தூர் தலைசங்காடு அஞ்சல்.

துணை அமைப்பாளர்கள் - நாக.பிரகாஷ்ராஜன் எம்.டெக் 2/492, சாலைத்தெரு, திருவெண்காடு அஞ்சல், சீர்காழி ஆர். சின்னதுரை வடாரங்கம், ரெங்கநாதபுரம், எலத்தூர் அஞ்சல், சீர்காழி தாலுகா, மரியா ஆரோக்கியராஜ் 3/39, மாதாகோவில் தெரு, டி. பண்டாரவாடை, திருவாலங்காடு609803 வீரமணி நடுத்தெரு. நாதல்படுகை, அனுமந்தபுரம் அஞ்சல், சீர்காழி தாலுகா நா. மதியழகன் 4/1, மெயின் ரோடு, இலுப்பூர்609308 கே. ஜி. எஸ். பாண்டியன் கடுக்காமரம், கோபால சமுத்திரம் அஞ்சல், சீர்காழி ட.ஆனந்தராஜ் 1/148 மெயின் ரோடு, வாழ்க்கை மே.மாத்தூர் அஞ்சல், தரங்கம்பாடி ஜி. முகேஷ் 37/28, சந்திரிகுளம் தெரு, கூறைநாடு, மயிலாடுதுறை 609001 எம். அறிவரசன் 1/223 கண்ணதாசன் தெரு சித்தி விநாயகர் நகர் செம்பனார்கோயில் மயிலாடுதுறை மாவட்டம் வி. விஜயபாரதி மகதானபுரம் பள்ளி கூட தெரு மூவலூர் 609806

### விருதுநகர் தெற்கு மாவட்டம்

தலைவர் - மு.வே.பண்டாரச்சாமி 3/492, டி.நமச்சிவாயபுரம் பந்தல்குடி626 113

துணைதலைவர்-தா.ராமசிங்கராஜா645, சிங்கராஜாக்கோட்டை பெரிய தெரு, இராஜபாளையம்626117

அமைப்பாளர் - **வெ.சூரியநாராயணன்** 4/702, மேற்குத் தெரு சுந்தரராஜபுரம்626 189

துணை அமைப்பாளர்கள் - சே.அமுதரசன் அன்பகம், பெரிய நகர், சிவகிரி மெயின் ரோடு, மேலூர் துரைசாமிபுரம் அ. அப்துல்ரகுமான் 87, காட்டுபாவா தெற்குத் தெரு, அருப்புக்கோட்டை626 101 ஜெ.ராஜேந்திரன் 1109, வடக்குத் தெரு, கஞ்சநாயக்கன்பட்டி626 101 ரா.மாரிசாமி 3/227, பிள்ளையார் கோவில்தெரு, மயூர்நாதபுரம்626 202 நி.சிவகுமார் 52, ஆராய்ச்சிப்பட்டி பிள்ளையார் கோவில் தெரு

### வேலூர் மாவட்டம்

தலைவர் - வி. சுரேஷ்பாபு 123 எ. அருள் ஜோதி நகர், கண்ணபிரான் தெரு, புதுவசூர் வேலூர்632009

துணை தலைவர் - பி. சேட்டு 21, கைலாஸ் படவேட்டம்மன் கோயில் தெரு, களாஸ்பாளையம், சார்பனாமேடு, வேலூர்63200

அமைப்பாளர் - **டி. லோகு** 44/62, பிள்ளையார் கோயில் தெரு, வேல்ப்பாடி, வேலூர்

துணை அமைப்பாளர்கள் - இ.முகமது 65, பெரிய மசூதி தெரு, செக்கனூர், ஊசூர் அணைக்கட்டு வட்டம்632105 ஆர். பரத்சிங் 43/51, பிள்ளையார் கோயில் தெரு, சேண்பாக்கம், வேலூர்632008 ஜீலான் 24, கன்சால்பேட்டை, பெங்களூரு சாலை, அசராத மக்கான், வேலூர்632004. எஸ். சந்திரகுமார் 5/36 சர்ச் தெரு, செஞ்சி மேட்டூர், செஞ்சி அஞ்சல், கீ.வ குப்பம் வட்டம்632202 கே. நாகராஜ் முல்லை நகர், லிங்குன்றம், குடியாத்தம் வட்டம்632602 எஎம்.சாமிநாதன் 1/61, காந்திஜி ரோடு, அரியூர், வேலூர் வட்டம்632051ஆ.அருள்ஜோதி 31, அண்ணா தெரு, கழிஞ்சூர், காட்பாடி, வேலூர்632006

### கோவை மாநகர் மாவட்டம்

தலைவர் - ம.ராஜ்குமார் 229, ரங்க கோனார் வீதி, காட்டூர், ராம்நகர் கோவை9

துணை தலைவர் - ஷேக் முகம்மது 44, ராமலிங்கம் காலனி கோவை43

அமைப்பாளர் - **தி.கண்ணன்** 20/2, சாஸ்திரி வீதி, கோவில் மேடு, கோவை25

துணை அமைப்பாளர்கள் - சா.கருணாநிதி 17, ஆண்டாள் வீதி2 லட்சுமிபுரம், பீளமேடு, கோவை4 இரா.திலக் பாபு 40, பெரியார் நகர், மசக்காளிபாளையம், உப்பிலிபாளையம் அஞ்சல், கோவை15 எஸ். ஜனார்த் 5, பழனியப்பா நகர் எக்ஸ்டன்சன் ராமநாதபுரம், கோவை 45 என். எஹியாகான் 153, வி.எச். ரோடு கோவை01 இர. பாலசுப்பிரமணியன் பி2, வெங்கடேசா அப்பார்ட்மெண்ட், நீலக்கோணாம் பாளையம், கோவை15

### கோவை வடக்கு மாவட்டம்

தலைவர் - வி. பார்த்திபன் 6/7, மாகாளியம்மன் கோவில் வீதி, தேவம்பாளையம், சர்க்கார்சாமகுளம், கோவை

துணை தலைவர் - பி. செல்வராஜ் 19, பட்டக்காரர் வீதி, வடிவேலாம்பாளையம், புழுவப்பட்டி அஞ்சல், கோவை-101

அமைப்பாளர் - **கோவை பாபு (எ)செல்வகுமார்** 13/17இ, நேரு நகர் கிழக்கு, 3வது வீதி, காலப்பட்டி ரோடு , கோவை014

துணை அமைப்பாளர்கள் - வெ.ரேணுகோபால் 15/3/2எ விசுவாசபுரம், விளாங்குறிச்சி, கோவை ரஞ்சித் கமல் 11/18, பாபா நகர், பி &டி காலனி கவுண்டம் பாளையம், கோவை எஸ். விஜயன் 1/141 ரங்கம்மாள் காலனி, என்ஜிஜிஓ காலனி, கோவை எஸ்.ஆர். மதன் 6, பிரைட் கார்டன், ராமமூர்த்தி ரோடு, செல்வபுரம் கோவை641026 சுறா சுரேஷ், பி.இ., 5/44, காளிபாளையம் வெள்ளமடை அஞ்சல், கோவை110

### கோவை தெற்கு மாவட்டம்

தலைவர் - இ.ஆர்.எஸ். ராம்மோகன் 4/101, சின்னாம் பாளையம், பொள்ளாச்சி642003

துணை தலைவர் - ஆ.உதயகுமார் 7/282, பெரிய தோட்டம், நவக்கரை, கோயம்புத்தூர்641105

அமைப்பாளர் - **விக்னேஷ் ராஜ்குமார்** 5/113, எஸ். புரவிபாளையம் அஞ்சல், பொள்ளாச்சி642110

துணை அமைப்பாளர்கள் கே.எஸ். அப்துல் அஜீஸ் 2/23, தேர் வீதி, கோட்டூர் மலையாண்டிபட்டினம் ஆனைமலை642114 சாதிக் பட்சா (எ)கோவை சாதிக் 70, லட்சுமி நாராயணன் நகர், போத்தனூர் மதுக்கரை நரேன் சபரீஷ் 28, ஆபீசர்ஸ் காலனி பேரூர் பச்சபாளையம் கோயம்புத்தூர்641010 சார்லஸ் (எ)ஜோசப் அகஸ்டின் 17/1701, முஸ்லீம் காலனி, மதுக்கரை641105 கந்தசாமி 3/201எ குளத்தூர் ரோடு வெங்கிட்டாபுரம் ரோடு, நீலாம்பூர், கோயம்புத்தூர் கே. பிரபு 2/359 காந்தி நகர், வட புதூர் கிணத்துக்கடவு கோயம்புத்தூர் 642109

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள் : 01.09.2023

**எம்.எம்.அப்துல்லா, எம்.பி.,**
செயலாளர்
தி.மு.க. அயலக அணி.




திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஒன்றியம், கொளத்துப்பாளையம் பேரூராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் டிராக்டர் வாகனத்தினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெசாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல. பத்மநாபன், தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர், ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், கொளத்துப்பாளையம் பேரூர்க் கழகச் செயலாளர் கே.கே.துரைசாமி உட்பட பலர் உள்ளனர்.

# மத்திய ஆசிய கடற்கரை கைப்பந்து போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு ஊக்கத்தொகை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

*சென்னை, செப்.3*

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் சார்பில் மத்திய ஆசிய கடற்கரை கைப்பந்து போட்டியில் கலந்து கொள்ளும் வீரர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டி ஆகியவற்றிற்கு ஊக்கத்தொகையினை நேற்று முன்தினம் வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்களாதேஷ் நாட்டில் 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் தேதி முதல் செப்டம்பர் 16-ஆம் தேதி வரை நடைபெற உள்ள மத்திய ஆசிய கடற்கரை கைப்பந்து போட்டியில் கலந்து கொள்ளும் தமிழ்நாட்டு கைப்பந்து வீரர்கள் ர.ராபின். எஸ்.பரத், வீராங்கனைகள் செல்வி டி.ஜனனி, செல்வி எஸ்.பவித்ரா மற்றும் பயிற்றுநர் எம்.சஞ்சய் ஆகியோருக்கு விமானக் கட்டணம், விசா செலவுகள் மற்றும் பிற செலவினங்களுக்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் சார்பில் ரூ.4,58, 720/-க்கான காசோலையினை நேற்றுமுன்தினம் (01.09.2023) நேரு உள்விளையாட்டரங்கில் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர் பேரவை சார்பில் 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 6 ஆம் தேதி முதல் செம்டம்பர் 9ஆம் தேதி வரை நடைபெற உள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிக்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் சார்பில் ரூ.8,00,000/-க்கான காசோலையினை மருத்துவக் கல்லூரி மாணவர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி, கைப்பந்து சங்க நிர்வாகிகள், கைப்பந்து வீரர் மற்றும் வீராங்கனைகள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





கழகத் தலைவர் –முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க மருத்துவ அணியின் மாவட்டத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம், சென்னை தியாகராயர் நகரில் அமைந்துள்ள 'தி அக்கார்ட் மெட்ரோபாலிட்டன்' ஹோட்டலில் நடை பெற்றது.கழக மருத்துவ அணிச் செயலாளர் மரு.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அனைத்து நிர்வாகிகளையும் வரவேற்று, திராவிட இயக்க வரலாறு தொடங்கி மருத்துவ அணியின் செயல்பாடுகள், இலக்குகள் வரையில் பல்வேறு செய்திகளைக் குறிப்பிட்டு தொடக்க உரை நிகழ்த்தினார். கழக மருத்துவ அணி மாநிலத் தலைவர் மரு.கனிமொழி என். வி.என் சோமு எம்பி இக்கூட்டத்திற்குத் தலைமையேற்று, முகாம்கள், கலைஞர் நூற்றாண்டு விழா பணிகள், அணியின் இலக்குகள், நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளிட்டவை குறித்து உரையாற்றினார்.

### நீட்: தமிழ்மக்களின் ஒட்டுமொத்தக் குரலை வெளிப்படுத்திய அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு நன்றி!

# காலை உணவுத் திட்டம் தந்த - முதல்வருக்கு நெஞ்சார்ந்த நன்றி!

## கழக மருத்துவ அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில் தீர்மானம்!

### டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி. தலைமை! டாக்டர் எழிலன் எம்.எல்.ஏ. வரவேற்புரை! அமைச்சர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

சென்னை, செப். 3-

கழகத்தலைவர்-முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தி.மு.க மருத்துவ அணியின் மாவட்டத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம், சென்னை தியாகராயர் நகரில் அமைந்துள்ள 'தி அக்கார்ட் மெட்ரோபாலிட்டன்' ஹோட்டலில் நடை பெற்றது.

கழக மருத்துவ அணிச் செயலாளர் மரு.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அனைத்து நிர்வாகிகளையும் வரவேற்று, திராவிட இயக்க வரலாறு தொடங்கி மருத்துவ அணியின் செயல்பாடுகள், இலக்குகள் வரையில் பல்வேறு செய்திகளைக் குறிப்பிட்டு தொடக்க உரை நிகழ்த்தினார்.

கழக மருத்துவ அணி மாநிலத் தலைவர் மரு.கனிமொழி என்.வி.என் சோமு எம்பி இக்கூட்டத்திற்குத் தலைமையேற்று, முகாம்கள், கலைஞர் நூற்றாண்டு விழா பணிகள், அணியின் இலக்குகள், நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளிட்டவை குறித்து உரையாற்றினார்.

வனத்துறை அமைச்சர் மரு.மா.மதிவேந்தன் - மருத்துவ அணி சார்பில், மேற்கொள்ளப்பட வேண்டிய கலைஞர் நூற்றாண்டுப் பணிகள் குறித்து சிறப்புரை நிகழ்த்தினார்.

மருத்துவ அணி துணைத் தலைவர்கள் மரு.எம்.செந்தில்நாதன், மரு.எ.வ.வே. கம்பன், துணைச் செயலாளர்கள் மரு.அஞ்சும் பூபதி, எஸ்.ஏ.ரமேஷ், மன்சூர் அலிகான் உள்ளிட்டோர் மருத்துவ அணியின் செயல்பாடுகள் குறித்து உரையாற்றினர்.

மருத்துவ அணி இணைச் செயலாளர்கள் மரு.இரா. இலட்சுமணன் எம்.எல்.ஏ, மரு.கோகுல் கிருபாசங்கர், துணைச் செயலாளர்கள் மரு.செ.வல்லபன், மரு. ஜெ.அருண், மரு.ஆர்.டி. அரசு, மரு.ஆர்.அண்ணாமலை, மரு.கலை கதிரவன், திருமதி ஆர்.திலகவதி ஜெயராஜ், ராஜேஷ் பாபு, செண்பக விநாயகம் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

தொடர்ந்து மாவட்டத் தலைவர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் தீர்மானங்களை நிறைவேற்றித் தந்து தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

மருத்துவ அணியின் பணிகளை சீரோடு ஒருங்கிணைப்பதற்காக மாநில நிர்வாகிகளுக்கு பொறுப்பு மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டன கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ள பணிகளுக்கு பொறுப்பாளர்களும் இக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டனர்.

சென்னைமேற்குமாவட்ட மருத்துவ அணி சார்பில் மாநாடு மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக ஐம்பதாயிரம் ரூபாய் முதற்கட்ட நிதியாக வழங்கப்பட்டது.

மருத்துவ நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில் 12 தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

அத்தீர்மானங்கள்வருமாறு:-

உணவு வழங்குவதன் மூலம் கல்விக் கூடங்களுக்கு குழந்தைகளை வரவழைக்கும் தத்துவத்தை உலகிற்கு வழங்கிய நீதிக் கட்சி முன்னோடி, வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி. தியாகராயர் அவர்களின் வழித்தோன்றலாக, தமிழ்நாடு முழுவதும் உள்ள பள்ளிக் குழந்தைகளின் உணவுத் தேவையையும் ஊட்டச்சத்து தேவையையும் நிறைவேற்றும் வகையில், 31,000 பள்ளிகளில், 17,00,000 மாணவர்கள் பயன்பெறத்தக்க வகையில், இந்தியாவிலேயே முதன்முறையாக 'முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம்' வழங்கிய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு கழக மருத்துவ அணி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

நீட் தேர்வைத் திணிக்கும் ஒன்றிய அரசு மற்றும் ஆளுநரைக் கண்டித்து கழக இளைஞரணி, மாணவரணி மற்றும் மருத்துவ அணி சார்பில் மாபெரும் உண்ணாவிரத அறப்போரை தலைமையேற்று ஒருங்கிணைத்து, நீட் தேர்வுக்கு எதிரான தமிழர்களின் ஒட்டுமொத்தக் குரலை வெளிப்படுத்திய, கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கழக மருத்துவ அணி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

நீட் தேர்வுக்கு எதிரான உண்ணாவிரத அறப்போரை, இளைஞரணி மற்றும் மாணவரணி உடன்பிறப்புகளோடு இணைந்து மாவட்டம் தோறும் ஒருங்கிணைத்து பெருந்திரளாக பங்கேற்ற மருத்துவ அணியின் அனைத்து நிலை நிர்வாகிகளுக்கும் கழக மருத்துவ அணி பாராட்டு தெரிவித்துக் கொள்கிறது.

அறிவியல்துணைகொண்டு உலகை வெல்ல முடியும் என்பதை நிரூபிக்கும் வகையில் சந்திரயான் 3 விண்கலத்தை சந்திரனின் தென்பகுதியில் வெற்றிகரமாக தரையிறக்கிய, தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியல் அறிஞர் வீரமுத்துவேல் உள்ளிட்ட அவரது குழுவினர் அனைவருக்கும் கழக மருத்துவ அணி வாழ்த்து தெரிவித்துக் கொள்கிறது.

கழக மருத்துவ அணி நிர்வாகத்தை தொகுதி அளவில் விரிவாக்கம் செய்து, செவிலியர்கள், மருந்தாளுனர்கள், இயன்முறை மருத்துவர்கள், மருத்துவ தொழில் நுட்ப பணியாளர்கள் உள்ளிட்ட மருத்துவத் துறை சார்ந்தவர்களை உள்ளடக்கி இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பொறுப்புகளை உருவாக்க அனுமதி அளித்து, உரிய பொறுப்பாளர்களை தேர்வு செய்து அறிவிக்க வழிகாட்டிய, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு, கழக மருத்துவ அணி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

மாநில உரிமைகளைப் பறிக்கும் வகையிலும், மருத்துவ கல்வியில் தடைகளை ஏற்படுத்தும் வகையிலும் ஒன்றிய அரசால் கொண்டு வரப்பட்ட, 'NEXT' தேர்வுக்கு எதிராக தொடர் அழுத்தம் கொடுத்து, தேர்வு ஒத்தி வைக்கப்பட காரணமாக அமைந்த கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு, கழக மருத்துவ அணி நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு மண்டலம் மற்றும் பிற மாநிலங்களில் ஆங்கில கருத்தரங்கங்கள் நடத்துவது, மாவட்ட அளவில் இரத்ததான முகாம்கள், ஒன்றியம் மற்றும் பகுதி அளவில் இலவச மருத்துவ முகாம்கள், ஊரக சுகாதார நிலையங்களில் கூடுதல் தேவைகளை அறிந்து அவ்வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய பணிகளை செவ்வனே மேற்கொள்வது என கழக மருத்துவ அணி தீர்மானிக்கிறது.

தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பை சிதைக்கும் வகையிலும், தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவக் கல்வி கனவுகளை அழிக்கும் வகையிலும், உயிர்பலி வாங்கும் நீட் என்கிற ஏதேச்சிகார கொடுங்கோன்மைக்கு எதிராக, தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 'நீட் விலக்கு' மசோதாவிற்கு ஒப்புதல் அளிக்க வழிவகை செய்யுமாறு ஒன்றிய அரசை, கழக மருத்துவ அணி வலியுறுத்துகிறது.

இந்திய அரசியல் சாசனத்திற்கு எதிராக, தமிழ்நாடு சட்டமன்றத்தையும் அதனை தேர்ந்தெடுத்த மக்களையும் அவமதிக்கும் வகையில், தன் அதிகார வரம்பை மீறி தமிழ்நாட்டின் 'நீட் விலக்க மசோதாவிற்கு' ஒப்புதல் அளிக்க மாட்டேன் என தெரிவித்த ஆளுநர் அவர்களுக்கு, கழக மருத்துவ அணி கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு முழுவதுமிருந்து மருந்தாளுநர்களிடமிருந்து வந்த கோரிக்கையை, நாடாளுமன்றத்தில் எடுத்து வைத்து ஆன்லைன் மருந்து விற்பனைக்கு எதிராக வலுவான குரலை பதிவு செய்த, கழக மருத்துவ அணித் தலைவர் மருத்துவர் கனிமொழி என்.வி.என் சோமு எம்.பி அவர்களுக்கு மாநில நிர்வாகிகள் கூட்டம் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறது.

தமிழ்நாடு முழுவதும் மருத்துவத் துறை சார்ந்தவர்களை கழகத்தில் இணைக்கும் வகையில், கழக மருத்துவ அணிக்கான உறுப்பினர் சேர்க்கை பணிகளை தீவிரமாக மேற்கொள்வது என கழக மருத்துவ அணி தீர்மானிக்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று, அவரது மேலான தலைமையில் கழக மருத்துவ அணியின் மாநில மாநாட்டை வரும் ஜனவரி மாதம் சென்னையில் சிறப்போடு நடத்துவது என கழக மருத்துவ அணி தீர்மானிக்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர் மரு. ஆர்.ராஜேஸ்வரி மோகன் காந்தி நன்றி கூறினார்.

# 'மகா கவிதை!'

## கவிப்பேரரசு வைரமுத்துவின் புத்தம் புதிய கவிதை நூல்!

சென்னை, செப். 3-

இதுவரைஎந்தஊடகத்திலும்வெளிவராத கவிஞர் வைரமுத்துவின் புத்தம் புதிய படைப்புக்கு 'மகா கவிதை' என்று பெயர் சூட்டப்பட்டிருக் கிறது.

நூலின் தலைப்பும் முகப்பும் வெளியிடப்பட்டி ருக்கின்றன. கவிஞர் வைரமுத்துவின் 39ஆம் படைப்பு இது. நீண்ட ஆண்டுகளுக்குப் பிறகு வெளிவரும் கவிஞர் வைரமுத்துவின் கவிதை நூல் இதுவாகும்.

நிலம்,நீர்,தீ,வளி,வெளிஎனும்ஐம்பூதங்களையும்ஆராய்ந்துபடைத்தகவிதையாக 'மகா கவிதை' அறியப்படுகிறது.


தமிழில் இந்த வகை இலக்கியத்தில் இதற்குமுன் இல்லாத புது முயற்சி என்று சொல்லலாம்.

'சூர்யா பதிப்பகம்' நூலைத் தீவிரமாகத் தயாரித்துக் கொண்டிருக்கிறது.

"சிலமாதங்களில்நூல்வெளியிடப்படும்" என்று கவிஞர் வைரமுத்து அலுவலகம் தெரிவிக்கிறது.




# கலைஞரின் கடிதங்கள் - காலத்தின் கல்வெட்டு!



நாகப்பட்டினம் மாவட்டத்தில், நான் பிறந்த சிற்றூரான நீர்முளையில் 1990 ஆண்டு வாக்கில், சாலைமார்க்கத்தில் சுந்தரமூர்த்தி என்பவர் முடித் திருத்தகம் நடத்தி வந்தார். அதற்கு பக்கத்திலேயே சிறிய கூரை வீட்டில் ராமையன் டீக் கடை. நாற்று வேலையோ, அறுவடையோ இல்லாத நாட்களில் அதிகாலையில் சிறு கூட்டத்தை அங்கு பார்க்க முடியும். எனது அப்பா வழி தாத்தா இலா.முத்து தி.மு.க.வின் கிளைச் செயலாளர் என்பதால், அந்த கடைத்தெருவில் அடிக்கடி கட்சிக் கூட்டங்கள் நடக்கும். வெளியூரில் இருந்தெல்லாம் வந்து பேசுவார்கள். அதன் தொடர்ச்சியாக சில நாட்களில், முரசொலி என்கிற பெயரை கேட்டு மனதில் பதிகிறேன். அதன்பின்னர் அவருக்கு முரசொலியை வாசித்துக் காட்டும் வழக்கம் ஏற்பட்டது. பள்ளிச் சிறுவர்களாக இருந்த எங்களை முரசொலி படிக்கக்கேட்டு ஆனந்திப்பார். அன்றைக்கு படிக்கச் சொன்ன கலைஞர் கடிதங்களில், என்ன அரசியல் செய்தியை புரிந்து கொண்டிருப்பேனோ எனக்கு நினைவில் இல்லை. ஆனால், இன்றைக்கு அந்த சொற்களை கேட்கையிலும், படிக்கும்போதுபெரும் மலைப்பு ஏற்படுகிறது.

உலக அளவிலும் இப்படி ஒரு பெரும் எழுத்துப் பணியை பார்க்க முடியவில்லை. அரசியல் தலைவராகவும் யாரும், தனது தொண்டர்களுடன் இப்படி ஒரு உரையாடலை நிகழ்த்தியதில்லை என்கிற அளவுக்கு கலைஞரின் கடிதங்கள் பெரும் நிகழ்ச்சி நிரலை உள்ளடக்கியிருக்கிறது. அரை நூற்றாண்டு உரையாடல்

1968 அக்டோபர் 22 ஆம் தேதி தொடங்கிய அந்த பயணம், தனது உடல் நலம் குன்றும் வரை தொடர்ந்தது. 2016 நவம்பர் 15 ஆம்தேதி, பணமதிப்பு நீக்க நடவடிக்கையை உடன்பிறப்புக்கு சொல்லும் வரை ஓயாமல் இயங்கி இருக்கிறது. தி.மு.க. ஆட்சியில் அமர்ந்த காலம் தொடங்கி, குறிப்பாக அவர் முதலமைச்சராக அமர்ந்த காலக்கட்டத்தில் இருந்து, அவர் முதலமைச்சராக இல்லாத காலத்தில், அதிலும் குறிப்பாக அவரது அந்திம காலம் வரை தொண்டர்களிடம் உரையாடுவதற்கு என்றே தேர்ந்தெடுத்த வடிவத்தில் கலைஞரின் குறுக்கு வெட்டுத் தோற்றம் பல ஆச்சர்யங்களை நிகழ்த்துகிறது. இந்த காலகட்டத்தில் தமிழ்நாட்டு அரசியல் வரலாறு மட்டுமல்ல, இந்திய அளவிலான அரசியல், சர்வதேச அரசியல் நிலவரம் ஆகியவை மட்டுமல்ல, அவரே குறிப்பிடுவதுபோல, "குமுறல், கொந்தளிப்பு, கவலை, கலக்கம், ஏமாற்றம், துரோகம்,

இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன. அந்த ரணம் ஆற்றிடும் மருந்துதான் என் கடிதங்கள்" என்கிறார். முதல் கடிதத்துக்கும், கடைசிக் கடிதத்துக்கும் இடைப்பட்ட இடைவெளி 48 ஆண்டுகள். சுமார் அரை நூற்றாண்டு காலம். முதன்முறையாக முதலமைச்சர் பொறுப்புக்கு வருவதற்கு முன்பிருந்தும், ஐந்தாவது முறையாக முதலமைச்சராக பணியாற்றி ஓய்ந்த பின்னரும். இந்த மேலோட்டமான வரலாற்றுக்குள் எத்தனை ரத்தம் தோய்ந்த சம்பவங்கள், நிகழ்வுகள் !

### செங்குத்துப் பிளவுகளும் மனச் சிதைவுகளும்.

1972 ஆண்டில் எம்.ஜி.ராமச்சந்திரனால் தி.மு.க.வுக்குள் ஏற்பட்ட பிளவு, 1976 ஆம் ஆண்டு ஆட்சிக் கலைப்பு, மிசா நெருக்கடி, 1991 ஆண்டு திரும்பவும் ஆட்சிக் கலைப்பு, 1993 வைகோ உருவாக்கிய கட்சிப் பிளவு என கட்சியிலும் ஆட்சியிலும் பல செங்குத்து வீழ்ச்சிகள். தான் பார்த்து பார்த்து உருவாக்கிய வள்ளுவர் கோட்டம் முதல், அண்ணா நூற்றாண்டு நூலகம் வரை அவரது முயற்சிகள் மறைக்கப்பட்ட, சிதைக்கப்பட்ட நேரங்களில் அவரின் ஆற்றாமை என எல்லாவற்றையும் 'உடன்பிறப்பே உன் கவனத்துக்கு' என கொண்டு சென்றுள்ளது. ஆட்சியில் இருந்த காலத்தைவிட, ஆட்சியில் இல்லாத காலத்தில்தான் அவரது கடிதங்கள் தொண்டர்களின் உணர்வு நாடிகளுக்கு புது வெள்ளமென பாய்ந்துள்ளது. அதிலும் குறிப்பாக தேர்தல்களுக்கு முன்பும், பின்பும் வெற்றிக் கொண்டாட்டமாகவும், தோல்விகளில் துவளாது இருப்பாய் என நம்பிக்கை அளிக்கும் தலைவனின் கை தோள் ஆகவும் அவரது கடிதங்களைப் பார்க்கலாம். விழித்திரு; வழி தவறாதே; பழிவரவிடாதே, பணியாற்று பார் புகழும் வெற்றி மகுடம் உனக்கே, புறப்படு தோழா என மறவானாகத் தட்டி எழுப்புகிறார்.



நீரை.மகேந்திரன்
பத்திரிகையாளர்

1968-ல் இருந்து மறவன் என்கிற பெயரில் அன்பு நண்பா என்று விளித்து எழுதப்பட்ட கடிதங்கள், 1971 ஆம் ஆண்டுலிருந்து உடன்பிறப்பே என்று விளித்துத் தொடங்கப்பட்டுள்ளன. அவரது நெஞ்சுக்கு நெருக்கமான அண்ணா இறப்பு, அதன்பின்னர் கட்சியில் தலைமைப் பொறுப்பு, ஆட்சி பொறுப்பு என மிக அவரது அரசியல் வாழ்க்கையில் மிக முக்கியமான 69,71 என இரண்டு ஆண்டுகளில் கடிதம் எழுதப்படவில்லை.

### தொண்டர்களின் 'மைண்ட் வாய்ஸ்'

நேரு சிறையில் இருந்து, இந்திராகாந்திக்கு எழுதிய கடிதங்கள், உலக வரலாற்றை அறிய தரும் ஒரு வழிப் பாதையாக மட்டுமே புரிந்து கொள்ள முடியும். அதேநேரத்தில் கலைஞர் கடிதங்களின்பொதுவான தன்மை என்பது, தனது அறிவை ஆற்றாமையை பகிர்ந்து கொள்வதற்கு மாத்திரமல்ல, அதை உரையாடல் களமாக அதை மாற்றி இருந்தார். பத்திரிகை ஆசிரியராக தலையங்கம் எழுதி தனது கருத்தினை பதிவு செய்யலாம். ஆனால், ஒரு பத்திரிகை ஆசிரியரே, கட்சியின் தலைவராகவும் இருப்பதால் உடன்பிறப்புகளுடன்உரையாடவும்கடிதத்தைதேர்ந்தெடுத்துள்ளார்என்று சொல்லலாம். அவரின் கடிதங்கள் கிட்டத்தட்ட தொண்டர்களின்'மைண்ட்வாய்ஸ்'ஐ பேசுபவையாக இருந்திருக்கின்றன.

"இந்த இயக்கத்தை வளர்க்கத்தான் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டே தவிர, வளர்த்தவன் நான்! அழிக்க முற்படுகிறேன் என யார் கூறினாலும் அவர்களை நீ விட்டு வைத்தது கிடையாது" (18.04.1971) என்கிறார்.

கண்களைக் குளமாக்கிக் கொண்டு இந்த கடிதத்தைப் படித்திடுவாய் என்று எனக்குத் தெரியும். உன் உள்ளத்து உணர்ச்சிகள் உதடுகளின் படபடப்பாக விழிகளில் நீர்த்துளிகளாக வெளிப்படுவதை உணர முடியாதவனா நான்! உன் நெஞ்சுக் கொதிப்பு நீராக வழிகிறது கண்களில், ஆம்! சுடுநீராக காரணம் நான் கண்டுபிடித்தா சொல்ல வேண்டும்? (10.10.72)

ஈ.வெ.கி.சம்பத் பிரிவும், எம்.ஜி.ஆரின் பிரிவின் தொடக்க கால தி.மு.க.வின் மிகச் சோதனையான காலகட்டங்கள். அவை தொண்டர்களின் ஏற்படுத்திய கொந்தளிப்பை பதிவு செய்யலாம். ஆனால், கலைஞரின் கடிதங்களோ தொண்டர்களின் உள்ளத்துடன் உறவாடும் கலையை கைகொள்கிறது. ஆமாம் அல்லது இல்லை என இரண்டில் ஒன்றுக்கு தொண்டன் ஆட்பட்டே ஆகவேண்டும் என்கிற நெருக்கடியை அளிக்கும் எழுத்துகளாக அவை உருமாறுகின்றன.

### அணியம் செய்யும் கடிதங்கள்

நிதி திரட்டும் நிகழ்ச்சி, பொதுக்கூட்ட அழைப்பு, உறுப்பினர் சேர்க்கை அல்லது தேர்தலுக்கு திட்டமிடுதல் என எல்லாவற்றுக்கும் முதற்கட்ட அணியம் செய்வது கடிதங்களில் தான். தொண்டர்களின் எழுச்சியை தனது மனக்கண்ணில் விரித்து பார்ப்பதும், அதற்கு தொண்டர்களின் எதிர்வினையென, அவரே 'வாய்ஸ்ஓவர்' செய்வதும் எழுத்தின் வசியமென நிகழ்கிறது. அவற்றை இப்போது வாசித்தாலும் மயக்கத்தை அளிக்கவல்லதாக உள்ளன.

மகளிர் அணி மாநாட்டுக்கு அழைப்பு விடுக்கிறார். " மழலைகளை அழைத்தவாறும், அரும்புகளை இடுப்பில் அணைத்தவாறும், ஆடவர் கூட்டத்திற்கோர் அறைகூவலாக நாடும், மொழியும் காத்திட நாங்கள் தயார் என்று கரம் உயர்த்திடும் மகளிர் ஆர்வத்தை என்னால் காண முடிகிறது"(12.11.1975)

1975 ஆண்டு, டிசம்பர் 31 ஆம் தேதி கோவையில் நடைபெற்ற மாநாட்டிற்காக, டிசம்பர் 6 ஆம் தேதி " ஆண்டிகள் கூடிடுவோம்" என அழைப்பு விடுக்கிறார். தொடர்ச்சியாக அந்த மாதம் முழுவதும் 8 கடிதங்கள் 'கோவையை நினைத்திடு' என உசுப்புகிறார். "அழைத்தேன் என் ஆருயிரே வந்தாய்,ஆணைகேட்டாய்,ஆணையிடமாட்டேன்;அனைவரும் சேர்ந்து எடுத்த முடிவை அறிவிக்கிறேன் என்று சொன்னேன். செயல்படத்தொடங்கு! என இறுதி நாளில் முடிக்கிறார்.

இதேபோன்றதொரு வேகத்தை 32 ஆண்டுகள் கடந்தும் அவரிடம் காண முடிகிறது. அதுதான் அவரது ஆற்றலுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. 2007 ஆண்டில் தி.மு.க. இளைஞரணி மாநில மாநாடு முதல்முறை யாக நெல்லையில் நடக்கிறது. இளைஞரணிச் செயலாளராக தற்போதைய முதலமைச்சர் மாநாட்டுப் பணிகளைக் கவனித்து வருகிறார்.

ஆனால், தனது பங்களிப்பாக இளைஞர்களுக்கு வழி விடுவோம் என தொடர்ந்து ஒவ்வொரு நாளுமாக 25 கடிதங்களை எழுதுகிறார் கலைஞர். அந்த கடிதங்கள் அனைத்திலும் உலக வரலாறு, நீதிக்கட்சி வரலாறு,

மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், பிடல் காஸ்ட்ரோ, சே குவேரா, நெல்சன் மண்டேலா, சாக்ரடீஸ், மா சேதுங், வால்டேர், ரூசோ, ஆபிரகாம் லிங்கன், பகத்சிங் என உலகத் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு, தமிழ்நாட்டின் சுதந்திரப் போராட்டங்கள், சமூக நீதி வரலாறு என எல்லாவற்றையும் ஒரு மீள்பார்வையை சித்திரமாக உடன்பிறப்புகளுக்குக் கொண்டு செல்கிறார்.

**'உடன்பிறப்பே' என தொடங்கும் கடிதங்களை எழுதுவதற்கு முன்னரே, அன்பு நண்பா என்கிற சொற்றொடரை பயன்படுத்தி இருக்கிறார். சில நாட்கள் தொடர்ச்சியாகவும், சில நாட்கள்இடைவெளி விட்டும் வெளிவந்துள்ளன. ஒரே நாளில் 2 கடிதங்களும் எழுதி இருக்கிறார்.**

2008 ஆண்டில் திருமங்கலம் இடைத்தேர்தலை சந்திக்க இப்படி அழைப்பு விடுக்கிறார். "நம் நெஞ்சில் நெருப்பு மூட்டிடுவோர் உனக்கு உருவாக்கியுள்ள ஆத்திரம் அதன் விளைவைக் காணத்தான் நான் அச்சம் கொண்டு, அன்பு உடன்பிறப்பே அண்ணா தந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் முக்கணைகளையும் பயன்படுத்தி பலன் காண, பகை முகாம் நோக்கி பணியாற்றிட கிளம்புக என அழைக்கிறேன் (15.12.2008) இதையே சற்று முன்னோக்கிச் சென்றால், 1976 ஆட்சிக் கலைப்புக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், "உடன்பிறப்பே நீ வா நம் பயணத்தைத் தொடருவோம். கோழைகள் விலகட்டும், வீரர்கள் என் பின் தொடரட்டும்" என இலட்சிய முழக்கம் செய்கிறார். ஆட்சி கலைக்கப்பட்ட அடுத்தத்த நாட்களில், தொண்டர்களின் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தும் நடையை வெளிப்படுத்தி இருக்கிறார்.

"ஒரு சிற்றூர் கிளையிலே நடைபெறுகிற நிகழ்ச்சிக்கூட என் காதிலே விழக்கூடிய அளவுக்கு நான் உன்னோடு நெருக்கமாக இருக்கிறேன் என்பதை மறந்துவிடாதே" "சிறையில் வாடும் ஆருயிரே, உன்னுடன் நானும் இருப்பதாக எண்ணிக்கொள்" இப்படியான உரையாடல்களை எந்த தொண்டனும் எளிதாக புறந்தள்ளிவிட முடியாது.

"தம்பி நம்மை நாமே அழித்துக்கொண்டால் தவிர, வேறு யாரும் நம்மை அழிக்க முடியாது" என்கிற எச்சரிக்கை உணர்வும் அவரது கடிதங்களின் அடிநாதமான இழை என பார்க்கலாம்.

தி.மு.க. மட்டுமல்ல, உலகின் எந்த அரசியல் இயக்கத்துக்கு அந்த சொற்டொடர் பொருந்தும்.

ஆனால், கோடிக்கணக்கான தொண்டர்களை வழி நடத்த உள்ளும் புறமுமான உரையாடலை கலைஞரின் கடிதங்கள் நிகழ்த்தி இருக்கிறது என்பது வரலாற்றின் சான்றாதாரங்களில் நிலைபெற்று நிற்கும்.

## தி.மு.க. நெசவாளர் அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்! (நான்காவது பட்டியல்)

## தி.மு.க. நெசவாளர் அணித் தலைவர் நன்னியூர் இராஜேந்திரன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. நெசவாளர் அணி அணியின் மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### கோவை தெற்கு மாவட்டம்

தலைவர் - எஸ்.குணசேகரன், எண்,1/231 ஏ, பள்ளிக்கூட வீதி, குள்ளக்காபாளையம், பழனிக்கவுண்டன் புதூர் (அஞ்சல்) , பொள்ளாச்சி 642002, கோயம்புத்தூர் மாவட்டம்

துணைத் தலைவர் - கே.ஈஸ்வரன், எண்,4/89, சின்ன வதம்பச்சேரி, சுல்தான்பேட்டை, சூலூர், கோயம்புத்தூர் மாவட்டம்

அமைப்பாளர் - **வாகை பூபதி ,** எண்,37(1), வி.ஆர். நகர், அம்மன் நகர் (பின்புறம்), சின்ன மோப்பிரிபாளையம், வாகராயம்பாளையம், சூலூர் 641659, கோயம்புத்தூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ஆர்.கணேசன், எண்,2/117சி, கிணத்துக்காடு, வடுகபாளையம், கிட்டாம்பாளையம், சூலூர், கோயம்புத்தூர் மாவட்டம் எம்.வி.ஜெயக்குமார், எண்,7/8/2, செயின்ட் பால்சன் நகர், மகாலிங்கபுரம், பொள்ளாச்சி 642002, கோயம்புத்தூர் மாவட்டம் ந.தேவராஜ், எண்,375, மாகாளியம்மன் கோவில் அருகில், மாச்சேகவுண்டன்பாளையம், சீரபாளையம், ஈச்சனாரி 641021, கோயம்புத்தூர் மாவட்டம் ஏ.காளிமுத்து, எண்,2/68, காளியண்ணன் புதூர், கோவில்பாளையம் (அஞ்சல்), கிணத்துக்கடவு 642114, கோயம்புத்தூர் மாவட்டம் ஜி.ரகுபதி, எண்,5/140, ஜலத்தூர் சௌண்டம் கோவில் வீதி, தேவம்பாடி வலசு, பொள்ளாச்சி - 642005 கோயம்புத்தூர் மாவட்டம்

### கோவை மாநகரம்

தலைவர் - பி.விஸ்வநாதன், எண்,64, கிருஷ்ணம்ம நாயுடு வீதி, ஒண்டிப்புதூர், கோயம்புத்தூர் 641016,

துணைத்தலைவர் - பி.பாலு, எண்,53, கோகுல் காலனி 7வது வீதி, பாப்பநாயக்கன்புதூர், கோயம்புத்தூர் 641041,

அமைப்பாளர் - **வி.மணி ,** 5 வது வீதி, பெரியார் நகர், வடவள்ளி, கோயம்புத்தூர் 641041,

துணை அமைப்பாளர்கள் - டி.பாலசந்திரன், எண்,75ஏ பட்டாளம்மன் கோவில் வீதி2, பீளமேடு, கோயம்புத்தூர் 641004 எஸ்.சுந்தர், எண்,761, இடையர் வீதி, கோயம்புத்தூர் , உமாபதி, எண்,56, தெப்பகுளம் வீதி எண்1, உப்புக்கார சந்து, கோயம்புத்தூர் 641001 ந.கருணாநிதி, எண்,10, திரு.வி.க.வீதி, கணபதி, கோயம்புத்தூர் 641006 கே,தனராஜ், எண்,6, அமிர்தா அவென்யூ, நல்லாம் பாளையம், கணபதி, கோயம்புத்தூர்

### கோவை வடக்கு மாவட்டம்

தலைவர் - பி.கணேஷ் மூர்த்தி, எண்,6/325, நீலாம்பதி, தோலம்பாளையம், காரமடை, கோயம்புத்தூர் மாவட்டம் 641104,

துணைத்தலைவர் - ஏ.சுப்பிரமணியம், எண்,14/43ஏ, சுண்டக்காமுத்தூர் மெயின் ரோடு, ஐயப்பன் கோவில் அருகில், இந்தியன் பேங்க் காலனி சுண்டக்காமுத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம்

அமைப்பாளர் - **ஆர்.நடராஜன் ,** எண் ஏ 29, அண்ணா நகர், இடையர்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - ஆர்.ஆனந்தகுமார், எண்,9/50, கே.என்.ஜி. புதூர், ஜி.என்.மில்ஸ், கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் மாவட்டம் பி.நந்தகுமார், எண்,22/7, வீராசாமி கிழக்கு, கிச்சகத்தியூர், சிறுமுகை கோயம்புத்தூர் மாவட்டம் 641302, குட்டையூர் சுந்தர்ராஜன், எண்,3/1ஏ, தொட்டபாவி, ஜடையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம் ஆ.மகாசிவ சுப்பிரமணியம், எண்,144/2, கிழக்கு வீதி, சாமிசெட்டிபாளையம் (அஞ்சல்) கோயம்புத்தூர் மாவட்டம் ஸ்ரீதர், எண்,6/2 , பாதர் ராண்டி வீதி, ஆர்.எஸ்.புரம், கோயம்புத்தூர் மாவட்டம் 641002

### சென்னை தென்மேற்கு மாவட்டம்

தலைவர் - ராஜி (எ) என்.கே.கே கிருஷ்ணராஜ், எண்,56/64, ராமலிங்கஈஸ்வர் கோயில் தெரு, தேனாம்பேட்டை, சென்னை 600018,

துணைத்தலைவர் - ஜெ.புகழேந்தி, எண்,48/17, ஆலயம்மன் கோயில் தெரு, வன்னிய தேனாம்பேட்டை, சென்னை 600018,

அமைப்பாளர் - **கே.வெங்கட்ராமன் ,** எண்,11/6, ஸ்கூல் ரோடு, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை 600035,

துணை அமைப்பாளர்கள் - எஸ்.குமார் எண்,24/1, காமராஜர் சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600028, ஈ. ஞானபிரகாஷ், எண்,75/106, தெற்கு கேசவ பெருமாள்புரம் கீரின்வேஸ் சாலை, சென்னை 600028, அ.செ.புகழேந்தி , எண்,27/49, ஏரிக்கரை தெரு, மேற்குமாம்பலம், சென்னை 600033 எஸ்.செந்தில், எண்,6, இறை இல்லம், 89 வது தெரு, அசோக் நகர் சென்னை 600083 மோகனா கிருஷ்ணன், எண்,8/17 , மஹாலஷ்மி தெரு, தியாகராய நகர், சென்னை 600017, எஸ். கோவிந்தராஜ், எண்,7/2, போஸ்டல் காலனி, தியாகராய நகர், சென்னை 600017, என்.இளங்கோவன், எண்,5/8, சையத் நசிமுல்ல தெரு, மைலாப்பூர், சென்னை.

### சென்னை வடக்கு மாவட்டம்

தலைவர் - எஸ்.ஜெ.ராமு (எ) ஜெய் எண்,17/3 மெயின் தெரு, டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர், கொருக்குப்பேட்டை, சென்னை - 600021,

துணைத்தலைவர் - எம்.கே.குணசேகரன் எண்,846, 19வது தெரு, பி.வி.காலனி வியாசர்பாடி சென்னை - 600039,

அமைப்பாளர் - **கார்த்திக் செங்குட்டுவன்** எண்,10,சோமு செட்டி தெரு, 2வது தெரு இராயபுரம்,, சென்னை - 600013,

துணை அமைப்பாளர்கள் - பி.முருகன் எண்,40/41, திருச்சி சின்னசாமி தெரு, அண்ணாநகர் கொருக்குபேட்டை, சென்னை - 600021, எம்.இராமசாமி எண்,2/1 திருத்தங்கல் நகர், கொடுங்கையூர், சென்னை - 600118, ஆர். இளையராஜா எண்,16/40, தெலுங்கு தெரு, பழையவண்ணாரப்பேட்டை, சென்னை - 600021, ஆர்.முத்து ராமன் எண்,330, 6வது தெரு, பக்தவச்சலம் காலனி, வியாசர்பாடி, சென்னை - 600039, தே. கண்ணன் எண்,11/3, முதல் தெரு, தங்கவேல் தோட்டம், கொருக்குப்பேட்டை, சென்னை - 600021,

### திருவள்ளூர் மேற்கு மாவட்டம்

தலைவர் - சி.எம்.ரவி, எண்,3/39, காந்தி சாலை, அம்மையார்குப்பம், திருவள்ளூர் மாவட்டம்,

துணைத்தலைவர் - எம்.ஜோதிராமலிங்கம் கொசவன்பாளையம், திருப்பாச்சூர், திருவள்ளூர் மாவட்டம்,

அமைப்பாளர் - **இ.கே.உதயசூரியன்** நல்ல தண்ணீர் குளம் தெரு, பொதட்டூர்பேட்டை, திருவள்ளூர் மாவட்டம்,

துணை அமைப்பாளர்கள் - ப. கருணகரன் திருவள்ளூர் நகரம் திருவள்ளூர் மாவட்டம், டி.குமரேசன் தோப்பு தெரு, அத்திமாஞ்சேரி பேட்டை, திருவள்ளூர் மாவட்டம், எம்.கே.ராமசந்திரன் எண், 3/1393, காந்தி தெரு, அத்திமாஞ்சேரி பேட்டை, பள்ளிப்பட்டு வட்டம், திருவள்ளூர் மாவட்டம், த.தணிகாசலம் திருத்தணி நகரம், திருவள்ளூர்மாவட்டம்,வி.எல்.ராஜாபஜார்தெரு,பொதட்டூர்பேட்டை, திருவள்ளூர் மாவட்டம், பி.ஜி.சிவகுமார் பொன்னியம்மன் கோயில் தெரு, பொதட்டூர்பேட்டை, திருவள்ளூர் மாவட்டம், வி.எஸ்.சிங்காரம் அம்மையார்குப்பம், திருவள்ளூர் மாவட்டம், என்.வி.வெங்கடேசன் வங்கனூர், திருவள்ளூர் மாவட்டம், திருநாவுக்கரசு அம்மையார்குப்பம், திருவள்ளூர் மாவட்டம், எஸ்.ஆர்.ரவி பஜார் வீதி, அம்மையார்குப்பம், திருவள்ளூர் மாவட்டம், வெங்கடேசன் எண்.1/104, காமராஜர் தெரு, மத்தூர், திருவள்ளூர் மாவட்டம்.

### திருநெல்வேலி மத்திய மாவட்டம்

தலைவர் - வி.பி.பெரியதுரை No.265, சித்திவிநாயகர் கோயில் தெரு, சங்கர்நகர் - 627357

துணைத்தலைவர் - டி.சுடலைமுத்து, No.24, சித்ரஞ்சன் தெரு, திருநெல்வேலி

அமைப்பாளர் - **டி.அசரியா ஸ்டிபன்** No. 6/61, காமராஜ் தெரு, எம்.கே.பி. நகர் பாளையங்கோட்டை, திருநெல்வேலி

துணை அமைப்பாளர்கள் - என்.பாலகிருஷ்ணன் No.4/84, தெற்குதெரு, குன்னத்தூர், விளாகம் திருநெல்வேலி டவுன், டி. பால்துரை No.107/5, கீழத்தெரு, பள்ளமடை, மானூர், திருநெல்வேலி எஸ். ரவி No.22, டிரைவர் காலனி, கிழக்கு தெரு, திருநெல்வேலி இ.கே. ரகுமான் ஷா No.37எ/12எ, ஞானியார் அப்பா நகர், 6வது தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி, ஆர்.செல்வம் No.3எ/15, பிள்ளையார் கோயில்தெரு, வெள்ளான்குளம்.

### திருநெல்வேலி மாநகரம்

தலைவர் - எஸ்.லெட்சுமணன் 29, காமாட்சி அம்மன் கோயில் தெரு திருநெல்வேலி டவுன்

துணைத்தலைவர் - தமிழரசன் பெருமாள் கோயில் தெரு, திருநெல்வேலி டவுன்

அமைப்பாளர் - **பி.ஆறுமுகம்** 82, செங்குந்தர் நடுத்தெரு, திருநெல்வேலி டவுன்

துணை அமைப்பாளர்கள் - ஆயூப்கான் 137/46, எக்கின் பிள்ளை தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி எம். விக்டர் தாமஸ் 21/117, தெற்கு தெரு, ஆரோகியநாதபுரம், திருநெல்வேலி கே.கணேசமூர்த்தி 9/5, முனியன் கோயில் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி, வினோத் பாண்டியன், டி. என்.எச்.பி.காலனி, பெருமாள்புரம், திருநெல்வேலி, செந்தில் 95, பாலாஜி அவென்யூ 3 வது தெரு தச்சநல்லூர், திருநெல்வேலி.

### நாகர்கோவில் மாநகரம்

தலைவர் - தா.ஸ்டீபன், எண்,84, ஜார்ஜியார் தெரு, தளவாய்புரம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் 629004,

துணைத்தலைவர் - மோ.அலெக்ஸாண்டர், எண்,88/3, குமரி நெசவாளர் காலனி, வெட்டூர்ணிமடம் அஞ்சல், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் 629003,

அமைப்பாளர் - **த.கிங்ஸிலி ஜெபசிங்,** எண்,104எ /5, ஸ்காட் நகர், நெசவாளர் காலனி, வெட்டூர்ணிமடம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்,

துணை அமைப்பாளர்கள் - சு.அல்லி (எ) இராமசந்திரன், செல்வின் தெரு, பள்ளிவிளை, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம், தா.மாதேவன் எண்,23/1,தளியபுரம் ஒற்றைத் தெரு, வடசேரி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் 629001, நா.ஆறுமுகம், எண்,32/42, சோழராஜா கோவில் தெரு, வடசேரி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் 629001, ச.நாகராஜன், எண்,35/29,பிராணோபகாரி தெரு, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம், சு.ஐய்யப்பன், எண்,4/122,சி.டி.எம். புரம், பறக்கை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.

### திண்டுக்கல் மாநகரம்

தலைவர் - எஸ்.கே.சத்தியமூர்த்தி ஸ்ரீபாண்டிநகர், டிப்போ ரோடு, பாரதிபுரம், நாகல்நகர், திண்டுக்கல்

துணைத்தலைவர் - கே.ஆர்.கண்ணன், ஏ.16, அய்யா கண்ணு பிள்ளை நாகல் நகர், திண்டுக்கல்

அமைப்பாளர் - **கே.ஜீவன்,** 23/13, சௌராஷ்ட்ராபுரம் 2 வது சந்து, நாகல் நகர், திண்டுக்கல்

துணை அமைப்பாளர்கள் - கி.பாஸ்கர் 1, மெங்கில்ஸ்ரோடு, நாகல் நகர், திண்டுக்கல் வி.ஆர்.ஈஸ்வரன், கே.எம்.எஸ்.நகர், பாரதிபுரம், திண்டுக்கல் நா.தேவதாஸ், கே.எம்.எஸ்.நகர், பாரதிபுரம், திண்டுக்கல் ஜெ.அலெக்ஸ் பிரபு, 141, கிழக்கு மரியநாதபுரம், திண்டுக்கல் அ.முஹம்மது ஹாரூன், 5, மாதர்சா சந்து, மக்கான் தெரு, திண்டுக்கல்

### சென்னை மேற்கு மாவட்டம்

தலைவர் - மு.வெங்கடேசன் எண் 134, 'ஜி' பிளாக், லாக் நகர், சேப்பாக்கம், சென்னை - 600 005,

துணைத்தலைவர் - ஏ.வ.பாலகிருஷ்ணன், கதவு எண்,31/2, பூம்புகார் தெரு, இராணி அண்ணாநகர், அரும்பாக்கம், சென்னை - 600106,

அமைப்பாளர் - **என்.அரவிந்த குமார்** எண்,135, ' டி' பிளாக், ஆர்.வி.நகர் மெயின்ரோடு, அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600102,

துணை அமைப்பாளர்கள் - ஜே.எம்.மணிவண்ணன், எண்,60/75, வரதராஜபுரம், தேனாம்பேட்டை, சென்னை - 600018, மு.க.மூர்த்தி (எ) மு.கிருஷ்ணமூர்த்தி எண்,19, சிவராஜபுரம், திருவல்லிக்கேணி, சென்னை - 600005, டி. கண்ணன் எண்,20, பாலு முதலி தெரு, தியாகராயநகர், சென்னை - 600017, வி.பி.காளிஸ்வரன், எண்,32/45, அருணாச்சலம் தெரு, சேப்பாக்கம், சென்னை - 600005, டபுல்யூ. தாஸ் எண்,9/7, கிரியப்பா ரோடு, தியாகராயநகர், சென்னை - 600017, ஆர்.தி. குமாரன் 'என்' பிளாக்,எண்.15,பிரேம் நகர் காலனி, தெற்கு போக் சாலை, தியாகராயநகர், சென்னை - 600017, பி.வினோத்குமார் 32/51, பி.வி.கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை600014 ஆர்.ஜி.ராகவநாயகம் 422/3, கீழ்பாக்கம் கார்டன் சாலை சென்னை 600010 கி.வாசுதேவன் எண்.11/29, தெற்கு போக் சாலை, தியாகராயநகர், சென்னை - 600017.

### திருவள்ளூர் மத்திய மாவட்டம்

தி.மு.க. நெசவாளர் அணியின் மாவட்டத் தலைவராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட என். சண்முகம் அவர்களை பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, **வி. ராஜேந்திரன்** (வயலானல்லூர், பூவிருந்தவல்லி) அவர்கள் **மாவட்ட நெசவாளர் அணி தலைவராகவும்,**

மாவட்ட அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட சங்கர் அவர்களை பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, **என். சண்முகம்** (சென்னீர்குப்பம், பூவிருந்தவல்லி) அவர்கள் **மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும்,**

மாவட்ட துணை அமைப்பாளராக ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஸ்ரீதர் அவர்களை பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, **எம். சுடலைமணி** (செல்வகணபதி நகர், திருவேற்காடு) அவர்கள் **மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளராகவும்** நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட நெசவாளர் அணி நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 01-09-2023

**நன்னியூர் இராஜேந்திரன்**
தலைவர்
தி.மு.க. நெசவாளர் அணி

---

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று

# காஞ்சிபுரத்தில் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

## தொடக்க விழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது!

*காஞ்சிபுரம், செப்.3-*

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15அன்று அண்ணா பிறந்த ஊரான காஞ்சிபுரத்தில் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார். இத்தொடக்க விழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் காஞ்சிபுரத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கு விழா நடைபெறும் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள அடிப்படை வசதிகள் மற்றும் அவர்களுக்கு வந்து செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் மற்றும் தீயணைப்புத் துறை, மின்சாரத் துறை மற்றும் சுகாதாரத் துறை ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் விவரம் குறித்து கேட்டறிந்தார். மேலும் போக்குவரத்து நெரிசலில் பொதுமக்கள் யாவரும் பாதிக்கப்படாத வகையில் சிறப்பு விருந்தினர்கள் வரும் வழியினை ஏற்படுத்தி தருமாறு காவல் துறையினருக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வை தொடர்ந்து கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் விழா நடைபெற இருக்கும் இடத்தினை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பார்வையிட்டு, பத்திரிகையாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்த வாக்குறுதியை நிறை வேற்றும் வண்ணம் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கப்படும் திட்டத்தினை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 15 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே நேரில் வருகை புரிந்து இந்த திட்டத்தினை தொடங்க இருப்பதை முன்னிட்டு, விழா நடைபெறும் இடத்தினை தேர்வு செய்து மேடை அமைக்கபடவுள்ள இடத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில், செப்டம்பர் 15ஆம் தேதி காலை 10.00 மணியளவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் வந்து இச்சிறப்பு வாய்ந்த திட்டத்தினை அவர்கள் திருக்கரங்களால் இத்திட்டம் வெகுவிமர்சியாக தொடங்கப்படவுள்ளது. இந்த திட்டம் பொதுமக்களிடம் குறிப்பாக தாய்மார்களிடம் பெரும் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது என குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர்கள் க.சுந்தர், கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.எம்.சுதாகர், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சா.செல்வ குமார், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், ஒன்றியக் குழுத்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.



---

6-ஆம் ஆண்டு நினைவு நாள்!

### அனிதாவின் திருவுருவச் சிலைக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் மரியாதை!

*அரியலூர், செப்.3-*

அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி, குழுமூர் கிராமத்தை சேர்ந்த நீட் எதிர்ப்பு போராளி அனிதா அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு,

"அனிதா நினைவு நூலகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு" மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்தினார்.

பேராசிரியர் அருண், ஒன்றிய கழக செயலாளர்கள் பூ. செல்வராஜ், வி.எழில்மாறன், அனிதாவின் தந்தை சண்முகம், சகோதரர் மணிரத்தினம், மாவட்ட பிரதிநிதி கோடி, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் சுமதி கருணாநிதி, மாவட்ட அணிகளின் பொறுப்பாளர்கள் செல்வம், தர்மராஜ், தமிழ்மாறன், ஆசைதம்பி, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரமணி மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

---

# காலை உணவும் கனவு இல்லமும்

## 'கணையாழி' தலையங்கம்

இரக்ஷ பந்தன்
பாசக் கயிறும் கையுமாகப்
பள்ளி மாணவர்களோடு
பிரதமர் படம் எடுத்துக்
கொண்டிருக்கிறார்!
இங்கே
பள்ளி மாணவர்கள் வயிற்றில்
பால் வார்த்துக் கொண்டிருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!

காலை உணவுக் கவலைகளோடு
கண்விழிக்கும் பெற்றோர் மனதிலும்
குழந்தைகளின் எதிர்காலத்திற்கு
நம்பிக்கை விதைந்திருக்கிறார்!

இமயத்தில் முன்பு
வில், கயல், புலி என்று வரலாற்றின் பதிவு!
சந்திரயான் இறங்கிய இடத்தில்
சிவசக்தி இப்போது!

பரமசிவன் தலையில் நிலா
நிலாவின் தலையில் சந்திரயான்!

பார்த்து மகிழும் உயிரினங்கள் கோடிக் கணக்கில்!
ஆனாலும்
பார்க்கப்படும் நிலா ஒன்றே ஒன்றுநான்!

தொடர்கிறது
நிலவைத் தாண்டி
சூரியனைத் தொடும் பயணம்!

மனித குலம் கண்திறந்த காலம் முதல்
கவர்ச்சியாய்ப் பார்த்த நிலா!
வடை சுட பாட்டி குடியேறிய நிலா!
பனியில் நனைந்து காதல் வளர்க்கும் பால் நிலா!
அத்திக்காய் காய் காய் என்று
அனல் சமக்கும் பிரிவில்
காதலியைக் கெஞ்ச வைக்கும் நிலா!
பாரி மகளிருக்குத்
தந்தையை நினைக்கவைத்த
அற்றைத் திங்கள் அவ்வெண் நிலா!

நிலா! இரவின் அரசி!
வானத்தில் கோட்டை கட்டி
மேகத்தில் ஒளிந்து ஓடி
முகம் காட்டும் காலம் காட்டி!
வளர்பிறை தேய்பிறையான
வாழ்க்கையின் ஆசிரியர்!
தன் இருட்டுப் பகுதியை
யாருக்கும் காட்டாமல்
அடுத்தவர் இருட்டை வெளிச்சமாக்கும்
அதிசயப் பிறவி!
புயல், வெள்ளம், நில நடுக்கம்
சுனாமி என்ற வன்மங்கள் எதுவுமின்றி
அன்பின் குளிரில்
உலகை மலர வைக்கும்
அழகின் வெளிச்சம்!
முழுநிலவில் தனிநடைப் பயணத்தில்
கூடவே நடக்கும் வழித்துணை!
புவி ஈர்ப்பில் கால் இருக்கக்
கண்களை ஈர்க்கும் வெளிச்ச ஈர்ப்பு!!
நிலா!
பிரபஞ்சத்தில்
பூமிக்குப் பக்கத்து வீடு!
சூரியனைச் சுற்றிவரக்
கிடைத்திருக்கும் தோழமை!
எல்லைக் கோடுகளால்
கிழிக்கப்படாத உலகம்!
சூரியன், நிலா, உண்மை மூன்றும்
மறைத்து வைக்க முடியாதவை என்று
புத்தர் சொல்கிறார்!
குழந்தைகள் விளையாட
நிலாவைக் கூப்பிட்டது
பிள்ளைத்தமிழ் அம்புலிப் பருவம்!
நிலாவைக் கூப்பிட்ட
குழந்தைக்குச் சோறு ஊட்ட
அம்மாவின் பாசத்தில்
இப்போதும் நிலாச் சோறு!
இராமாயணப் போர்க்களத்தில்
தலையில்லாமல் கிடத்த
இந்திரசித்தைப் பார்த்து
சிறுவனாய் இருந்த போது
நிலவை வா என்று அழைத்து
அஞ்சி அஞ்சி வந்த நிலவைக்
கையில் பிடித்து அதில் இருந்த
களங்கத்தைத் துடைத்ததைச்
சொல்லிச் சொல்லிப் புலம்புகிறாள்
மண்டோதரி!

கோசலை இடுப்பில்
குழந்தையாக இராமன்
வானத்தில் முழு நிலா
நிலாவைக் காட்டி உணவூட்டுகிறான்!
கையில் நிலாவைப்
பிடித்துத்தரச் சொல்லிச்
சாப்பிடாமல் அடம் பிடிக்கிறது
குழந்தை இராமன்!
சமாதானம் செய்ய முடியாமல்
தவிக்கிறார்கள்.
கைகேயி எழுந்து போய்
கண்ணாடியோடு வருகிறான்.

முகம் பார்க்கும் கண்ணாடியை
இராமன் கையில் கொடுக்க
கையில் உள்ள
கண்ணாடியில் நிலாவைப் பார்த்து
எனக்கு நிலவு கிடைத்துவிட்டது
என்ற கொண்டாட்டத்தில்
இராமக் குழந்தை சாப்பிட்டது என்று
கம்பனும் வால்மீகியும் சொல்லாத
கதையைச்
செயற்கை நுண்ணறிவும் சொல்கிறது.

இந்திரசித்
கையில் நிலாவைப் பிடித்துக்
களங்கத்தைத் துடைத்திருக்கிறார்!
கையில் கொடுத்த
கண்ணாடியில் நிலவைக் காட்டி
இராமருக்கு உணவு
கொடுத்திருக்கிறார்கள்!


முன்பு நிலாவைக் காட்டி
உணவு கொடுத்தார்கள்!
இப்போதும் நிலா இருக்கிறது!
குழந்தைகள் இருக்கிறார்கள் பசியோடு!

இதோ! குழந்தைகள் வயிற்றில்
பசி நெருப்பை அணைக்கப்
பால் வார்த்திருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!

இப்போது நிலவில் சந்திரயான்!
சந்திரயானைக் கேட்க வேண்டும்
அங்கிருந்து பூமியைப் பார்த்தால்
மாணவர்களுக்கு உணவு ஊட்டும்
முதல்வர் தெரிகிறாரா?

பார்த்துப் பார்த்து வளர்ந்த நிலா
மாறிக்கொண்டு வருகிறது
மனித குலம்
வாழ்ந்து பார்க்கத் துடிக்கும்
கனவு இல்லமாக!

இதோ
மாற்றிக்கொண்டு வருகிறது
முதல்வரின்
காலை உணவுத் திட்டம்
பள்ளிக் கூடத்தையே மாணவர்களின்
கனவு இல்லமாக!



**ம.ரா.**

**நன்றி**
**கணையாழி - செப்டம்பர் 2023**



கலைஞர் 100
1924 - 2023
முத்தமிழறிஞர், தலைவர்
டாக்டர். கலைஞர்
நூற்றாண்டு விழா
அகில இந்திய அளவில் ஆண்கள்
மற்றும் பெண்கள் கபாடிப் போட்டி
நாள் : 03.09.2023 ஞாயிற்றுக்கிழமை
இடம் : தி.ஆலை மைதானம், வீரப்பன் PET நினைவுத் திடல், மணப்பாறை
விழாவிற்கு வருகை தரும்
மாண்புமிகு. கே.என்.நேரு அவர்கள்
கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. தயாநிதி மாறன் MP., அவர்கள்
விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில செயலாளர்
மாண்புமிகு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA., அவர்கள்
தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர்
வருக! வருக!
திரு. C.ராமசாமி B.Sc.,
ஒன்றிய கழக செயலாளர்
மணப்பாறை ஒன்றிய தி.மு.கழகம்
திருச்சி தெற்கு மாவட்டம்




கலைஞர் 100
1924 - 2023
முத்தமிழறிஞர் டாக்டர்.
கலைஞர் அவர்களின் 100
நூற்றாண்டு விழா
மாநில அளவிலான கை பந்து போட்டி
நாள் : 03.09.2023 ஞாயிற்றுக்கிழமை – இடம் : ஜமால் முகம்மது கல்லூரி
விழாவிற்கு வருகை தரும்
மாண்புமிகு. கே.என்.நேரு அவர்கள்
கழக முதன்மைச் செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்
திரு. தயாநிதி மாறன் MP., அவர்கள்
விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில செயலாளர்
மாண்புமிகு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி MCA., அவர்கள்
தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர்
வருக! வருக!
டால்பின் A.J.சாலமன் B.Sc., மாவட்ட அமைப்பாளர்
Dr. M.ராஜேந்திரகுமார் மாவட்ட துணை அமைப்பாளர்
K.கௌதம் மாவட்ட துணை அமைப்பாளர்
M.நாகராஜன் மாவட்ட துணை அமைப்பாளர்
S.ரவீந்தரநாத் மாவட்ட துணை அமைப்பாளர்
சிவா நாகராஜன் MBA., மாவட்ட துணை அமைப்பாளர்
K.லோகநாதன் மாநகர அமைப்பாளர்
R.பஷீர் அஹமது BA.,NIS மாநகர துணை அமைப்பாளர்
G.பிரபு மாநகர துணை அமைப்பாளர்
K.ஹரிஹரன் மாநகர துணை அமைப்பாளர்
M.R.மதன் மாநகர துணை அமைப்பாளர்
M.ராஜராஜன் மாநகர துணை அமைப்பாளர்
மாவட்ட, மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி – திருச்சி தெற்கு மாவட்டம்

# கலைஞரும் நானும் 34

**“அவருடைய அன்பும் பரிவும் அளப்பரியது. அவருடன் பழகும்போது நம்மிடம் மட்டும்தான் இவ்வளவு பரிவுடன் இருக்கிறார்போல என எல்லோரையுமே யோசிக்க வைக்கும் குணம் கொண்டவர். வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மக்கள், விளிம்புநிலை மக்கள் மீது அதீத அக்கறை கொண்டவர் கலைஞர்” எனத் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார், மருத்துவர் மோகன் காமேஸ்வரன்.**

■ டாக்டர் மோகன் காமேஸ்வரன்



## “பெற்றால்தான் பிள்ளையா என்றார்!”

“தமிழ்நாட்டின் மருத்துவ வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தவர் கலைஞர்தான். தனியார் மருத்துவமனைகளுக்கு நிகராக அரசு மருத்துவ மனைகளின் கட்டமைப்பினைக் கொண்டு வந்தவர். இன்றைக்கு சென்னையின் மருத்துவ வளர்ச்சிக்கு அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்பும் காரணம், அதை உருவாக்கியவர் கலைஞர்தான். மருத்துவத் துறை மட்டுமல்ல, மருத்துவர்கள் மீதும் தனிப்பட்ட அக்கறை கொண்டவர் அவர். அவருக்கு மருத்துவம் பார்த்த அத்தனை மருத்துவர்களிடமும் அவர் குறித்து, ஏராளமான அனுபவங்கள் உள்ளன.

### இலையால் சிக்கல்!

அவருக்கு உடல்நிலை சரியில்லாத நிலை இருந்தாலும், நகைச்சுவையான பேச்சுக்கு மட்டும் விலக்கு அளிக்கமாட்டார். ஒருமுறை சளித் தொந்தரவு இருக்கிறது என, வீட்டில் தூதுவளை ரசம், துவையல் என வைத்துக் கொடுத்துள்ளனர். அவை கொஞ்சம் அதிகப்படியாகி, கலைஞரின் தொண்டை வறண்டு புண்ணாகிவிட்டது. பேசக்கூட முடியவில்லை.

நான் மருந்துகள் கொடுத்துவிட்டு, “ஐயா நீங்க ஐந்து நாட்களுக்குப் பேசவே கூடாது. தண்ணி ஆகாரம்தான் எடுத்துக்கொள்ள வேண்டும்” எனக் கூறியிருந்தேன். ஐந்து நாட்களும் அவர் அவ்வாறே கடைப்பிடித்தார். புண் சரியாகிவிட்டது. “நாலு இலையைச் சாப்பிட்டேன். அதுக்கு இந்தப் பாடா?” என்றவர், “இரண்டு இலைக்கே பிரச்சினை இருக்கும்போது நாலு இலைக்கு வராதா...?” எனப் ‘பஞ்ச்’ வைத்தார். அந்த நிலையிலும் அவரது நகைச்சுவை உணர்வு நமக்கும் தனிப்பட்ட அனுபவமாக இருக்கும். அந்த மாதிரி நேரங்களில் அவரது கண்களில் தெரியும் குறும்புத்தனம் ரசிப்பதுபோல இருக்கும்.

### ஆங்கிலப் புலமை

மருத்துவர்கள் மீது தனி அன்பு கொண்டவர் கலைஞர். அதனால், என்னை அவ்வப்போது சீண்டிப் பார்ப்பது அவருக்குப் பிடிக்கும். தமிழைப் போல ஆங்கிலத்திலும் கலைஞர் புலமை கொண்டவர். ஆங்கில இலக்கிய வாசிப்பு கொண்டவர். ஒருமுறை பார்க்கும்போது, ஜார்ஜ் பெர்னாட்ஷா நூல் ஒன்றை வாசித்து விட்டு வைத்திருந்தார். அதில், “110-வது பக்கத்தை எடுத்துப் பாருங்க” என்றார்.

அதில், ‘மருத்துவர் நன்றாகப் பணி செய்தால், நோயாளிகள் சரியாகிவிடுவர். அதன் பின்னர் மருத்துவருக்கு வேலை இருக்காது. அதனால் நன்றாக வேலை செய்யாமல் இருந்தால்தான் மருத்துவருக்குப் பிழைப்பு கிடைக்கும்’ என்கிற வரிகளில் அடிக்கோடிட்டு வைத்திருந்தார். அதை வாசித்த நான், “ஐயா... நாங்க மட்டும் இல்லை, அரசியல்வாதிகளும் அப்படித்தான்” என ‘கமெண்ட்’ செய்தேன். அதை ரசித்தார். அவர் ஆட்சியின்போது தான் மருத்துவர்களுக்கான பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்தார். பணியின்போது, மருத்துவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் கிரிமினல் நடவடிக்கை எடுக்கலாம், என ஆணையிட்டார்.

### கருத்தை அறிவது

சிலநேரங்களில் சில திட்டங்கள் குறித்துப் பொதுக்கருத்தை அறிந்துகொள்ள அதுகுறித்துப் பேசுவார். சமத்துவபுரம் திட்டத்தின் போது, அதுகுறித்து அனைத்து முடிவுகளும் எட்டப்பட்ட போது, ஒருநாள் அதுபற்றிக் கருத்து கேட்டார்.

“ஐயா... ஏற்றத்தாழ்வு கொண்ட எல்லா சமூக மக்களும் ஒன்றாக இருப்பார்கள். அதேபோல, காது கேட்காத, கண் பார்வையில்லாத மாற்றுத்திறனாளிகள் ஒன்றாக இருக்க வழி இல்லையா? அவங்களும் இருந்தால், அது சமத்துவபுரமாக இருக்கும்”என்றேன்.

**சமத்துவபுரம் வீடுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 4 வீடு ஒதுக்கீடு செய்யுங்கள் என உத்தரவிட்டார். இதுதான் கலைஞர்.**

எனது கருத்தை ஏற்றுக் கொண்டவர், உடனடியாக, தலைமைச் செயலாளருக்கு போன் செய்து, சமத்துவபுரம் வீடுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 4 வீடு ஒதுக்கீடு செய்யுங்கள் என உத்தரவிட்டார். இதுதான் கலைஞர். கருத்து எங்கிருந்து வந்தாலும், அதில் சமூக நோக்கம் இருந்தால் உடனடியாக அதை எடுத்துக்கொண்டு அங்கீகரிப்பார்.

### அன்பின் பரிசாய் கடிகாரம்

அளவில்லாத அன்பு கொண்டவர் கலைஞர். அவரைச் சந்திப்பவர்கள் அவரின் பாசவலையில் சிக்கியே ஆகவேண்டும். அதில் நானும் ஒருவன்.

ஒருமுறை பேசிக்கொண்டிருக்கையில், “பெரிய மருத்துவமனை கட்டுறீங்க, எதுக்காக..? உங்கள் பிள்ளைகள்தான் யாரும் டாக்டர் படிக்கவில்லையே...” எனக் கேட்டார். அதற்கு நான், “ஐயா... நான் எனக்காகக் கட்டுகிறேன், அவங்களுக்காகக் கட்டவில்லை. எனக்குப் பின்னர் எனது அறிவுசார் குழந்தைகளுக்காகக் கட்டுகிறேன். நான் பெற்ற குழந்தைகளுக்காக அல்ல. பெற்றால்தான் பிள்ளையா” என்றேன். ‘சரி’ எனச் சிரித்துக் கொண்ட அவர், அப்போது எதுவும் சொல்லவில்லை.

அடுத்து மூன்று மாதம் கழித்து, என் பிறந்த நாளன்று வாழ்த்துப் பெறச் சென்றிருந்தேன். வாழ்த்தியதுடன், விலை உயர்ந்த கடிகாரத்தைப் பரிசளித்தார். “ஐயா... பரிசுப் பொருள் வேண்டாம், உங்கள் அன்பு போதும், அது எனக்குக் கிடைத்து விட்டது” என மறுத்தேன். உடனே அவர், “மூன்று மாதத்துக்கு முன்னாடி என்ன சொன்னீங்க... பெற்றால்தான் பிள்ளையா? எனக் கேட்டீங்கல்ல... இதுவும் அப்படித்தான்” என்றார். என்னால் அந்த அன்புக்கு ஈடாக எதையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அவர் பெறாத பிள்ளைகள் நிறையப் பேர் இருக்கிறோம் என்பதே அவரின் பெருமைதான்.

### அந்தச் செவிகள் கேட்கின்றன!

“என்னிடம் ஏன் எதுவுமே நீ கேட்பதில்லை” என்றார் ஒருநாள். “ஐயா கேட்பதற்கு இருக்கிறது. ஆனால், உங்ககிட்ட கேட்க பயமாக இருக்கிறது” என்றேன். “என்ன, என்ன பண்ணணும்?” எனக் கேட்டார். காது மருத்துவம் தொடர்பாக, ஒரு கோரிக்கையை வைத்தேன். “அப்படின்னா என்ன?” எனக் கேட்டார். நான் அவருக்கு ஒரு வீடியோ காட்டினேன்.

அதில், ஒரு வாய்பேச முடியாத குழந்தை சைகை மொழியில் பேசும். மற்றொரு குழந்தை போனில் பேசிக்கொண்டிருக்கும். அந்த வீடியோவைக் காட்டி, “ஐயா... இரண்டு குழந்தைகளுக்கும் பிறவியிலேயே காது கேட்காது, வாய் பேச முடியாமல் பிறந்தவர்கள். ஆனால், முதல் குழந்தைக்கு முறையான மருத்துவ உதவி இல்லை, இரண்டாவது குழந்தைக்கு மருத்துவ உதவி கிடைத்தது அதனால், குழந்தை பேசுகிறது” என்றேன். “ஏன் பண்ணவில்லை, என்ன செய்யணும்” என்றார். “இந்த மருத்துவம் செய்ய ஒரு குழந்தைக்கு ஆறு லட்சம் செலவாகும்” என்றேன். “சரி, செய்துவிடலாம்” என்றார்.

அப்போதிலிருந்து தமிழ்நாடு அரசின் சார்பில் காது, மூக்கு, தொண்டை அறுவை சிகிச்சையில் உயர் மருத்துவம் தொடங்கியது. இந்தியாவிலேயே முதல்முறையாகத் தொடங்கப்பட்டது. 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் அதில் பயன்பெற்றுள்ளனர். அவருடைய ஒரு கையெழுத்து பல குழந்தைகளின் தலையெழுத்தையே மாற்றியது. இந்தச் சிறப்பு மருத்துவம் தொடர்பாக, ஜெனிவாவில் நடைபெற்ற ஒரு மருத்துவ மாநாட்டில், கலைஞர் உருவாக்கிய இந்தத் திட்டம் குறித்து விளக்கினேன். அவரது படத்தை போட்டு, “இந்த மனிதர்தான் அந்தச் சாதனை செய்தார், அவர் எங்களின் தமிழ்த் தலைவர்!” என நான் விளக்கி முடித்ததும், மொத்த அரங்கமும் எழுந்து நின்று கைதட்டி அங்கீகரித்தது.

மருத்துவத்தின் மீது அவர் கொண்ட நம்பிக்கைக்கு, என்மீது காட்டிய அன்புக்கு என்னால் முடிந்த நன்றிக்கடன் அந்தப் பெருமையைத் தேடித் தந்ததுதான்.”

...பகிர்வார்கள்

## கவனம் பெற்ற காலை உணவு!



இந்தியாவுக்கே முன்மாதிரியாக, பள்ளிப் பிள்ளைகளுக்கு காலை உணவுத் திட்டத்தை அனைத்துப் பள்ளிகளுக்கும் அமல்படுத்தி உள்ளது நமது கழக அரசு. இந்தத் திட்டம் செயல்படுவதை அறிந்து வர, பிற மாநில அரசுகளும் தமிழ்நாட்டுக்குத் தங்கள் அதிகாரிகளை அனுப்பி வருகின்றன. இந்த நிலையில், இந்தத் திட்டம் எப்படிச் செயல்படுகிறது என நாம் அறிந்துகொள்ள அரசு பலவகைகளில் விளக்கியுள்ளது. அதேநேரத்தில் உணவு மதிப்புரை (Food Review) வழங்கும் பிரபல யூடியூபர்களும் காலை உணவுத் திட்டத்தினை அறிந்து சொல்ல முனைந்துள்ளனர். இதற்கு முன்னர் Tastee with Kiruthiga என்கிற யூ டியூபர் காலை உணவுத் திட்டத்தின் உணவினை குழந்தைகளுடன் அமர்ந்து சாப்பிட்ட வீடியோ தற்போது வேகமாகப் பரவி வருகிறது. ஒரு திட்டம் மக்களிடம் மிகப் பெரிய வரவேற்பினைப் பெறும்போது, தத்தமது வழிகளில் அதற்குப் பெருமை சேர்ப்பதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும் என்பதற்கு அந்தக் காணொலி சான்றாக உள்ளது. குழந்தைகளின் கற்றல் ஆற்றல் பெருக, அரசுக்குத் துணை நிற்போம்.

## ஃப்ளாஷ்பேக்



### சுற்றுப்பயணப் படம்!



ஸ்டாலின்

2004-ஆம் ஆண்டு, கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்த, இன்றைய முதலமைச்சரும் கழகத் தலைவருமான தளபதி அவர்கள் நெய்வேலிக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அவரைப் பார்க்க என் அப்பா செல்ல, நானும் கூட வருவதாய் அடம்பிடித்தேன். அப்போது நான்கு வயதே நிரம்பி இருந்த என்னை, என் அப்பா அழைத்துச் சென்றார். தளபதி அவர்கள் என்னிடம் படிப்பைப் பற்றி விசாரித்து, நன்றாகப் படிக்குமாறு வாழ்த்தினார். 20 ஆண்டுகள் கடந்தும் இப்புகைப்படத்துடனான நினைவு இன்னும் மங்காமல் அப்படியே இருக்கிறது.

-எஸ்.பி.ஸ்டாலின், நெல்லிக்குப்பம்.


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### வெண்மணி நிகழ்வு

**1968-ஆம் ஆண்டு டிசம்பர் 25-ஆம் நாள், தமிழ்நாட்டு வரலாற்றில் துயர சம்பவமாக கீழ்வெண்மணி நிகழ்வு நடைபெற்றது. அந்த அநாகரீக – அராஜகச் செயல் கேட்டு, பேரறிஞர் அண்ணா துடித்துப் போனார். அவரது உடல்நிலை சரியில்லாமல் கெட்டிருந்த நேரம். உணவு அருந்தவில்லை, உறக்கம் கொள்ளவில்லை. உடனடியாக அங்கு சென்று நிலைமையை அறிந்துவர, கலைஞர், சத்தியவாணிமுத்து, மாதவன் ஆகியோரை அனுப்பினார். சம்பவங்களுக்குக் காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார் அண்ணா.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 229




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.